
# திருச்சபை வரலாறு

## கி. பி. 1517 முதல் இக்காலம் வரை

ஜே. பா. அலெக்சாந்தர்



# திருச்சபை வரலாறு

## கி. பி. 1517 முதல் இக்காலம் வரை

ஜே. பா. அலெக்சாந்தர்

திருப்பணிவிடையாளர் இறையியனூல் வரிசை

Published for
**The C. S. I. Tamil Theological Series**
by Tamilnad Theological College, Tirumaraiyur
*Editor:* Rev. C. Selvamony, M.A., B.D., S.T.M.
*Associate Editor:* Rev. S. Daniel Abraham, B.D., S.T.M

First Printed 1968

Printed at Dass Press, Nazareth

# பதிப்பாசிரியர் உரை

திருச்சபை வரலாற்றினை தொடர்ச்சியாக மூன்று ஆண்டுகள் படிக்கக்கிடைத்தமை நாம் பெற்ற பேறுகும். அதனைப் படிக்கப் படிக்க திருப்பணிவிடையாளருக்கு தங்கள் பணியைக் குறித்ததான மகிழ்ச்சியும் பணியில் ஊக்கமும் பிறக்குமென்பதில் ஐயமில்லை.

இந்த மூன்றும் பகுதியில் திருச்சபை வரலாற்றின் பல முக்கிய சம்பவங்கள் இடம் பெற்றுள்ளன திருச்சபையின் விசுவாச, சாட்சி, சேவை வாழ்க்கையினை திருச்சபை மக்கள் புரிந்து கொண்டு செயலாற்றத் தூண்டப்பட்ட காலம் இதுவாகும். திருச்சபை தனது இன்றைய அமைப்பினை பெற்றதும் இக்காலத்தே. திருப்பணிவிடையாளர் யாவரும் தாங்கள் படித்து, சபையாருக்கும் கற்பிக்க வேண்டியவைகள் ஏராளம் இப்பகுதியில் உண்டு. படித்து பயனடைவார்கள் என நம்புகிறோம்.

முந்திய இருபகுதிகளையும் நூல்வடிவமாக நமக்கு ஆக்கிக் கொடுத்த கனம் ஜே. பா. அலெக்சாந்தர் ஐயரவர்களே இந்நூலையும் ஆக்கியுள்ளனர். இவர்கள் சென்னை பல்கலைக்கழகத்தில் B. A. பட்டம் பெற்று, பின் பெங்களூர் ஐக்கிய இறையியற் கல்லூரியில் பயின்று, செராம்பூர் பல்கலைக்கழக B. D. பட்டமும் பெற்ற பின்னர் பதினைந்து ஆண்டுகள் கன்னியாகுமரி அத்தியட்சாதீனத்தில் சபை குருவாகப் பணியாற்றினர். 1963 முதல் தமிழ்நாடு இறையியற் கல்லூரியில் பேராசிரியாகப் பணியாற்றி வருகின்றனர். *1964 — 1965*ல் அமெரிக்காவில் Andover Newton கல்லூரியில் M. A. பட்டமும் பெற்றுள்ளனர். திருச்சபை வரலாற்றுப் பேராசிரியராக தனது ஆராய்ச்சியினைப் பெரிதும் பயன்படுத்தி இந்நூலை எழுதித் தந்துள்ளனர்.

அவர்களுக்கு எம் நன்றி.

திருமறையூர்
டிசம்பர் 27, 1968

**சா. தானியேல் ஆபிரகாம்**
துணைப் பதிப்பாசிரியர்

# நூன்முகம்

திருப்பணிவிடையாளர் இறையியல் நூல் வரிசையில் திருச்சபையின் வரலாற்றை எழுதும் வாய்ப்பு கிடைத்தமையால் நன்றியுடையவனுயிருக்கிறேன். மூன்று நூல்களாக இதை எழுதியுள்ளேன். கி. பி. 1 முதல் 451 வரையுள்ள வரலாற்றை முதல் நூலிலும், கி. பி. 451 முதல் 1517 வரையுள்ள வரலாற்றை இரண்டாம் நூலிலும், கி. பி. 1517 முதல் தற்காலம் வரையுள்ள வரலாற்றை இம்மூன்றும் வெளியீட்டிலும் எழுதியுள்ளேன். இவ்வெளியீட்டில் சீர்திருத்த காலத்தைப்பற்றிய வரலாறும், மிஷனரி சேவைகளைப்பற்றிய வரலாறும், சபை ஒருமைப்பாட்டு முயற்சிகளைப்பற்றிய வரலாறும் இடம் பெறுகின்றன. அனைத்துலக திருச்சபையில் உண்டான முன்னேற்றங்கள் வியக்கற்பாலது. இச்சிறிய நூலில் எல்லாவற்றையும்பற்றி எழுதுவது கூடாதாயினும் கூறப்பட்டுள்ள முக்கியமான நிகழ்ச்சிகள் தற்கால திருச்சபை எத்தகைய அனுபவங்கள் மூலம் தற்காலத்திலுள்ள நிலையை அடைந்துள்ளதென்று அறிய பயனுள்ளதாயிருக்குமென்று நம்புகிறேன்.

இதனை எழுதுவதில் ஊக்கமளித்த மறைத்திரு S தானியேல் ஆபிரகாம் ஐயரவர்களுக்கும் என் உளமார்ந்த நன்றி உரித்தாகுக. திருப்பணிவிடையாளர்களுக்கு இந்நூலும் முன் வெளியான இரண்டு நூல்களும் திருச்சபை வரலாற்றை அறிவதில் பயனளிக்குமென்று நம்புகிறேன்.

**திருமறையூர்**
**கிறிஸ்மஸ், 1968** **ஜே. பா. அலெக்சாந்தர்**

# பொருளடக்கம்


| | | பக்கம் |
|---|---|---|
| | முகவுரை | |
| **1** | **சீர்திருத்த காலம்** | **1** |
| 1 | மார்ட்டின் லூத்தரின் சீர்திருத்தம் | 7 |
| 2 | ஜெர்மானிய சுவிட்சர்லாந்தில் சீர்திருத்தம் | 26 |
| 3 | பிரெஞ்சு சுவிட்சர்லாந்தில் சீர்திருத்தம் | 32 |
| 4 | இங்கிலாந்தில் சீர்திருத்தம் | 39 |
| 5 | ஸ்காத்லாந்தில் சீர்திருத்தம் | 47 |
| 6 | உரோமைச் சபையிலுண்டான சீர்திருத்தம் | 49 |
| 7 | சில புராட்டஸ்தாந்து பிரிவுகள் | 53 |
| 8 | ஜெர்மனியின் பக்தி இயக்கம் | 61 |
| 9 | மொரேவிய இயக்கம் | 62 |
| 10 | இங்கிலாந்தில் மெதடிஸ்ட் இயக்கம் | 64 |
| 11 | 19-ஆம் நூற்றூண்டில் இங்கிலாந்தில் தோன்றின வேறு சபைப் பிரிவுகள் | 70 |
| 12 | ஆப்பிரிக்காவில் சபை வளர்ச்சி | 77 |
| 13 | பலஸ்தீனுவில் சபை வளர்ச்சி | 77 |
| 14 | சீரியாவில் சபை வளர்ச்சி | 78 |
| 15 | ஆஸ்திரேலியாவில் சபை பரவுதல் | 78 |
| **2** | **மிஷனரி சங்கங்களின் காலம்** | |
| 1 | உரோமன் கத்தோலிக்க மிஷன் | 79 |
| 2 | சுவிசேஷப் பிரபல்ய சங்கம் | 79 |
| 3 | தரங்கம்பாடி மிஷன் | 80 |
| 4 | மொரேவியன் மிஷனரி ஊழியம் | 80 |
| 5 | பாப்டிஸ்ட் மிஷனரி சங்கம் | 80 |

பக்கம்

| | | |
|---|---|---|
| 6 | லண்டன் மிஷனரி சங்கம் | 80 |
| 7 | சபை மிஷனரி சங்கம் | 81 |
| 8 | அமெரிக்கன் அயல்நாட்டு மிஷனரி போர்ட் | 81 |
| 9 | வெஸ்லியன் மெதடிஸ்ட் மிஷனரி சங்கம் | 81 |
| 10 | ஸ்காத்லாந்து சபையின் மிஷனரி போர்டுகள் | 81 |
| 11 | பேசில் சுவிசேஷ மிஷனரி சங்கம் | 82 |
| 12 | டேனிஷ் மிஷனரி சங்கம் | 82 |
| 13 | பெர்லின் மிஷனரி சங்கம் | 82 |
| 14 | பாரீஸ் மிஷனரி சங்கம் | 82 |
| 15 | சீனு உள்நாட்டு மிஷன் | 82 |

**3 திருச்சபை ஒருமைப்பாட்டுக் காலம்**

| | | |
|---|---|---|
| 1 | மிஷனரி மாநாடுகள் | 85 |
| 2 | சபைகளின் அனைத்துலக ஆலோசனை மன்றம் | 87 |
| 3 | கிழக்கு ஆசிய கிறிஸ்தவ மாநாடு | 92 |
| 4 | இந்தியாவில் சுதேச கிறிஸ்தவ அவை | 93 |
| 5 | ஐக்கிய சபைகள் | 98 |
| 6 | வத்திக்கான் மன்றம் | 105 |

# திருச்சபை வரலாறு கி. பி. 1517 முதல் இக்காலம் வரை

## 1. சீர்திருத்த காலம்

பதினாறும் நூற்றாண்டில் ஏற்பட்ட சபைச் சீர்திருத்தம் திருச்சபை வரலாற்றில் மிகவும் குறிப்பிடத்தக்க ஒன்றாகும். இந் நூற்றாண்டின் ஆரம்பத்தில் சபைகளில் பல கேடுபாடுகள் இருந்தன. குருக்களை நியமிப்பதிலும், நன்கொடைகள் வசூலிப்பதிலும் தவறான முறைகள் வழக்கத்திலிருந்தன. பல துறவி மடங்களிலும் சீர்திருத்தம் தேவைப்பட்டது. அவற்றோடு சேர்ந்த மிகுதியான நிலச்சொத்துக்கள் பல இடையூறுகளுக்குக் காரணமாயிருந்தன.

மேலும், ஐரோப்பாவில் ஒரு மறுமலர்ச்சி உண்டாயிருந்தது. பூர்வீக காலத்தில் நீல நதி, தைகிரிஸ் நதி, யூப்பிரட்டீஸ் நதி ஆகியவற்றைச்சேர்ந்த இடங்களில் நாகரீகம் பிரபலமாயிருந்தது. பின்னர், மத்தியதரைக் கடலைச் சுற்றியுள்ள நாடுகள் முக்கியமானவைகளாயிருந்தன. அவற்றுக்கப்பாலுள்ள நாடுகள் நாகரீகமற்றவைகளாக எண்ணப்பட்டன. ஆனால் பதினாறும் நூற்றாண்டின் ஆரம்பத்தில் அட்லாண்டிக், பசிபிக் ஆகிய சமுத்திரங்கள் போக்குவரவுக்குப் பெரும் வழிகளாயின.

சீர்திருத்தத்துக்கு வேறு பல ஏதுக்கள் தூண்டுதலாயிருந்தன. கி. பி. 1054இல் உண்டான பிளவுக்குப்பின் திருச்சபை கிழக்கு மேற்குப் பிரிவுகளாகப் பிரிந்திருந்தது. இஸ்லாமியர் பலஸ்தீனா, சீரியா, சின்ன ஆசியா, எகிப்து, வடஆப்பிரிக்கா

ஆகிய நாடுகளை வென்றபின் இப்பிளவு உறுதியாக்கப்பட்டது. 1453இல் கான்ஸ்தந்திநேபுரி இஸ்லாமியரின் வசமாயிற்று.

மேற்கூறப்பட்ட காரணத்தால் கிழக்கத்திய சபையாகிய கிரேக்க வைதீக சபை (Greek Orthodox Church) சீர்திருத்தத்தினால் தொடப்படக்கூடாதபடி வேறுபட்டு விளங்கினது. ஆனால் மேற்கு ஐரோப்பாவில் அரசுகள் தனித்தனியே உறுதிப்படலாயின. பதினாறும் நூற்றாண்டின் ஆரம்பத்தில் இங்கிலாந்து, பிரான்ஸ், ஸ்பானியா, ஜெர்மானியா ஆகிய நாடுகள் வல்லரசுகளாய் அமையலாயின.

இந்நான்கு நாடுகளில் இங்கிலாந்தில்தான் முதலாவது முடியாட்சி உறுதிபெற்றது. கி. பி. 1455 – 1495ல் வெள்ளை ரோசா – சிகப்பு ரோசாச் சின்னங்களைக் கொண்ட இருதரப்பாரிடையே நடந்த அரசுரிமைப் போருக்குப் (the Wars of the Roses) பின் 7ம் ஹென்றி (1485 . 1509) யும், 8ம் ஹென்றி (1509 – 1547) யும், தங்கள் சுயாதீனத்துடன் ஆட்சிபுரிய உரிமை பெற்றனர். இயற்கனவே இவ்வாட்சியில் போப்புவின் அதிகாரம் குறைந்தது.

பிரான்ஸில் நூருண்டு போருக்குப் (the Hundred Years War 1338 – 1453) பின் பதினொன்றும் லூயியின்கீழ் அரசாட்சி நிலைவரப்பட்டது. அவரது புதல்வன் எட்டாம் சார்ல்ஸ் (1483 – 1498) ஜெர்மானியாவுக்கு பதிலாக பிரான்ஸை புனித உரோமை அரசாங்கத்தின் தலைநகராக ஏற்படுத்த எண்ணினார். அவருடைய வரிசையில் ஆண்ட முதலாம் பிரான்சிஸ் (1515—1547) போப்பு பத்தாம் லியோவுடன் பொலோக்ந திரு உடம்படிக்கை (Concordat of Bologna) என்னும் ஒப்பந்தத்தைச் செய்தார். அதன்மூலம் அவர் சபைக்குத் தலைவராகிக்கொண்டார்.

ஸ்பானியா பல நூற்றாண்டுகளாக முஸ்லிம் ஆதீனத்திற்குட்பட்டிருந்தது. 1492ல் அவர்கள் முற்றிலுமாக ஸ்பானியா

விலிருந்து துரத்தப்பட்டனர். அதன்பின் அங்கு முடியாட்சி பெலப்பட்டு ஸ்பானியா நாடு விருத்தியடைந்தது இங்கே ஆட்சி புரிந்த முதலாம் சார்ல்ஸ் **1519**ல் புனித உரோமை அரசாங்கத்தின் பேரரசராகத் தெரிந்தெடுக்கப்பட்டார். அதன் பின்னர் ஐந்தாம் சார்ல்ஸ் என்று அவர் அழைக்கப்பட்டார். சபைச் சீர்திருத்தத்தில் இவர் சிறந்த பங்கெடுத்தவர். அவருக்கு முன்னிருந்த அவரது பாட்டனாகிய பர்டினன்டு அரசனும், அரசி இசபெல்லாளும் சபையைச் சீர்திருத்த முயன்று சபையை அரசுக்குக் கீழ்ப்படுத்தினார்கள். **1482**ல் அதற்காகப் போப்புவுடன் ஒரு திரு உடன்படிக்கையும் செய்துள்ளனர்.

ஜெர்மானியில் **1438** லிருந்து தலைமுறை தலைமுறையாகத் தொடர்ந்து வருகிற அரசாட்சி ஏற்பட்டது. இவ்வரிசையில் முதலாம் மாக்சிமிலியன் **(1493-1519)** தலைசிறந்த இடைக்காலப் பேரரசராவர். போப்பு பேரளவிலேயே இங்குள்ள சபைகளுக்குத் தலைவராயிருந்தார். ஜெர்மானிய சபை ஜெர்மானிய அரசுக்கே அடங்கின ஒரு சபையாய் விளங்கிற்று.

நார்வே, ஸ்வீடன்; டென்மார்க் ஆகிய நாடுகள் டென்மார்க் அரசனின்கீழ் அமைந்தன. **1523**ல் கஸ்டப் வாஸா (**Gustaf Vasa**) ஸ்வீடன் அரசனானார்.

இவ்வாறு ஐரோப்பாவிலுள்ள நாடுகள் தத்தம் அரசுகளைப் பெலப்படுத்தலாயினர். அரசுகள் சபைகளிலும் அதிகாரம் செலுத்தலாயின. போப்புவின் ஆதிக்கம் குறைந்தது. அந்தந்த நாட்டிற்கு அந்தந்த நாட்டுச் சபை ஏற்பட்டது. இது சீர்திருத்தத்துக்கு ஒரு காரணமாயிராவிடினும், சீர்திருத்தம் ஏற்பட்டபொழுது அதைப் போப்பு அவமாக்கிவிடாதபடிச் செய்வதற்கு அது காரணமாயிருந்தது. போப்புவின் சர்வாதிகாரத்திற்குச் சபைகள் உட்படாமல் நாட்டுச் சபைகளாக அந்தந்த அரசுகளுக்குக் கீழடங்கியிருந்ததால், போப்புவின் அதிகாரம் அவ்விடங்களில் செல்லக் கூடாததாயிருந்தது.

அறிவுத்திற வாழ்க்கையிலும் ஐரோப்பா தீவிர மாறுதல்கள் அடைந்தது. இவற்றிற்கு மனித உலக வாழ்க்கை இயலின் (**humanism**) வளர்ச்சியும், அறிவுமறுமலர்ச்சி (**Rennaissonce**) யுமே முக்கிய காரணங்கள். மனிதன் தன் ஆற்றலில் நம்பிக்கை கொண்டான். விஞ்ஞான அறிவு வளர்ந்ததால் இப்பிரபஞ்சத் தைக் குறித்த அறிவும் விருத்தியடைந்தது. பூமி பிரபஞ்சத் தின் நடுமையமல்ல, ஏனைய கிரகங்களோடு அது சூரியனைச் சுற்றி வருகிறதென்னும் எண்ணம் கோப்பர்னிக்கஸ் (**Copernicus, 1473-1543**) என்பவரால் பிரசித்தம் பண்ணப்பட்டது. அதுபோல் கெப்ளர் (**Kepler 1571-1630**), காலிலியோ காலிலே (**Galileo Galilei 1564-1642**), பிரான்சிஸ் பேக்கன் (**Francis Bacon 1561-1626**), ஐசக் நியூட்டன் (**Isaac Newton 1642-1727**), பாஸ்க்கல் (**Pascal 1623-1662**) ஆகியோர் பிறப்பித்த விஞ்ஞான கருத்துக்கள் மக்களின் காட்சி எல்லையை விரிவாக்கி விட்டன.

இவை யாவற்றிலும் கிறிஸ்தவ விசுவாசம் ஆதாரமாயிருந்த தென்பது உண்மை, விஞ்ஞானத்தின் வெற்றியும் புதிய பூமிகள் கண்டுபிடித்ததும் கிறிஸ்துவின் நாமத்தைத் தரித்த கிறிஸ்தவர் களாலேயேயாகும். புதிய உலகைக் கண்டுபிடித்த கொலம்பஸ் கடவுளிலுள்ள விசுவாசத்தினாலேயே அப்படிச் செய்ததாகப் பதிவு செய்துள்ளார். புதிய மக்களை மனமாற்றச் செய்ய வேண்டுமென் னும் ஆவல் அவரைப் பிடித்திருந்தது. கிறிஸ்து மார்க்கம் நாகரீகத்தையும் அதிகமாகப் பாதித்தது. அதுமட்டுமன்று கிறிஸ்தவ விசுவாசம் ஒரு மாபெரும் கிளர்ச்சியை உண்டாக்கும் வல்லமையையும் பிறப்பித்தது.

பொதுவாக மக்கள் சமயப்பற்றுள்ளவர்களாயிருந்தனர். ஆலயங்களைக் கட்டுவதிலும் அணி அலங்காரம் புரிவதிலும் கிறிஸ்தவர்கள் ஆவல் கொண்டிருந்தனர். ஏறத்தாள ஒவ்வொரு சிற்றூருக்கும் ஒரு சிற்றாலயம் இருந்தது. ஒவ்வொரு பேரூரிலும் பல ஆலயங்கள் இருந்தன. சான்றாக, கொலோன் (**Cologne**)

நகரில் வசித்த 50000 குடிகளுக்கு, 11 ஆலயங்களும் 22 துறவி மடங்களும், 12 மருத்துவ மனைகளும், 76 கன்னி மாடங்களும் (convents) இருந்தன.

ஆனால், பக்தி பெரும்பாலும் புறம்பானதாயிருந்தது. கொலோனில் மட்டும் ஒருநாளில் ஆயிரம் வழிபாடுகள் நடந்தன. நற்செய்தி குறைவாகவே அறிவிக்கப்பட்டது. சடங்குகளிலும் திருநாட்கள் ஆசரிப்பதிலும், ஆஸ்தியிலும் சபைகள் வளர்ந்தன.

திருச்சின்னங்களின் அற்புத சக்தியிலுள்ள நம்பிக்கை சாதாரணமாயிருந்தது. கி. பி. 787ல் நடந்த பொது ஆலோசனைச் சங்கத்திற்குப் பின் திருச்சின்னங்களில்லாத ஆலயங்களைப் பிரதிஷ்டை செய்தால் சபைக்குப் புறம்பாக்கப்படக்கூடியவர்களாயிருந்தனர். திருச்சின்னங்களை விலைக்கு வாங்குவதிலும் தேடுவதிலும் மக்கள் வெறிபிடித்திருந்தனர். லூத்தருக்கு நண்பராகவும் ஆதரவாளராகவும் பிற்காலத்தில் காணப்பட்ட பிரடரிக் ஞானி (Frederick the wise) ஐயாயிரம் நினைவுச் சின்னங்கள் வைத்திருந்தாராம். அவற்றில் இறந்த பரிசுத்தவான்களின் எலும்புகளும், முடிகளும், ஆரோனின் கோலும், மோசே எரிந்ததாகக் கண்ட முட்செடியின் துண்டுகள் கானா ஊர் கலியாண வீட்டிலிருந்து இரு கூசாக்கள் திராட்சைரசம் ஆகியவையும் இருந்தனவாம்.

ஆயிரக்கணக்கான மக்கள் உரோமைக்கும் மற்றுமுள்ள புனித இடங்களுக்கும் யாத்திரை செய்தனர். கி. பி. 1300ல் 200000க்கு அதிகமான யாத்ரீகர் உரோமையைச் சந்தித்தனர். உரோமையில் அப்போஸ்தலருடைய ஆலயங்களைத் தரிசிக்கிறவர்களுக்குப் போப்புவானவர் பாவமன்னிப்பை வாக்குப்பண்ணியிருந்தார். 1450ல் ஏறத்தாள 1000000 யாத்ரீகர் ஒருவாரத்தில் உரோமையைத் தரிசித்தனர்.

விசுவாசத்தை முக்கியப்படுத்தி வாழ்ந்த கிறிஸ்தவர்களும் அநேகர் அக்காலத்திலிருந்தனர். திருமறையும் பக்திக்குரிய

நூல்களும் பரவின. சீர்திருத்த எண்ணங்கள் போதனையிலும் உபதேசத்திலும் அதிகமாய்க் காணப்பட்டன. திருச்சபையில் காணப்பட்ட புறம்பான பக்தியை சாதாரண மக்களும் அறியலாயினர். இதுவும் சீர்திருத்தத்திற்கு வழிநடத்திய காரணங்களிலொன்ருகும்.

சபைகளில் வரிகளின் கொடுமை சாதாரண மக்களைப் படிப்படியாகப் பிரிக்கலானது. பலர் இதற்கு விரோதமாய் எழும்பினர். சீர்திருத்தம் உண்டானபோது அவர்கள் பெரும் மகிழ்ச்சியுடன் அதை வரவேற்ருர்கள்.

ஆதிகாலங்களிலுள்ள திருச்சபை வரவாற்றையும், கடைப்பிடிக்கப்பட்ட உண்மைகளையும் மக்கள் நினைத்தபொழுது ஆதிச்சபைக்கும் அக்காலத்திலுள்ள சபைக்கும் கோட்பாட்டிலும் செயலிலுமுள்ள வேறுபாடுகளை உணர்ந்தனர். எனவே, எரேஸ்மஸ் (Erasmns) ஆகியோர் கிறிஸ்து மார்க்கத்தின் ஆரம்ப வாழ்க்கையை மக்களுக்கு அறிமுகப்படுத்துவதினுல் சீர்திருத்தத்தை உண்டுபண்ணலாமென்று எண்ணினுர்கள். எரேஸ்மஸ் இவ்வெண்ணத்தை உடையவராய் புதிய ஏற்பாட்டை மூலமொழியாகிய கிரேக்க மொழியிலும், 'சபைப் பிதாக்களை' லத்தீன் பிரசுரங்களிலும் வெளியிடலாஞர். திருமறையை விசுவாசத்திற்கும் வாழ்க்கைக்கும் ஆதாரமாய் மக்கள் எண்ண ஏவப்பட்டனர்.

இத்தகைய சூழ்நிலையில்தான் லூத்தர் சபையைச்சீர்திருத்த முற்பட்டார். இதற்கு முன் பலர் சீர்திருத்தப் பணியில் ஈடுபட்டிருந்தனர். ஆனுல் உரோமைச் சபை அதற்கு உடன்படவில்லை. பின்னர் உரோமைச் சபைக்கு எதிராக சீர்திருத்தம் உண்டாக வேண்டியதாயிற்று. அது லூத்தரால் செயலுக்கு வந்தது.

# 1. மார்ட்டின் லூத்தரின் சீர்திருத்தம்

## *லூத்தரின் இளமையும், கல்வியும்*

மார்ட்டின் லூத்தர் உரோமைக் கத்தோலிக்க சபையைச் சேர்ந்தவராயிருந்தார். 1483 நவம்பர் 10ம் நாள் எயில்பென் (Eisleben) என்னுமிடத்தில் ஹான்ஸ் லூத்தர், மார்கரெட் ஆகியோருக்கு மூத்த புதல்வனுகப் பிறந்தவர். லூத்தருக்குப் பின் அவர்களுக்கு ஆறு பிள்ளைகள் பிறந்தன. அவரது பெற்ருேர் விவசாயத் தொழில் புரிந்தனர். அதைப் பற்றி பிற்காலத்தில் லூத்தர் பெருமையாகப் பேசி "என் தந்தை, என் பாட்டனுர், முன்னேர் எல்லாரும் சரியான விவசாயிகளாயிருந்தார்கள்", என்று கூறுவார்.

பக்தியுள்ள குடும்பத்தில் கடவுள் பயத்துடன் லூத்தர் வளர்ந்தார். இளமையில் மோட்சம், நரகம், தூதர்கள், பரிசுத்தவான்கள், பிசாசு, ஆவிகள் ஆகியவற்றைப் பற்றிய நம்பிக்கையுடையவராய் அவர் காணப்பட்டார். கிறிஸ்துவை நீதிபதியாக எண்ணி அவர் அஞ்சினுர். கன்னி மரியம்மாள், அப்போஸ்தலர், பரிசுத்தவான்கள் ஆகியோரின் மத்தியஸ்த வேண்டுதலின் சக்தியில் அவர் நம்பிக்கை கொண்டிருந்தார். கர்த்தருடைய ஜெபத்தையும், பத்து கற்பனைகளையும், விசுவாசப் பிரமாணத்தையும் அவர் கற்று எவ்விஷயத்திலும் கத்தோலிக்க சபையின் விசுவாசத்திற்கு உடன்பட்டிருந்தார். வேளா வேளைகளில் சுரங்கத் தொழிலாளர்களின் பாதுகாவல் புனிதராகிய புனித அன்னுவிடம் (St. Anna) முறையிடுவார்.

ஏழாம் வயதில் லூத்தர் மான்ஸ்பீல்ட் பாடசாலைக்கு அனுப்பப்பட்டார். அவர் நல்ல தேர்ச்சி பெற்று எர்பர்ட் பல்கலைக் கழகத்தில் 1501ல் பிரவேசித்து அங்கே அவர் சமய நுணுக்கமுறையில் பயிற்சி பெற்ருர். பல்கலைக்கழகம் முழுவதிலுமே அவர் ஒரு சிறந்த மாணவனுக விளங்கினுர். "தத்துவ ஞான அறிஞர்"

(the learned philosopher) என்றும், "இசைக்கலை அறிஞர்" (tha musician) என்றும் அவரது உடன்மாணவர்கள் அவரைக் குறிப்பிட்டனர். 1502ல் இளங்கலை வகுப்பிலும் (B.A.), 1505ல் முதுகலை வகுப்பிலும் (M.A.) விருது பெற்றார்.

மாணவனாக லூத்தர் ஒரு பக்தியுள்ள கத்தோலிக்கனாக விளங்கினார். தினசரி தியானத்தையும் வழிபாட்டையும் அவர் ஒழுங்குடன் அனுசரித்தார். 'நன்றாக ஜெபிப்பது அரைப் படிப்புக்குச் சரி' என்பது அவரது மேற்கோள் வாசகம். எர்பர்டிலுள்ள புனிதமரியாள் ஆலயத்தில் கிறிஸ்துவின் இரத்தத்தின் ஒரு சொட்டும் நினைவுச் சின்னமாக வைக்கப்பட்டிருந்தது. ஆண்டுதோறும் அங்கு நடந்த புனித ரத்தப் பண்டிகையிலும் லூத்தர் பங்கெடுத்திருக்கலாம்.

எர்பர்டில் அவர் கற்ற காலத்தில் நினைவிலும், வார்த்தையிலும், செயலிலும் காணப்பட்ட சிறிய தவறும் அவருக்கு மிகுந்த வேதனையைக் கொடுத்தது. தூய்மையான உள்ளத்தை அவர் அதிகமாக வாஞ்சித்தார். தம் கைகளைக் கழுவும்போது, "நாம் எவ்வளவாய்ச் சுத்தமாயிருக்கக் கழுவினாலும் அதிகமாக அசுத்தமாயிருக்கிறோம்" என்று அவர் கூறுவாராம். இது அவரது எண்ணங்களை அதிகமதிகமாகப் பாதித்தது.

கடவுளிடம் சமாதானம் பெற அவர் செய்த முயற்சிகளெல்லாம் வீணும் வியர்த்தமுமாய்க் காணப்பட்டன. 1505ல் அவர் வழக்கறிஞர் தொழிலுக்கு எர்பர்ட் பல்கலைக் கழகத்தில் படிக்கலானார். ஆனால் அவரது ஆத்மீகப் பிரச்சினை மேலும் மேலும் அதிகரித்தது. அதினிமித்தம் சிலவேளைகளில் வேதனையால் உடலும் மனதும் சோர்புற்றுக் காணப்பட்டனவென்று அவரது நண்பன் மெலங்தான் கூறியிருக்கிறார்.

அவரது ஆத்மீகப் போராட்டத்தை வலுப்படுத்த பல காரணங்கள் இருந்தன.

1) எர்பர்ட் பல்கலைக்கழக வாசிப்பு சாலையிலிருந்து திருமறையை எடுத்து வாசித்ததின் மூலம் புதிய ஏற்பாட்டின் செய்திக்கும் சபையின் நடைமுறைகளுக்கும் பல வேறுபாடுகள் இருக்கின்றதைக் கண்டார்.

2) எர்பர்டில் மாணவனாயிருந்த ஆரம்ப காலத்தில் தனது ரத்த நரம்பொன்றை அறியாமல் வெட்டிய காரணத்தினால் மரித்துப்போகக்கூடிய நிலை ஏற்பட்டது. அதன்மூலம் மரணத்தைப் பற்றிய எண்ணங்கள் அவர் மனதை ஆட்கொண்டன.

3) அதற்குப்பின் அவருக்கு நேரிட்ட ஒரு சுகவீனம் அத்தகைய எண்ணங்களை அதிகரிக்கச் செய்தது.

4) லேங் (Lang) என்னும் அவரது நண்பரொருவர் துறவியாக மாறினது அவரது சிந்தனையைத் தூண்டினது.

5) ஹியரோனிமஸ் என்னும் மற்றொரு நண்பன் திடீரென மரித்துப்போனது அவரை ஆழ்ந்த சிந்தனைக்குட்படுத்தினது

6) எர்பர்ட்டிலும் அதைச் சுற்றிலும் ஒரு வாதை நோய் பரவினபோது வருங்கால வாழ்க்கையைப் பற்றியும் மனிதனுடைய பிற்கால நிலையைக் குறித்தும் சிந்தனை செய்ய ஏவப்பட்டார்.

7) வழக்கறிஞராகப் படிப்பது அவருக்குத் திருப்தியை அளிக்கவில்லை. வழக்கறிஞர் உண்மை பேச இயலாதென்று நம்பினார்.

8) லூத்தரின் தமஸ்கு அனுபவம் 1505 ஜூலை 2ம் நாள் உண்டானது மான்ஸ்பீல்டிலிருந்து எர்பர்டுக்கு அந்நாள் அவர் திரும்பி வருகையில் ஸ்டாட்டர்கெய்ம் (Stotterheim) என்னும் ஒரு கிராமத்திற்கருகில் இடியுடன்கூடிய மழை ஏற்பட்டது. சடுதியாக ஒரு மின்னல் வெட்டுண்டாகி பயத்தினால் தரையில் வீழ்ந்

தார். நடுக்கத்துடனே ''புனித அன்னு, என்னை இரட்சியும், நான் ஒரு துறவியாவேன்' என்று கூப்பிட்டுச் சொன்னுர். புனித அன்னு கன்னி மரியம்மாளின் அன்னை என்றும், சுரங்கத் தொழிலாளர்களின் புனித காப்பாளரென்றும் நம்பப்படுகிருர்கள்.

அதற்கு முன் லூத்தர் துறவியாவதைக் குறித்து எண்ணினதாகத் தோன்றவில்லை. அவர் தாமே கூறியிருப்பதின்படி திடீரென்று மரணபயத்தால் அவ்வெண்ணம் அவருக்குள் உதித்தது. அவரது நண்பர்களில் சிலர் பவுலைத் தரையில் வீழ்த்தியது போன்றதொரு பரலோக ஒளி லூத்தரையும் வீழ்த்தியது என்று கூறினுர்கள். அவரது தந்தையாகிய ஹான்ஸ் லூத்தருக்கு அவர் துறவியாகத் தீர்மானித்த செய்தி அறிவிக்கப்பட்டபோது அது பிசாசின் சூழ்ச்சியல்லவென்று குறிப்பிட்டார்.

ஆரம்பத்தில் அவர் துறவிமடத்திற்குச் செல்வதை அவரது நண்பர்கள் தடுத்தனர். அவரது தீர்மானம் தீவிர யோசனையோடும் தெளிந்த ஆய்வோடும் செய்யப்பட்டதல்லவென்று அவர்கள் எடுத்துக் கூறினுர்கள். சிலகாலம் லூத்தர் தயங்கினபோதிலும் **1505** ஜுலை **16**ம் நாள் தனது நண்பர்களிடம் விடை பெற்றுக் கொண்டு அடுத்த நாள் எர்பர்டிலுள்ள அகுஸ்தீன் துறவி மடத்திற்குச் சென்று துறவியானுர்.

இவ்வாறு எர்பர்ட் துறவி மடத்தில் மூன்று ஆண்டுகள் **(1505-1508)** தங்கினுர். அக்காலத்தில் கடவுளுக்குப் பிரியமானபடி வாழ முயன்ருர். தமது பாவத்தின் முக்கிய தன்மை கடவுளிடத்திலும் மனிதனிடத்திலும் அன்பு கூராதிருத்தல் என்று அறிந்தார். தாம் செய்யும் நற்செயல்களிலும் இப்பாவம் துவைந்திருக்கிறதென உணர்ந்தார். இம்மரண சரீரத்திலிருந்து யார் என்னை விடுதலை செய்வாரென்பது அவரது கதறுதலாயிருந்தது. மனந்திரும்புவதற்குத் தம்மில்தாமே இயலாதென்றும், கடவுள் விரும்பும் தன்னயமற்ற அன்பு தன்னுல் காட்ட முடியாதென்றும் உணர்ந்தார். தாம் முன்குறித்தவர்களைத்தான் கடவுள் இரட்சிப்

பாரென்றும், இரட்சிக்கப்பட்டவர்கள் கடவுளின் பிரமாணங்களை நுட்பமாய்க் கைக்கொள்ள வேண்டும் என்றும் போதிக்கப்பட்டிருந்தார். இதுவும் அவருக்கு மனச்சோர்பைக் கொடுத்தது.

எனினும், லூத்தருக்கு நம்பிக்கையூட்டும் சில காரியங்கள் இருந்தன. 'பாவ மன்னிப்புண்டென்று விசுவாசிக்கிறேன்' என்ற விசுவாசப்பிரமாண வார்த்தைகள் அவருக்கு ஆறுதலளித்தன. திருமறையை வாசித்ததின் மூலம் நியாயப்பிரமாணத்தை அனுசரிப்பதை விரும்பும் கடவுளையல்ல ஒரு இரக்கமுள்ள இரட்சகராகிய கடவுளை அதிகமதிகமாய் அறியலானார்.

1508ல் புனித அகுஸ்தீனின் நூல்களை வாசிக்கலானார். பாவத்தைக் குறித்தும் கிருபையைக் குறித்தும் அகுஸ்தீனின் எண்ணங்களைப் படித்தறிந்தார். அதன் மூலம் சுவிசேஷ ஒளி அவரது இருதயத்திற்குள் பிரவேசிக்க ஆரம்பித்தது.

மூன்று ஆண்டுகளாக லூத்தர் எர்பர்ட் துறவி மடத்தில் கடும் துறவறத்தை திட்டவட்டமாக அனுசரித்த போதிலும் மனிதன் தன் முயற்சிகளால் நீதிமானாகத் தீர்க்கப்பட முடியாதென்னும் உண்மையைக் கண்டுபிடித்தார். விசுவாசத்தினால் நீதிமான் பிழைப்பான் என்னும் அடுத்த உண்மையின் உட்கருத்தை இன்னும் அவர் கண்டடையவில்லை.

1506 செப்டம்பர் மாதத்தில் அவர் துறவி அபிஷேகம் பெற்றார். 1507ல் குரு அபிஷேகம் பெற்றார். 1507 மேய் 2ம் நாள் முதல் வழிபாட்டை பயத்தோடும் நடுக்கத்தோடும் நடத்தினார். ஏனெனில், ஒரு சிறு வாசகத்தில் தவறுவதும் பெரிய பாவமாக எண்ணப்பட்டது. மேலும் ஜீவனுள்ள கடவுளுக்கு முன் நிற்க வேண்டுமென்ற எண்ணமே அவருக்குத் திகிலைக் கொடுத்தது. இத்தகைய எண்ணத்துடன் வழிபாட்டைச் சரியாக முடிப்பதே அவருக்கு வெகு சிரமமாயிருந்தது.

லூத்தரின் ஆத்ம போராட்டம் அதிகரிக்கவே, அவர் தம் உடலை ஒடுக்கி உபவாசித்து, ஜெபித்துத் தம் மீட்பை சம்பாதிக்க முயன்றார். இக்காலத்தில் அவர் எழுதிய ஒரு கடிதத்தில் "ஐயோ, என் பாவமே, என் பாவமே, என் பாவமே" என்று எழுதியிருந்தார். ஒவ்வொரு நாளும் பல மணி நேரங்கள் ஜெபத்திலேயே தரித்திருந்தார். எனினும் அவர் சமாதானத்தைக் கண்டடையவில்லை. இத்தருணத்தில் அவர் உரோமைக்குச் சென்றபொழுது அங்குள்ள குருக்களின் சீர்கேட்டைக் கண்டு மிகுந்த மனவருத்தமுற்றார்.

லூத்தர் பின்னும் மட அதிகாரிகளின் தூண்டுதலினால் இறையியலைக் கற்கத்தொடர்ந்தார். அகுஸ்தீன், கிளெயர்வாவின் பெர்னார்ட், தோமா அக்குவினோ ஆகியோரின் நூல்களைப் படித்தபோது முன்குறித்தலைப்பற்றிய கோட்பாடு அவரைக் கலக்கியது. அதினிமித்தம் சிலவேளைகளில் கடவுளைப் பற்றி வெறுப்புணர்ச்சி தோன்றினது. அவருக்கு மடத்தில் கொடுக்கப்பட்ட பாரமான பொறுப்புகளும் அவரது நிலைமைக்கு உதவவில்லை. ஆனால் உயிற்றென்பர்க் பல்கலைக் கழகத்தில் இறையியல் கற்பிக்கவும் அவர் ஏற்படுத்தப்பட்டது அவருக்கு அனுகூலமாயிருந்தது. இதற்கு அவரை ஏவினவர் அவரை ஆவிக்குரிய வழிகளில் நடத்திய ஸ்டாப்பிட்ஸ் என்பவராகும். அவர் லூத்தரை இறையியலில் டாக்டர் பட்டத்திற்கும் படிக்கத் தூண்டினார். அவர் தமது அனுபவத்திலிருந்து ஆவிக்குரிய ஆலோசனைகளையும் கொடுத்து வந்தார்.

ஸ்டாப்பிட்ஸ் என்னும் போதகர் அவருக்குள்ளிருக்கும் போராட்டத்தைக் குறிப்பாய் அறிந்து திருமறையை வாசிக்க ஊக்குவித்தார். திருமறையைப் பற்றிய உரைகளையும் லூத்தர் வாசிக்க அவர் ஏவினார். எனினும் லூத்தர் அதிக உதவியைக் காணக்கூடாதவராகத் தவித்தார். அவருடைய சுய தியாகங்கள், கடும் தபசுகள் யாவும் மணலுக்குள்ளே அங்குமிங்கும் ஓடி அஸ்திபாரம் போட முயற்சிப்பது போல் காணப்பட்டன.

நோன்பு என்னும் சாக்கிரமெந்தால் பாவ மன்னிப்பு கிடைக்குமென்று அவர் போதிக்கப் பட்டிருந்தபடியால் அந்த சாக்கிரமந்தைத் திரும்பத் திருப்ப தன் மேலானவர்களிடம் கேட்டுப் பெற்ருர். ஒரு சிறு தவறுக்கும் அதைத் தேடினுர். லூத்தர் அதிசயமான பக்தியுடையவராக காணப்பட்டார். ஆனல் லூத்தரோ சொல்லி முடியாத வியாகுலத்தை அடைகிறவராயிருந்தார்.

இறுதியில் ஸ்டாப்பிட்ஸ் அவருடைய உண்மையான வருத்தத்தைக் கண்டுபிடித்து மனிதனுடைய பாவத்தன்மையைக் கடவுளின் பரிசுத்த தன்மையோடு ஒத்துப்பார்ப்பது நல்லதுதான். ஆனுல் இரண்டையும் ஒன்றுக்கொன்று எதிரான தன்மைகளாக எப்போதும் வைப்பது சரியல்ல. கிறிஸ்து இயேசுவின் மூலமாக கடவுளுடைய பரிசுத்தம் மனிதனுக்குச் சொந்தமாக முடியுமென்பதை அவர் விளக்கிக் காட்டினுர்.

இவ்வாறிருக்கத் திடீரென அவரது உள்ளத்தில் ஒளி பிரகாசித்தது. உயிட்டன்பர்க் பல்கலைக் கழகத்தில் **1516-1517**ல் ரோமர் நிருபத்தில் பெருஞ்சொல்லாற்றும்பொழுது, ரோமர் **1:17**ல் அடங்கிய "விசுவாசத்தினுல் நீதிமான் பிழைப்பான்" என்னும் வார்த்தைகள் அவருக்குள் ஒளியைக் கொண்டு வந்தது.

லூத்தர் இளமையில் கிறிஸ்துவை நீதிபதியாக நம்பினுர். இப்பொழுது சிலுவையில், பட்சிக்கிற அக்கினியான கடவுளை உலகைத் தம்மோடு ஒப்புரவாக்கும் செயலை அறிந்தார். கடவுள் நீதிபதியாயினும் அவரே ரட்சகருமாவார். விசுவாசத்தினுல் பாவி கிறிஸ்துவை ரட்சகராகக் கண்டு கடவுளின் தந்தை உள்ளத்தை அறிகிருன். எனவே, விசுவாசம் மூளை அறிவினுல் ஒப்புக்கொள்வதல்ல, கிறிஸ்துவில் வெளிப்பட்ட கடவுளின் அன்பை நன்றியுடன் ஏற்றுக்கொண்டு கடவுளிடம் முழு நம்பிக்கை வைத்தலேயாகுமென்று லூத்தர் அறிந்துகொண்டார்.

மனிதன் தான் செய்யும் எந்த செயல்களினுலும் மீட்பைச் சம்பாதிக்க இடலாதென்பதை லூத்தர் தம் அனுபவத்தில் அறிந்தார். ஆனுல் நற்செயல்களை அவர் அவமதிக்கவில்லை. அவை விசுவாசத்தின் விளைவாக இருத்தல் வேண்டும். திருமறையில் கூறப்பட்டுள்ள விசுவாசத்தாலுண்டாகும் மறுபிறப்புக்கு அவை சான்றுகளாக விளங்க வேண்டும். நீதிமானுக்கப்படுதல் விசுவாசத்தினுல் மட்டுமே என்று லூத்தர் நம்பினுர்.

தாம் பெற்ற ஒளியைப் பிறருக்குக் கொடுக்கவேண்டுமென்ற ஆத்திரம் லூத்தருக்குள் பற்றி எரிந்தது. எனவே உயிற்றென்பெர்க் பல்கலைக்கழக மாணவர்களுக்குப் பெருஞ் சொல்லாற்றும் பொழுதும், வட்டாரச் சபையில் அருளுரையாற்றும் பொழுதும் இதை நிறைவேற்றினுர்.

விசுவாசத்தினுல் நீதிமானுக்கப்படும் அனுபவத்தை அடைந்த லூத்தர் புகழ் அவரை அறியாமலே ஜெர்மனியிலும் மேற்கு ஐரோப்பாவிலும் பரவிற்று. அவரது அருளுரைகளில் சபையின் சீர்திருத்தத்தை வற்புறுத்தலானுர். இவ்வாறு செய்கையில் உரோமன் கத்தோலிக்க சபையின் பல உபதேசங்களை அவர் எதிர்க்கவேண்டியதாயிற்று. ஏனெனில், அவை சுவிசேஷத்திற்கு மாருக அவருக்குக் காணப்பட்டது.

உரோமன் கத்தோலிக்கச் சபையோடுள்ள லூத்தரின் போராட்டம் **1517**ல் ஆரம்பித்தது. பாவமன்னிப்புச் சீட்டு கொடுப்பதற்கு விரோதமாக லூத்தர் பிரசங்கிக்கத் தொடங்கின போது அப்போராட்டம் உண்டானது. அச்சமயம் பத்தாம் லேயோ என்னும் போப்புவர்னவர் உரோமையில் புனித பேதுருவின் நினைவிற்காக ஒரு சிறப்பான ஆலயம் கட்ட பாவமன்னிப்புச் சீட்டுகளின் விற்பனையை விளம்பரம் பண்ணி யோவான் டெத்சல் (**John Tetzel**) ல்ன்னும் ஒரு தொமினிக்கத் துறவியை அவற்றை விற்றுப் பொருள் சம்பாதிக்கப் பட்டணந்தோறும் அனுப்பினுர். அவர் சென்ற இடங்களில் பாவமன்னிப்புச் சீட்

டுகளைப் பற்றிய ஒரு பொதுவான உரை நிகழ்த்தி, பின்பு பரலோகத்தின் வாசலைத்திறந்து வைக்கிறதாகக்கூறி விற்பனையை ஆரம்பிப்பார். இவை யாவும் தேவ தூஷணமாகவும் ஆத்மீக வாழ்க்கைக்குக் கேடு விளைவிப்பதாகவும் லூத்தருக்குக் காணப்பட்டன.

பின்னர் மிகுந்த ஆலோசனையோடும் பல நண்பர்களின் தூண்டுதுலினாலும் கவனமாயும் தீரமாயும் அவ்வித விற்பனையை எதிர்க்க ஆரம்பித்தார். எனவே, உயிட்டென்பர்க் பல்கலைக்கழகத்தோடு சேர்ந்த சகல பரிசுத்தவான்கள் சபை தேவாலயத்தின் கதவில், 1417 நவம்பர் 1ம் நாள் சகல பரிசுத்தவான்கள் திருநாளன்று, பாவ மன்னிப்புச் சீட்டு வியாபாரத்திற்கு விரோதமாகத் தாம் எழுதின 95 நியாயங்களைப் பதித்து வைத்தார். அத்திருநாளில் ஆலயத்திற்கு வந்த யாவரும் அவற்றை வாசித்தனர்.

லூத்தரின் நியாயங்களின் கருத்து என்னவெனில், சபை விதிக்கும் தண்டனையைச் சபை நிவிர்த்திக்கலாம். ஆனால் கடவுள் விதிக்கிறவைகளைச் சபை தீர்க்கமுடியாது. பாவமன்னிப்புச் சீட்டினால் பாவ மன்னிப்பைக் கொடுக்க முடியாது. போப்புவானவருக்கும் பாவங்களை மன்னிக்க அதிகாரமில்லை. கடவுளே அதற்கு அதிகாரமுள்ளவர். உத்தரிக்கும் இடத்திலுள்ள ஆத்துமாக்களுக்கு இவ்வித சீட்டுகளை அவர்களைச் சேர்ந்தவர்கள் வாங்குவதினால் பயனொன்றுமில்லை. போப்புவானவர் அந்த ஆத்துமாக்களுக்காக வேண்டுதல் செய்ய மட்டும் கூடும். உண்மையாக மனந்திரும்புகிற கிறிஸ்தவன் பாவ மன்னிப்புச் சீட்டில்லாமலே மன்னிப்பு பெற்றாயிற்று. கிறிஸ்து மெய்யான மனந்திரும்புதலையே ஒவ்வொருவரிடமுமிருந்து விரும்புகிறார். கிறிஸ்துவின் நீதி போப்புவானவரின் உதவியில்லாமலே பலிக்கக் கூடியது. விசுவாசமில்லாமல் சாக்கிரமந்துகளின் பயனை அடையக் கூடாது.

லூத்தர் அதிசயிக்கத்தக்க அளவில் இந்த நியாயங்கள் மக்களுடைய மனதைக் கவர்ந்தன. பலருடைய தேவைகளுக்கு

இணங்கி லத்தீன், ஜெர்மானி முதலிய மொழிகளில் அவை ஏரா ளமாய் அச்சிடப்பட்டு ஜெர்மனியின் பல இடங்களுக்கும் அனுப் பப்பட்டன.

லூத்தரின் எதிரிகள் அவருடைய எண்ணங்கள் திரிபுக் கொள்கையுடையவை என்று முறையிட்டனர். லூத்தர் அதற்குப் பிரதியுத்தரமாக **'சலுகைகளையும் கிருபையையும் பற்றிய ஒரு அருளுரை'** (Sermon on Indulgences and Grace) என்னும் நூலை வெளியிட்டார். இதற்கு மாபெரும் தேவை இருந்தமையால் அவ்வாண்டு இறுதிக்குள் பன்னிரண்டு பதிப்பு கள் வெளியாயின.

பின்பு, ஹெய்டல்பர்க்கில் அவரது மட அதிகாரிகளிடம் நியாயம் கூற 1518 ஏப்ரல் மாதத்தில் லூத்தர் அழைக்கப்பட் டார். அங்குள்ள தொமினிக்க துறவிகளோடு லூத்தர் வாதிக்கை யில் அவரது சொல் நயமும் அறிவுஞ்சார்ந்த நியாயங்கள் அவர்க ளைக் கவரவே அவர்களும் அவர் பக்கத்திலானார்கள். வேறு பல நண்பர்களும் அவரோடு சேர்ந்தனர். மேய் 15ல் உயிட்டென்பர்க் திரும்பியதும் **'தீர்மானங்கள்'** (Rasolutions) என்னும் நூலை வெளியிட்டார். இந்நூலில் போப்புவானவரின் அதிகாரத்தை எதிர்த்து சபை சீர்திருத்தப்படவேண்டும் என்பதை வலியுறுத் தினார்.

போப்புவானவரும் லூத்தருக்குவிரோதமாக நடபடியெடுக்க எண்ணி உரோமைக்கு அறுபது நாட்களுக்குள் வரும்படி உத்த ரவிட்டார். ஆனால் பதினாறு நாட்களுக்குள் லூத்தரின் மேலுள்ள ஆத்திரத்தினால் போப்புவானவர் அவரை திரிபுக்கொள்கைக்கார ரென்று தீர்மானித்து, அவருக்கு விரோதமாக தடை உத்தரவும் பிறப்பித்தார்.

இத்தருணத்தில் நாட்டு நிலமை போப்புவானவர் விரும்பிய படி செயலாற்றுவதிலிருந்து தடுத்தது. ஸ்பானியாவின் முத லாம் சார்ல்ஸ் அரசன் புனித உரோமை அரசின் பேரரசனாயிருப்ப

தற்கு ஒரு வேட்பாளராக முதலாம் மாக்சிமிலியனால் குறிப்பிடப் பட்டார். இது போப்புவானவரின் திட்டங்களுக்கு மாருயிருந் தது. ஜெர்மானிய அரசன் பிரடரிக் முதலாம் சார்ல்ஸ் பேரரசனு வதற்கு ஆதரவில்லாதவராயிருந்தமையால் போப்புவானவர் பிர டரிக் அரசனைத் தன் பக்கம் இழுத்துக்கொள்ள விரும்பினர். எனவே, லூத்தர் ஜெர்மனியிலுள்ள ஆக்ஸ்பர்கில் ஆய்வுமன்றத் தில் கார்டினல் காஜட்டான் முன் விசாரிக்கப்பட உத்திரவிட்டார். காஜட்டான் விசாரணையின்றி லூத்தர் தன் கொள்கையைக் கைவிடவும் போப்புவானவருக்கு அடிபணியவும் கோரிக்கை செய்தார். லூத்தர் அக்டோபர் 20ம் நாள் தப்பி ஓடி போப்பு வானவர் தன்னை ஒழுங்கானமுறையில் ஒரு பொது ஆலோசனைச் சங்கத்தில் விசாரிக்குமாறு வேண்டினர்.

நாட்டு நிலமையை முன்னிட்டு போப்புவானவர் லூத்தரின் காரியத்தில் தீவிரமாயிருக்கவில்லை. பிரடரிக் அரசனைத் தம் சார்பில் இணைக்க சார்ல்ஸ் வான் மில்டிட்ஸ் (Charles Von Miltitz) என்பவரை அனுப்பினர். அவர் 1519 ஜனுவரியில் லூத்தரிடமும் அன்புடன் பேசலானர். லூத்தரும் தனக்கு எதிராயிருந்தவர்கள் பேசாதிருந்தால் வாதத்தை நிறுத்திக்கொள் வதாக உடன்பட்டார். ஆனல் லீப்சிக் பல்கலைக் கழகப் பேராசி ரியர் யோவான் எக் (John Eck) என்பவர் வாதத்தில் ஈடுபடவே லூத்தர் அவரை எதிர்க்கவேண்டியதாயிற்று. இந்த வாதம் 1519 ஜூன், ஜூலையில் லீப்சிக்கில் நடைபெற்றது. எக்கைவிட லூத்தர் சிறப்பாய் காணப்பட்டாரென்பது வெளிப்படையாயிருந் தது. எனினும் நியாயமாய் கூட்டப்பட்ட ஒரு பொது ஆலோ சனைச் சங்கமும் தவறமுடியும் என்று லூத்தர் கூறிய காரணத் தால் அவரைச் சபைக்குப் புறம்பாக்கும் கட்டளையைப் பிறப்பிக்க உரோமைக்கு எக் தீவிரித்தார். இதற்கிடையில் லூத்தரின்புகழும் பரவினது.

1520 ஜூன் 15ம் நாள் லூத்தரைச் சபையிலிருந்து புறம் பாக்கும் பத்திரம் போப்பானவரால் கையொப்பமிடப்பட்டது. லூத்தர் திரிபுக் கொள்கைக்காரரென்றும், அவரது நூல்கள் சுட்டெரிக்கப்பட வேண்டுமென்றும், தமது கொள்கையை அறுபது நாட்களுக்குள் அவர் கைவிடாவிடில் அவருக்கு எதிராகத் தடை உத்தரவு விதிக்கப்படுமென்றும் கூறப்பட்டது.

1520ல் லூத்தர் தனக்கு விரோதமாக உரோமையில் நடந்த விசாரணையைக் கேள்வியுற்றபோது ''ஜெர்மானி மக்களின் கிறிஸ்தவ பெருமக்களுக்கு'' (To the Christian Nobility of the German Nation) என்னும் பிரபந்தத்தை எழுதி ஆகஸ்ட் மாதம் வெளியிட்டார். இந்நூலில் எல்லா விசுவாசிகளும் ஆசாரியர்களாவர் என்றும், திருமறையை விளக்க போப்புவானவருக்கு மட்டும் விசேஷித்த உரிமை இல்லையென்றும், திருச்சபையில் சீர்திருத்தம் உண்டுபண்ண ஒரு பொது ஆலோசனைச் சங்கம் கூட்டவேண்டுமென்றும் குறிப்பிட்டிருந்தார். சபை வரிகளைக் குறைத்தல், குருக்களுக்குத் திருமணஞ் செய்யும் உரிமை, விடுமுறை நாட்களைச் குறைத்தல், கூடுதலான இறையியல் படிப்பு ஆகியவற்றையும் இப்பிரபந்தத்தில் வலியுறுத்தியிருந்தார். ஜெர்மனி உரோமைக்கு விரோதமாக இச்சீர்திருத்த விஷயத்தில் ஒருமைப்பட இப்பிரபந்தத்தில் அழைப்பு கொடுத்தார்.

1520 அக்டோபர் மாதம் ''திருச்சபையின் பாபிலோனிய சிறையிருப்பு'' (On the Bobylonian Captivity of the Church) என்னும் இரண்டாம் பிரபந்தத்தை லூத்தர் வெளியிட்டார். இப்பிரபந்தத்தில் அவர் உரோமைச் சபையின் சில கோட்பாடுகளை எதிர்த்து எழுதியிருக்கிறார். இரண்டு சாக்கிரமந்துகளையே லூத்தர் அங்கீகரித்திருக்கிறார். புனித யாத்திரைகள், புண்ணிய கிரியைகள், ரசத்தைச் சபையாருக்கு மறுத்தல், சுபாவ மாறுதல் கொள்கை ஆகியவற்றையும் இந்நூலில் கண்டித்திருக்கிறார்.

1520 நவம்பர் மாதத்தில் லூத்தர் ''கிறிஸ்தவனின் சுயாதீனம்'' (The Liberty of a Christian Man) என்னும் மூன்ரும் பிரபந்தத்தை எழுதினுர். இந்நூலில், கிறுஸ்தவன் எல்லாரிலும் மிகச் சுயாதீனமான மனிதன். எனினும், அவன் எல்லாருக்கும் பொறுப்புள்ள ஊழியக்காரனுமாவான் என்று விளக்கியிருக்கிருர்.

இவை மூன்றும் லூத்தரின் சீர்திருத்தப் பிரபந்தங்கள். இவை 1520ம் ஆண்டில் எழுதப்பட்டன. சீர்திருத்தக்காரராகிய லூத்தரின் தனிச்சிறப்புத் தன்மையை இந்நூல்களிலிருந்து அறியலாம். போப்பானவர் லூத்தரை சபைக்குப் புறம்பாக்கின கட்டளை உயிற்றென்பர்க்கில் அவரிடம் கிடைத்தபோது 1520 டிசம்பர் 10ம் நாள் அவர் அதையும் போப்பானவரின் சட்டங்களடங்கிய நூல்களையும் சுட்டெரித்தார்.

லித்தன்பர்க் என்ற சிறுபட்டணத்தில் சிறிதளவாக ஆரம்பமான சீர்திருத்தம் ஜெர்மனி எங்கும் பரவினதால் 1521 ஜனுவரி 28ம் நாள் ஐந்தாம் சார்ல்ஸ் பேரரசனுல் வொர்ம்ஸ் நகரில் கூட்டப்பட்ட அரசு ஆய்வுமன்றத்தில் (Diet of Worms) லூத்தர் தமது நியாயத்தைக் கூற அழைக்கப்பட்டார். (ஸ்பானியாவிலுள்ள முதலாம் சார்ல்ஸ் 1519ல் புனித உரோமை அரசாங்கத்திற்குப் பேரரசனுகத் தெரிந்தெடுக்கப்பட்டார். அது முதல் அவர் ஐந்தாம் சார்ல்ஸ் என்று அழைக்கப்பட்டார்.) அதை அறிந்த அவரது நண்பர்கள் பலர், முன் யோவான் உஸ் என்பவருக்குச் சம்பவித்ததுபோல அவருக்கும் ஜீவனுக்கு அபாயம் வருமென்று அஞ்சி, அவர் மன்றத்திற்குப் போகாதிருக்கத்தடை செய்ய முயற்சித்தனர். லூத்தர், தமது சத்துருக்கள் வானளாவத்தக்க தீயை வளர்த்தாலும் கர்த்தருடைய நாமத்தில் தாம் அங்கே செல்வது உறுதியெனக் கூறினுர். அவரது நண்பராகிய ஸ்பாலட்டினும் (Spalatin) அவருக்குத் தடைசெய்து ஒரு கடிதம் அனுப்பினதற்குப பதிலாக வொர்ம்ஸ் நகரின் வீடுகளின் மேல் எத்தனை ஓடுகளுண்டோ அத்தனை எண்ணிக்கையான

பேய்கள் வொர்ம்ஸ் நகரில் இருந்தாலும் நான் அங்கேசெல்வேன் என்று லூத்தர் எழுதினர்.

இவ்வாறு, கர்த்தர் பேரில் நம்பிக்கை வைத்தவராய் ஏப்ரல் **16**ம் நாள் வொர்ம்ஸ் நகரடைந்தார். ஏப்ரல் **17**ம் நாள் பேரரசனின் அரண்மனை மண்டபத்தில் ஒரு பெரும் கூட்டத்தின் நடுவில் நிற்க, அவர் எழுதிய நூல்களும் மேசையில் வைக்கப்பட்டிருந்தன. அவை லூத்தரால் எழுதப்பட்டவைதாமு வென்றும், அவற்றிலடங்கிய உபதேசங்களை லூத்தர் கைவிடலாமாவென்றும் அவரிடம் கேட்கப்பட்டது. லூத்தர் அதற்குப் பதிலாக, அவை தம்முடையவைதானென்றும், அங்கு வைக்கப்படாத வேறு நூல்களையும் தாம் எழுதியுள்ளதாகவும், அடுத்த வினுவுக்குப் பதிலளிப்பதில் திருமறைக்குக் குறைவு வராமலும், தமது ஆத்துமாவுக்கு நஷ்டம் வராமலுமிருக்க வேண்டுமாதலால், அடுத்த நாள் கூறத் தவணை கேட்டுக்கொண்டார்.

அடுத்த நாளாகிய **1521** ஏப்ரல் **18**ம் நாள் லூத்தரின் வாழ்க்கையில் ஒரு பெரிய நாள். ஒரு மாபெரும் கூட்டத்தில் திருமறையைக்கையிலேந்தினவராய் தம் உபதேசங்களைக்கைவிட மறுத்து "வேறொன்றும் செய்யத் திறனிலேன். இங்கு நிற்கின்றேன். கடவுளே, எனக்கு உதவியருளும், ஆமென்." (**"I cannot do otherwise, here I stand. God help me, Amen'**) என்ற புகழ் பெற்ற வாசகத்தைக் கூறினுர்.

அனைவரும் அவரது மரணத்தை எதிர்பார்த்தனர். ஆனுல் அரசாங்கத்திற்குள் அவருக்கும் தடை ஆணை விதிக்கப்பட்டது. **1521** மேய் **26**ம் நாள் அவர் அரசாங்கத்திற்குத் தம்மை ஒப்புவிக்க வேண்டுமென்றும், அவருக்கு எவரும் புகலிடம் கொடுக்கவோ, அவர் நூல்களை வாசிக்கவோ செய்யலாகாதென்றும் உத்தரவிடப்பட்டது.

லூத்தர் ஒரு தீங்கின்றி வெளியே கொண்டு செல்லப்பட்டார். **1521** ஏப்ரல் **26**ம் நாள் லூத்தர் வொர்ம்ஸ் நகரை விட்

டுப் புறப்பட்டார். அரசியல் வீரர்கள் அவரைக் கைப்பற்றுமுன் அவரது நண்பர்கள் அவரைப் பிடித்து எய்சினேக்குக்கு (Eisenach) அருகிலுள்ள உவார்ட்பெர்க் மாளிகையில்(Wartburg Castle) மறைவாய் வைத்துவிட்டனர்.

உவார்ட்பெர்கில் பத்து மாதங்கள் மறைவிலிருந்தார். அச் சமயம் எரு போர்வீரனைப்போல் ஆடை அணிந்து 'வீரதிருத் தகை ஜியார்ஜ்' (Squire George) என்னும் பெயரையும் வைத் திருந்தார். அக்காலத்தில் லூத்தர் சில முக்கியமான இலக்கியங் களை எழுதினுர். "துறவற ஒப்பந்தங்கள்"? (On Monastic vows) என்னும் பிரபந்தத்தில் குருக்களும் துறவிகளும், பெண் துறவிகளும் (nuns) துறவறத்தைவிட்டுத் திருமணம் செய்ய வேண்டுமென்றும், அவர் எழுதியுள்ளார். போதகர்களுக்கு உத வியான ஒரு நூலையும் ("Epistle and Gospel Postil") அவர் இயற்றினுர். லூத்தர் இங்கே புதிய ஏற்பாட்டையும் ஜெர்மானிய மொழியில் மூலமொழியாகிய கிரெக்க மொழியிலிருந்து மொழி பெயர்த்தார். 1522 செப்டம்பர் மாதம் அது அச்சிட்டு வெளி யானது. பழைய ஏற்பாடும் 1532ல் வெளிவந்தது.

லூத்தரின் மொழிபெயர்ப்புகள் ஒரு திருப்பு கட்டமாய் விளங்கின. இதற்குமுன் தோன்றின மொழிபெயர்ப்புகள் லத் தீன் மொழிபெயர்ப்பிலிருந்து செய்யப்பட்டன. ஆனுல் லூத்தர் 1516ல் எராஸ்மஸ் வெளியிட்ட கிரேக்க பிரதியை ஆதாரமாய்க் கொண்டுள்ளது. அவரது பழைய ஏற்பாடு மொழி பெயர்ப்பு மூலமொழியாகிய எபிரேய மொழியிலிருந்து மொழிபெயர்க்கப் பட்டது.

லூத்தர் உவார்ட் பெர்க் கோட்டைக்குள் இருக்கையில், சில நண்பர்களால் தமது சீர்திருத்த எண்ணங்களுக்கு வந்த பெரிய மோசம் அக்கோட்டையை விட்டு லித்தன்பர்க் பட்டணத்துக்குத் திரும்பும்படி அவரை ஏவினது. லித்தன்பர்க்கில் குருவாயிருந்த கார்ல்ஸ்தாத் (Carlstadt) புரட்சிகரமாக தமது எண்ணங்களைச்

செயல்படுத்தலானூர். ஆலயத்திலிருந்த சொருபங்களையும் படங்களையும் அவரும் அவருடைய நண்பர்களும் தகர்த்து கல்வி கற்பதில் பயனில்லையென்று போதித்து கலகத்தை உண்டு பண்ணினூர்கள். ஸ்விக்காவிலிருந்து (Zwikau) நிக்கோலா, தோமா, மாற்கஸ் ஆகிய வேறு சிலர் எழும்பி சிறு பிள்ளைகளுக்குத் திருமுழுக்குக் கொடுப்பதை எதிர்த்தனர். எனவே, லூத்தர் **1522**, மார்ச் 7ம் நாள் லித்தன்பர்க் அடைந்து அநேக நல் உபதேசங்கள் சொடுத்து கலகத்தை நிறுத்தினூர். சுவிக்கா கலகக்காரரும் பிரபுக்களால் தண்டிக்கப்பட்டு அடக்கப்பட்டனர்.

**1525**, ஜூன் 13ல் காதரின் என்ற பெண் துறவியை லூத்தர் திருமணஞ் செய்தார். போதகர் குடும்பமாக சபை வீட்டில் வாழும் சிறந்த முறைக்கு லூத்தர் அடிக்கல் நாட்டினூர். அவரது இல்லற வாழ்க்கை சபைக்கு ஒரு எடுத்துக் காட்டாய் விளங்கினது. பாடலில் லூத்தர் ஆர்வமுள்ளவராகையால் குடும்பமாக பாடல்கள் பாடி கர்த்தரை மகிமைப்படுத்தினூர்கள்.

லூத்தர் ஒரு ஆராதனை ஒழுங்கையும் உருவாக்கினூர். முப்பத்திரண்டு பாடல்களடங்கிய ஒரு பாட்டுப் புத்தகத்தையும் லூத்தர் பிரசுரித்தார். திருமுழுக்கு ஒழுங்கையும் திருமண ஆராதனை முறையையும் லூத்தர் மாற்றி அமைத்தார். புனித நற்கருணை ஆராதனையில் அப்பமும் ரசமும் கொடுக்கப்பட்டன.

புனித நற்கருணையில், "இது என் சரீரம்" என்னும் வார்த்தைகளை லூத்தர் அப்படியே நம்பினூர். ஆகவே, நற்கருணை ஆராதனை தகுதியற்றவர்களால் நடத்தப்பட்டாலும் நற்கருணை பொருட்களில் கிறிஸ்துவின் மெய்யான பிரசன்னம் இருக்கிறதென்றும், நற்கருணையைப் பெற்றுக் கொள்ளுகிறவர்கள் உண்மையாகவே கிறிஸ்துவின் சரீரத்தைப் புசித்து, கிறிஸ்துவின் இரத்தத்தைப் பானம் பண்ணுகிறூர்களென்றும் லூத்தர் வலியுறுத்தினூர். கடவுள் வெறும் அடையாளங்களினூல் மக்களைப் பரிகசிக்கிறதில்லை என்பது அவரது எண்ணம்.

அரசாங்கமும் திருச்சபையும் வேறு என்பது லூத்தரின் எண்ணம். ஆவிக்குரிய காரியங்களில் அரசாங்கம் திருச்சபை யில் தலையிடலாகாது. ஆனால் திருச்சபை அரசாங்கத்திற்கு நாட்டு காரியங்களில் அடங்கியிருக்க வேண்டும். எனினும், செயல் முறையில் திருச்சபை தன்னில்தான் இயங்கக்கூடாதபடி நல்ல ஆட்சி முறை இல்லாதபடியால் அரசாங்கம் சபை காரியங் களை நடத்துவதை லூத்தர் ஒப்புக்கொண்டார்.

**1529**ல் லூத்தர் யோவான் பிரபுவின் ஆளுகைக்குட்பட்ட சாக்சோனிய நாடுகளிலிருக்கும் குருக்கள் சபையோர் ஆகியோ ரின் நிலமையைப் பற்றி விசாரணை செய்யச் சென்றார். அவர்க ளின் குறைகளை அவர் உணர்ந்து அவர்கள் பயனடைய **1529**ல் பெரிய ஞானோபதேசங்களையும் (**The Large Catechism**) சிறிய ஞானோபதேசங்களையும் (**The Small Catechism**) பிரசுரித்தார்.

ஜெர்மனியில் வடபாகத்தார் லூத்தரின் கொள்கைகளுக்குச் சார்பாயிருக்க தென் பாகத்தார் சீர்திருத்தத்திற்கு எதிராயிருந் தனர். எனவே **1529**ல் ஒரு ஆய்வு மன்றம் ஸ்பையர்ஸில் (**Diet of Spires**) 5ம் சார்ல்ஸ் பேரரசனால் கூட்டப்பட்டது. அக் கூட்டம் சீர்திருத்தக்காரர்களுக்கு விரோதமாகத் தீர்ப்புச் செய்து உரோமன் கத்தோலிக்க ஒழுங்குகளை எங்கும் ஆசரிக்க உத்தர விட்டது. சுவிசேஷ சபையின் ஸ்தானபதிகள் இதை அங்கீகரி யாமல் எதிர்மறுத்து **1529** ஏப்ரல் **19**ம் நாள் உரோமன் கத்தோ லிக்க சபையிலிருந்து பிரிந்து விட்டனர். ஸ்பையர்ஸ் ஆய்வு மன்றத் தீர்ப்புகளை எதிர் மறுத்ததால் புராட்டஸ்தாந்தர் (**Protestants**) அல்லது எதிர் மறுக்கிறவர்கள் என்று பெயர் பெற்றனர். எதிர் மறுப்பு வாசகம் மன்றத்தில் அந்நாளில் வாசிக்கப்பட்டது.

அதன் பின்னர் லூத்தரைச் சார்ந்தவர்கள் தங்களிடங்களி லுள்ள அத்தியட்சர்களை நீக்கிவிட்டு வேறு மேற்பார்வையாளர்

களை ஏற்படுத்தி, ஆராதனைகளையும் சீர்திருத்தினார்கள். லூத்தர் எழுதின ஞானோபதேசங்கள் முக்கியமாய் பயன்படுத்தப்பட்டன.

**1530**ம் ஆண்டு சுவிசேஷ லூத்தரன் சபையாருக்கு மிக முக்கிய ஆண்டாயிற்று. **1530**ல் ஆக்ஸ்பர்க்கில் நடந்த அரசாங்க ஆய்வு மன்றத்தில் (**Diet of Augsburg**) துருக்கியருக்கு விரோதமாக சுவிசேஷ சபையாரை ஒருமைப்படுத்த தங்கள் எண்ணங்களை எழுதி வாசிக்குமாறு பேரரசன் கேட்டுக்கொண்டார். மூன்று அறிக்கைகள் கொண்டு வரப்பட்டன. சுவிங்கிளியின் (**Zwingli**) அறிக்கையும் தென் ஜெர்மானிய லூத்தரன் சபை அறிக்கையும் வாசிக்கப்பட பேரரசனால் அனுமதிக்கப்படவில்லை. மெலங்க்தான் என்பவரால் எழுதப்பட்டு லூத்தரால் அங்கீகரிக்கப்பட்ட ஆக்ஸ்பர்க் அறிக்கை (**Augsburg Confession**) ஜூன் **25**ம் நாள் வாசிக்கப்பட்டது. அது இருபத்தெட்டு விதிகள் அடங்கப்பெற்றுள்ளது. அவற்றில் இருபத்தொன்று லூத்தரன் சட்டங்களும், ஏழு தவறென்று கருதப்படும் சட்டங்களுமாகும். உரோமன் கத்தோலிக்கரும் பேரரசனும் ஒப்புக்கொள்ளத் தக்க விதத்தில் அவை அமைக்கப்பட்டிருந்தன. எனினும் உரோமன் கத்தோலிக்கர் அவ்வறிக்கையை எதிர்த்தனர். அப்பொழுது இறையியல் வல்லுனர்களடங்கிய ஒரு குழுவினால் இரு கட்சிகளையும் ஒப்பந்தம் பண்ண முயற்சி எடுக்கப்பட்டது ஆனால் அது பயன்படவில்லை. **1531,** ஏப்ரல் **15**க்குள் உரோமன் கத்தோலிக்க சபைக்குக் கீழடங்காவிடில் பலத்தால் அடக்கி ஆளப்படவேண்டுமென்று மன்றத்தில் தீர்மானிக்கப்பட்டது. ஆக்ஸ்பர்க் விசுவாசஅறிக்கை உலகமெங்குமுள்ள லூத்தரன் கிறிஸ்தவர்களுக்கு நற்காலத்திலும் ஆதாரமாயுள்ளது.

**1546,** ஜனுவரி மாதம் லூத்தர் லித்தன்பர்க்கிலுள்ள மான்ஸ்பீல்டில் இரு பிரபுக்களுக்குள் ஏற்பட்ட சண்டையைத் தீர்க்குமாறு தமது பிறந்த ஊராகிய எயில்பெனுக்குச் சென்றார். சகோதரர்களான அவ்விருவருக்குள் சமாதான ஒப்பந்தத்தை ஏற்படுத்தி, மான்ஸ்பீல்டின் கிராமப் பாடசாலைகளுக்காக ஒரு

நன்கொடையையும் பெற்றுக்கொண்டார். அதன்பின் நான்கு அருளுரைகளும் செய்து இருமுறை புனித நற்கருணையும் வாங்கினார். தமது இறுதி அருளுரையின் முடிவில், கடவுளின் வசனத்தை நாம் நன்றியறிதலோடு ஏற்றுக் கொள்ளவும், தமது குமாரனும் நமது கர்த்தருமாகிய இயேசுகிறிஸ்துவை விசுவாசிக்கிற விசுவாசத்திலும் அறிகிற அறிவிலும் அதிகரிக்கவும் அவருடைய வசனத்தின் அறிக்கையில் இறுதிவரை உறுதியாய் நிலைத்திருக்கவும் கடவுள் நமக்குக் கிருபை செய்வாராக, ஆமென் என்று உரைத்தார்.

பெப்ருவரி **16**ம் நாள் அவர் அதிக வியாதிப்பட்டார். இறுதியில் தமக்காகவும் குறிப்பாக திருச்சபைக்காகவும் ஜெபித்து தமது விசுவாசத்தை வெளிப்படுத்தும் பல வார்த்தைகளையும் மொழிந்தார். பின்பு பிதாவே, உம்முடைய கையில் என் ஆவியை ஒப்புவிக்கிறேன்; சத்தியபரனாகிய கர்த்தாவே தேவரீர் என்னை மீட்டுவிட்டீரென்று மும்முறை கூறினார். அப்பொழுது ஜஸ்ற்றஸ் ஜோனஸ்என்பவர் அவரை நோக்கி "நீர்இயேசுகிறிஸ்துவிலும், நீர் போதித்த உபதேசத்திலும் அசையாது நிற்கிறீரா?" என்று கேட்க, அவர் "ஆம்" என்று கூறி மரணமடைந்தார்.

லூத்தர் ஆரம்பித்த சீர்திருத்தத்தைப் பலர் தொடர்ந்து நடத்தலானார்கள். எனினும், சீர்திருத்த சபைக்குள் கருத்து வேறுபாடுகள் இருந்தன.

*1555* செப்டம்பர் 25ம் நாளில் **ஆக்ஸ்பர்க் சமாதான ஒப்பந்தம் (The Peace of Augsburg)** உருவாக்கப்பட்டது அதற்கிசைய லூத்தரைப் பின்பற்றினவர்களுக்கும் உரோமன் கத்தோலிக்கருக்கும் தங்களுக்குரிய உரிமைகள் அளிக்கப்பட்டன. அரசர்கள் தங்கள் ஆதீனத்திலுள்ள மக்களுக்கு இவ்விரண்டிலும் எந்த பிரிவை அனுமதிக்கவேண்டுமென்பதைத் தீர்மானிக்க சுயாதீனமுண்டு. மக்களுக்கு அவ்வுரிமை இல்லை. அரசர் எப்பிரிவைச் சார்ந்தவரோ அதையே குடிகளும் பின்பற்ற

வேண்டும். கத்தோலிக்கரில் ஒருவன் புராட்டஸ்தாந்து பிரிவைத் தழுவினுல் அவன் அவ்விடத்தைவிட்டு புராட்டஸ்தாந்து கிறிஸ் தவர்கள் வாழும் இடத்திற்கு சென்றுவிடவேண்டும். இவ்வாறு ஜெர்மனி நாடு கத்தோலிக்க புராட்டஸ்தாந்து எனும் இரு பாகங் களாக அமைந்தது.

---

## 2. ஜெர்மானிய சுவிட்சர்லாந்தில் சீர்திருத்தம்

ஜெர்மானியில் லூத்தர் ஏற்படுத்திய சீர்திருத்தம் பரவுகையில் ஸ்விட்சர்லாந்தில் இதுபோன்றதொரு சீர்திருத்த இயக்கம் அல் றிச் ஸ்விங்கிளி (**Ulrich Zwingli**) என்பவரால் ஆரம்பிக்கப்பட் டது.

**ஸ்விங்கிளி** *1484* ஜனுவரி *1*ம் நாளில் ஸ்விட்சர்லாந்தி லுள்ள வில்ட்ஹாஸ் (**Wildhaus**) என்னும் நகரில் பிறந்தார். அவருடைய தந்தை அந்நகரில் குற்றயியல் நடுவராகவும் அவ ரது மாமனுர் அங்கே குருவாகவும் பணியாற்றினர். ஸ்விங்கிளி பேசில் பல்கலைக் கழகத்தில் முது கலைஞராகத் தேர்வுபெற்று **1506**ல் கிளாரசில் (**Glarus**)குருவாக நியமிக்கப்பட்டார். பின்னர் **1518**ல் சூரிச் (**Zurich**) என்னுமிடத்திலுள்ள பெரிய சபையில் அவர் குருவானுர்.

**1519**ல் ஸ்விங்கிளியின் வாழ்க்கையில் திருப்பம் ஏற்பட் டது. அவர் லூத்தர் எழுதிய பல நூல்களைப் படித்ததினுல் ஒரு புதிய எண்ணம் அவருக்குள் உருவானது. அஃதுடன் அவரது வாழ்க்கையில் திருப்பம் ஏற்படும் மற்ருெரு காரணமும் உண்டா னது. சூரிச் நகரில் கொள்ளை நோய் பரவி மக்களில் மூன்றி லொரு பங்கைக் கொள்ளைகொண்டது. ஸ்விங்கிளியும் கொள்ளை நோயால் தாக்கப்பட்டு மாணத்தறுவாயிலிருந்தார். அப்பொழுது

அவர் தம்மை ஆண்டவருடைய சேவைக்கென்று அர்ப்பணித்து கடவுளை நோக்கி அபயமிட்டார். லூத்தரைப்போல் பாவத்தையும் கடவுளின் கிருபையையும் பற்றிய ஆழமான அனுபவமுடையவரல்ல. கடவுளின் சித்தத்திற்கு ஒப்புக்கொடுத்தலே அவரது மனமாற்றத்தின் முக்கிய அம்சமாயிருந்தது.

ஸ்விங்கிளி சீர்திருத்தத்தின் மூன்று தத்துவங்களை முழுமையாக ஒப்புக்கொண்டிருந்தபோதிலும் லூத்தரின் மனநிலையிலிருந்து வேறுபட்டவராயிருந்தார். இக்காரணத்தால் இருவரது வாழ்க்கையும் திருப்பணியும் வித்தியாசமான போக்கிலிருந்தது. ஆகவே ஜெர்மானிய புராட்டஸ்தாந்து கிறிஸ்தவர்களும் ஸ்விட்சர்லாந்து புராட்டஸ்தாந்து கிறிஸ்தவர்களும் ஒரே அமைப்புக்குள் வரக்கூடாமற்போனார்கள்.

ஸ்விங்கிளி லூத்தர் ஆகிய இருவரும் கத்தோலிக்க சபையில் பிறந்து, வளர்ந்து, பயிற்சிபெற்று குருக்களாயிருந்தனர். இருவரும் கத்தோலிக்க சபையைவிட்டுப் பிரிந்தனர்.

இருவரும் அறிஞர்களாய், அஞ்சாத நெஞ்சுடையவர்களாய், நேர்மையான ஆவியுடையவர்களாயிருந்தனர். பிறரைக் கவர்ந்துகொள்ளும் திறனில் லூத்தர் மேற்பட்டவராயிருந்தார். இணங்கும் தன்மையில் ஸ்விங்கிளி லூத்தரைவிடச் சிறந்தவராய் விளங்கினார்.

இருவரும் பாட்டில் ஆர்வமுடையவர்களாயும், பெரும் அருளுரையாளர்களாகவும் திகழ்ந்தனர். லூத்தர் துறவறத்தின் மூலமாகவும் போராட்டங்கள் மூலமாகவும் சீர்திருத்தவாதியானார். ஸ்விங்கிளியோ அறிவின் மூலம் சுவிசேஷத்தின் உண்மையை அறிந்து சீர்திருத்தத்தில் ஈடுபட்டார். அவருக்குத் திருமறை கடவுளின் சித்தத்தை வெளிப்படுத்தும் நூல்.

இருவரும் திருமறையை கடவுளின் வார்த்தையாகவும், வாழ்க்கைக்கும் விசுவாசத்திற்கும் ஆதாரமாயும் எண்ணினர். இரு

வரும் திருமறையைத் தங்கள் நாட்டு மொழியில் மொழிபெயர்த்து சாதாரண மக்களும் அதை அறிந்துகொள்ளச் செய்தனர். எனினும், திருமறையை உபயோகித்த விஷயத்தில் இருவரும் வேறுபட்டனர். லூத்தர் கத்தோலிக்க சபையிலுள்ள குறைகளை மாற்றுவதற்காகத் திருமறையை பயன்படுத்தினர். எனினும் இடைக் காலத்தில் தோன்றிய சடங்குகளையும் ஆசாரங்களையும் கைவிடவில்லை. எனவே, சொரூபங்கள் வைத்தல், ஆலய மணிகள், ஆலய அலங்காரப் பணிமூட்டுகள் ஆகியவற்றை ஆதரித்தார். ஸ்விங்கிளி திருமறைக்கு வேறுபாடான யாவற்றையும், மூட நம்பிக்கைக்குரியவற்றையும் வெறுத்துத் தள்ளினர். ஆவிக்குரிய நிலையையே அவர் வலியுறுத்தினர்.

லூத்தர் கடவுளின் வார்த்தையின் மூலமாகவும் சாக்கிரமெந்துகள் மூலமாகவுமே தூய ஆவியானவர் செயலாற்றுகிருரென்று போதித்தார். ஸ்விங்கிளி மனித உள்ளத்தில் நேரடியாகத் தூய ஆவியானவர் செயலாற்றுவதை வற்புறுத்தினர். எனவே, கிறிஸ்தவர்களல்லாத கவிஞர்களின் சிறப்புக்குரிய கருத்துக்களும் கடவுளின் ஆவியானவரால் தூண்டப் பட்டவையென்று கூறினர். புறமதத்தினரிலும் பக்தியுள்ளவர்கள் இரட்சிக்கப்பட்டவர்களென்று கருதினர். எனவே, சாக்கிரட்டீஸ், செனக்கா, கேற்ரோ, ஹெர்குலீஸ் என்பவர்கள் அவரது பரிசுத்தவான்களின் பட்டியல் வரிசையில் உட்படுத்தப் பட்டிருந்தனர்.

மனித முயற்சியின்றி விசுவாசத்தினுல் நீதிமானுக்கப்படுதலை லூத்தர் வற்புறுத்தினுர். ஆகவே, சபைச் சீர்திருத்தத்தை நாட்டுக் காரியங்களோடு அவர் இணைக்கவில்லை. ஆனுல் ஸ்விங்கிளியின் எண்ணத்தில் ஆவிக்குரிய வாழ்க்கையிலும் அரசியல் துறையிலும் மறுவாழ்வு தேவையென்பதை உணர்ந்து போராடினுர். எனவே, ஸ்விங்கிளி சமூக சீர்திருத்தத்தை நோக்கினவராய் சுவிசேஷத்த அர்த்தப்படுத்தினுர். ஆனுல் லூத்தர் ஆத்தும ரட்சிப்பையே முதன்மையாகக் கருதினுர். சபையும், அரசாங்கமும் ஒன்றுக்கொன்று வேறுபட்டதாக லூத்தர் எண்ணி

ஞர். ஆனால் ஸ்விங்கிளி இரண்டையும் இணைத்து அரசாங்கத்தைச் சபைக்குக் கீழ்ப்பட்டதாக எண்ணினர். பட்டயமானது அரசாங்கத்திற்கே உரியதென்றும், சுவிசேஷத்தைப் புரட்சியினாலோ, போரினாலோ பரப்பலாகாதென்று லூத்தர் சாதித்தார். ஆனால், ஸ்விங்கிளி போரின் மூலமாகவும் சீர்திருத்தத்தைப் பரப்ப முயற்சித்தார். சுருங்கச் சொல்லின், லூத்தர் மலைப்பிரசங்க ஆவியுடையவராயும், ஸ்விங்கிளி பழைய ஏற்பாட்டு ஆவியுடையவராயும் பணியாற்றினர்கள்.

ஸ்விங்கிளியின் இறையியலுக்கு கடவுளின் சித்தம் நடுமையமாயிருந்தமையால் கடவுளின் தெரிந்தெடுத்தலுக்கும் முன்குறித்தலுக்கும் முக்கியம் கொடுக்கப்பட்டது. லூத்தரின் இறையியலுக்குக் கடவுளின் அன்பு நடுமையமாயிருந்தமையால், கிறிஸ்துவில் வெளிப்பட்ட அன்பும் கிருபையும் வலியுறுத்தப்பட்டு முன்குறித்தல் அழுத்தப்படவில்லை.

முன் பாவத்தைக் குறித்தும் இருவருக்குள் கருத்து வேறுபாடு இருந்தது. ஸ்விங்கிளி முன்பாவத்தை மனிதருக்குள்ளிருக்கும் ஒரு நோயாகவே நினைத்தார். அதினால் மனிதன் குற்றவாளியாவதில்லையென்பது அவரது எண்ணம். ஆனால் லூத்தர் முன்பாவம் தனித்தனி மனிதனைக் குற்றவாளியாக்குகிறதென்று கருதினர். பிறக்கும் குழந்தைகளும் அக்குற்றத்திற்கு உட்பட்டபடியால் குழந்தைகளுக்குத் திருமுழுக்காட்டுதல் அவசியமானதென்றாரவர். ஆனால் ஸ்விங்கிளி தனிக்குற்றத்தை வற்புறுத்தவில்லை. குற்றத்திற்குத் தூண்டும் தீயோன் ஆட்தன்மையுடையவனென்பதையும் அவர் அங்கீகரிக்கவில்லை:

**1519**ன் பிந்தின காலத்தில் ஸ்விங்கிளியின் சீர்திருத்த வேலை ஆரம்பமானது. சூரிச்சில் தண்டனைச் சலுகைச் சீட்டுகளை விற்பனை செய்த பெர்னாட் சேம்சன் என்பவரை முதற்கண் அவர் கடுமையாய்த் தாக்கினர். **1520**ல் உத்தரிக்குமிடத்தைப்பற்றிய கோட்பாட்டையும், பரிசுத்தவான்களிடம் மன்றாடுவதையும்,

தசமபாகம் செலுத்துதலேயும், உபவாசத்தையும், துறவறத்தையும் எதிர்த்து உரைகளாற்றினர். ஆராதனை முறையை நாட்டு ஒழுங்கில் அவர் பிரசுரித்தார். திருமறையினுல் ரூபிக்கக் கூடியதையே அருளுரையாளர்கள் போதிக்க நகராலோசனைச் சங்கம் ஒரு கட்டளையை வெளியிடவும் ஸ்விங்கிளி ஏவினுர்.

**1522**ல் ஸ்விங்கிளி செய்ததொரு அருளுரையில் லெந்து காலத்தில் புலால் உண்பதை வெறுப்பதற்குத் திருமறையில் ஆதாரமில்லையென்று போதித்தார். அவ்வாண்டு ஏப்ரல் மாதத்தில் ஒரு கைப்பிரதியையும் அதை நிலைநிறுத்த வெளியிட்டார். ஆகஸ்ற் மாதத்தில் கத்தோலிக்க சபை பாரம்பரியத்தைத் திருமறையோடு இணைப்பதை எதிர்த்து திருமறையின் அதிகாரமே ஒரு கிறிஸ்தவன் ஒப்புக்கொள்ள வேண்டிய அதிகாரமென்ருர். சபையின் அதிகாரத்திற்கு மாருக, அவர் **1522** ஜூலை மாதம் அன்ன றெயின்ஹார்ட் (**Anna Reinhart**) என்னும் மங்கையை திருமணஞ்செய்தார்.

இவ்வித தீவிர செயல்களினுல் ஸ்விங்கிளி உரோமைச் சபையின் சில கோட்பாடுகளுக்கு விரோதமாய்த் தன் எதிர்ப்பைத் தெரிவித்தார்; சபையின் அதிகாரத்திற்கு மாருக சுவிசேஷத்தின் அதிகாரத்தை வலியுறுத்தினர். போப்புவானவரின் அதிககாரத்தையும், பரிசுத்தவான்களைத் தொழுதல், நற்கிரியைகளினுல் வரும் புண்ணியம், உபவாசங்கள், பண்டிகைகள், புண்ணிய யாத்திரைகள், துறவற ஒழுங்குகள், மணமாகாநிலை, தண்டனைச் சலுகை, உத்தரிக்குமிடம் ஆகியவை மனிதரின் சூழ்ச்சியேயன்றி திருமறையில் அவற்றிற்கு ஆதாரமில்லையென்று வாதித்தார்.

**1523**, நவம்பர் **17**ல் 'சிறிய கிறிஸ்தவ முகவுரை' (**Short Christian Introduction**) என்னும் நூலை ஸ்விங்கிளி வெளியிட்டு அதில் சீர்திருத்தத்திற்கு அடிப்படையானவிதிகளை விளக்கினுர். ஆலயங்களில் படங்கள், சிலைகள் இருத்தல் விக்கிரகாராதனைக்கு ஏவுமாகையால் அவை நீக்கப்படவேண்டுமென்று கூறி

ணர். நற்கருணை ஆராதனையில் அவசியமில்லாத சடங்குகள் ஒடுக்கப்படவேண்டுமென்றும் அவர் கருதினர்.

**1524**ல் சூரிச் நகராலோசனைச் சங்கம் அவரது கொள்கைகளை அங்கீகரித்தது. ஒரு புதிய ஆராதனை முறையும் செயலாக்கப்பட்டது. அதற்கிசைய அருளுரைக்கு முக்கிய இடம் கொடுக்கப்பட்டது.

**1525** ஏப்ரல் **13** பெரிய வியாழன் அன்று கிரேட்மின்ஸ்டர் ஆலயத்தில் மாஸ் **(Mass)** திருவிருந்தாராதனையாக மாற்றி அமைக்கப்பட்டது. அப்பமும் ரசமும் போதகரால் பிரதிஷ்டை செய்யப்பட்டபின் டீக்கன்மார் அவற்றைச் சபையாருக்கு விளம்பினார்கள்.

ஸ்விங்கிளி கிறிஸ்தவ அறிவை ஆதரித்து, பாடசாலைகள் ஏற்படுத்தப்படவும் ஊக்குவித்தார்.

**1524**க்கும் **1529**க்கும் இடையில் ஸ்விங்கிளி மறுமுழுக்கு வாதி **(Anabaptists)**களோடு போராடவேண்டியதிருந்தது. மறுமுழுக்குவாதிகள் ஒடுக்கப்பட்டு நாட்டை விட்டுத் துரத்தப்பட்டனர்.

ஸ்விங்கிளி உருவாக்கிய சீர்திருத்தமானது சூரிச்சிலிருந்து ஸ்விட்சர்லாந்தின் ஏனைய பாகங்களுக்கும் பரவினது. ஆனால் கத்தோலிக்கராயிருந்தவர்கள் இராணுவ பலத்துடன் புராட்டஸ்தாந்தினரை எதிர்த்தனர். **1531**ல் ஸ்விங்கிளி போர்க்களத்தில் மாண்டார். அதன்பின் ஏற்பட்ட சமாதானத்தின் மூலம் ஸ்விட்சர்லாந்தில் புராட்டஸ்தாந்தினருக்கும் கத்தோலிக்கருக்குமிடையில் எல்லை வரையறுக்கப்பட்டது. நாளடைவில் ஸ்விங்கிளி இயக்கம் குன்றுதலடைந்தது. கால்வின் ஆரம்பித்த இயக்கம் அதை மேற்கொண்டது.

# 3. பிரெஞ்சு சுவிட்சர்லாந்தில் சீர்திருத்தம்

பிரெஞ்சு நாட்டில் சீர்திருத்தத்தைப் பற்றி அருளுரையாற்றின காரணத்தால் அந்நாட்டை விடவேண்டியவராயிருந்தவர் பேரல் (Farel) என்பவராகும். அவர் சுவிட்சர்லாந்தில் பிரெஞ்சு மொழி பேசப்படும் பாகத்திற்குச் சென்று வெற்றிகரமாகப் பணியாற்றினர். ஜெனீவாவிலும் இதர நகரங்களிலும் அவரது வேலை பரவினது.

ஜெனீவாவில் பேரல் ஒரு பொது ஆராய்ச்சிக் கூட்டம் நடத்தினர். அதன் விளைவாக, ஆலயங்களிலிருந்து சிலைகள் நீக்கப்பட்டன. மாஸ் (Mass) தவிர்க்கப்பட்டது. துறவிகள் துரத்தப்பட்டனர். இது 1535ல் நடைபெற்றது. கடவுளின் வார்த்தைக்கு இசையவே செயலாற்ற 1536ல் நடந்த ஒரு பொது மன்றம் தீர்மானித்தது அவ்வாறு நகரம் முழுவதும் புராட்டஸ்தாந்து விசுவாசத்தை ஏற்றுக்கொண்டது. எனவே, எல்லா நிறுவனங்களும் மாற்றி அமைக்கப்பட வேண்டியதாயிற்று. இச்செயலுக்குத் தாம் ஒருவராகத் துணிவது சிரமமென்றுணர்ந்து தமக்கு எதிர்ப்பட்ட ஒரு பிரெஞ்சு வாலிபனைத் துணையாகக் கொண்டார். அவர் மூலமாகவே பேரல் ஆரம்பித்த வேலை முற்றுப்பெற்றது. அவர் யோவான் கால்வின் (John Calvin) என்பவராகும்.

## யோவான் கால்வின்

1509 ஜூலை 10ம் நாள் பாரிஸ் நகருக்கு அறுபது மைல் வடகிழக்கிலுள்ள நோயான் (Noyon) என்னும் நகரில் பிறந்தார் இவர் பாரிஸ் நகரில் கல்வி கற்று உயர்தர மக்களோடு பழகி

வந்தார். சீர்திருத்தத் தலைவர்களில் இவர் ஒருவரே இத்தகைய சிறப்புத்தன்மையுடையவராயிருந்தார்.

கால்வின் ஒரு பக்தியுள்ள கத்தோலிக்காராக வளர்ந்தார். அவர் புத்தி கூர்மையுள்ளவராகவும் உறுதியான பண்புடைய வராகவும் காணப்பட்டார் அவர் குருத்துவ பயிற்சியடைய வேண்டுமென்று விரும்பினுர். எனினும், அவர் கல்லூரியில் இறையியலிலல்ல வாழும் இலக்கியத்திலேயே அதிக ஆர்வமுள்ள வராயிருந்தார். 1528ல் அவரது தந்தையின் விருப்பத்திற்கிசைய பல்கலைக்கழகத்தை விட்டார். அவர் ஒரு வழக்கறிஞராக வேண்டுமென்று திடீரென அவரது தந்தை எண்ணினுர். கால் வின் அதற்கிணங்கி ஆர்லியன்ஸ் பல்கலைக்கழகத்திலும் பின்பு போவர்கஸ் பல்கலைக் கழகத்திலும் சட்ட நூல் கற்று வெகு திறமைசாலியாகத் திகழ்ந்தார்.

கால்வின் திருமறையைப் படிப்பதிலும் விருப்பங்கொண்டார். லூத்தரன் எண்ணங்களையும் கால்வின் அறிந்தார். ஆர்லியன்ஸ் பல்கலைக் கழகத்தில் இரு புராட்டஸ்தாந்து நண்பர்களால் கவரப் பட்டார். அவர்களில் ஒருவராகிய அவரது இனத்தான் பீயர் ருபட் ஓலிவட்டான் (Pierre Robert Olivetan) என்பவர் திருமறையை பிரெஞ்சு மொழியில் மொழி பெயர்த்துள்ளார். இரண்டாம் நண்பர் மெல்கியோர் வால்மர் (Melchior Volmar) இரட்சிப்பைப்பற்றிய லூத்தரின் எண்ணத்தைக் கால்வினுக்கு விளக்கினுர். மேலும் லூத்தர் எழுதிய ஒரு கிறிஸ்தவ மனித னின் சுயாதீனம் (The Liberty of a Chrisian Man) இரு வினு விடை நூல்கள், 1530ம் ஆக்ஸ்பர்க் அறிக்கை ஆகியவற்றையும் கால்வினுக்கு அவர் வழங்கினுர்.

1532 அல்லது 1533ல் கால்வின் திடீரென்று மனமாற்ற மடைந்து புராட்டஸ்தாந்து கிறிஸ்தவரானுர். திருமறையின் மூலம் கடவுள் அவரோடு பேசினபோது, கால்வின் தமது பாவநிலை யின் நிர்ப்பந்தத்தை உணர்ந்தார். கடவுளின் சித்தத்திற்குக் கீழ்ப்

படிய வேண்டுமென்பது அவர் முக்கியமாக உணர்த்தப்பட்ட விஷயம். அவர் கடவுளின் சித்தத்திற்குக் கீழ்ப்படிந்தபோது, கடவுளே அவரை அவ்வாறு செய்யத் தூண்டினதாக உணர்ந்தார். அதன்பின்னர் சுவிசேஷத்திற்காகத் தம் வாழ்க்கையை அர்ப்பணித்தார்.

கால்வின் பாரீசிலுள்ள ஒரு சிறு கூட்டம் புராட்டஸ்தாந்தினரோடு சேர்ந்து அதன் தலைவரானார். புதிய ஏற்பாட்டின் அடிப்படையில் சீர்திருத்தத்தை பாரீசில் செய்ய முயற்சிக்கையில் அவருக்கு எதிர்ப்பு உண்டாகியதால் நகரத்தைவிட்டுச் செல்ல வேண்டியதாயிற்று.

1535ல் 'கிறிஸ்தவ சமயத்தின் சட்டமூலத் தொகுப்புகள்' **(Institutes of the Christian Religion)** என்னும் நூலைக் கால்வின் வெளியிட்டார். இந்நூல் கிறிஸ்தவ கோட்பாட்டைப்பற்றிய ஒரு சிறந்த சுருக்கப் பிரதியாகும். சீர்திருத்தம் பிறப்பித்த நூல்களில் இது மிக சிறப்புக்குரிய நூலாகும். அப்போஸ்தல விசுவாசப் பிரமாணம், திருமறை ஆகியவற்றின் அடிப்படையில் புராட்டஸ்தாந்து கிறிஸ்தவர்களே உரோமைக் கிறிஸ்தவர்களைவிட மெய்யான கத்தோலிக்கர் என்பதை இந்நூலில் கால்வின் தெளிவாகக் காட்டியுள்ளார்.

இந்நூலைக் கால்வின் பிரசுரித்துப் பல இடங்களைச் சுற்றிப் பயணஞ் செய்கையில் பாரல் என்பவரை 1536 ஆகஸ்ற் 5ம் நாள் ஜெனீவாவில் சந்திக்க நேரிட்டது. ஜெனீவாவில் சபையை மாற்றி அமைக்கும் பணியில் தமக்கு உதவிபுரிய பாரல் கேட்டதற்கு இணங்கி ஜெனீவாவில் தங்கலானார்.

கால்வின் இத்தருணத்தைப் பயன்படுத்தித் தம் எண்ணங்களைச் செயல் முறைக்குக் கொண்டுவர முயற்சித்தார். 1537ல் அவரும் பாரலும் நகராலோசனைச் சங்கத்திற்கு முன் சில சிபார்சுகளை வைத்தனர். அவையாவன:

1) கர்த்தருடைய இராப்போசனம் மாதத்திற்கு ஒருமுறை நடத்தப்படவேண்டும்.

2) தகுதியற்றவர்கள் சிட்சிக்கப்படுவதற்காக அவர்களைக் கண்டுபிடிக்க நகரத்தின் ஒவ்வொரு பாகத்திலும் சிலர் நியமிக்கப்படவேண்டும்.

3) கால்வினின் வினுவிடை ஒன்று உபயோகிக்கப்பட வேண்டும்.

4) ஒவ்வொரு நகரவாசியும் ஒரு விசுவாசப் பிரமாணத்தை அனுசரிக்க வேண்டும்.

ஆனால் ஜெனீவா நகரம் இம்மாறுதல்களுக்கு ஆயத்தமாக்கப்பட்ட நிலையில் இருக்கவில்லை. ஒரு புதிய கட்டுப்பாட்டை மக்கள் விரும்பவில்லை. கால்வினும் பாரலும் தங்கள் எண்ணங்களைக் கைவிடவும் விரும்பவில்லை. எனவே அவர்கள் நகரத்தை விட்டுப்போக வேண்டியதாயிற்று.

கால்வின் ஸ்டிராஸ்பெர்கில் ஒரு போதகப் பணியை ஏற்றுக்கொண்டார். அங்கே அவருக்குப் பல தருணங்கள் கிடைத்தன. இறையியலும் அங்கே அவர் கற்றுக்கொடுத்தார். 1540ல் ஐடிலேட் டி பியுரெ (idelette de Bure) என்னும் ஒரு விதவையைத் திருமணஞ் செய்தார். அவரது மரணமட்டும் அவரது மனைவி அவருக்கு உத்தம துணைவியாக விளங்கினது அவருக்கு ஆசீர்வாதமாயிருந்தது.

இத்தருணத்தில ஜெனிவாவில் மாற்றம் ஏற்பட்ட காரணத்தால் அவரை ஆதரிக்கிற கட்சியினர் பதவியேற்றனர். அவர்கள் கால்வின் மறுபடியும் வரும்படி வருந்தியழைத்தனர். அதற்கு அவர் உடன்பட்டு 1541 செப்டம்பர் 13ம் நாள் மீண்டும் ஜெனிவா அடைந்தார். அவரை மக்கள் மகிழ்ச்சியுடன் வரவேற்றனர். அதிலிருந்து அவர் 1564ல் மரிக்கும் வரை இருபத்திமூன்று ஆண்டுகள் சிறந்த பணியாற்றினுர். தமது முயற்சியால் ஜெனிவாவை புராட்டஸ்தாந்து சபையின் உரோமையாக்கினுர்.

ஜெனிவாவில் கால்வின் ஒரு புது சபை ஆட்சி திட்டத்தை ஏற்படுத்தினுர். சபைத் திருப்டணியாளர்கள் போதகர், உபதேசிகர், மூப்பர், உதவிக்காரர் என நால்வகைப்பட்டவர்களாய் அமைந்தனர். போதகர்களுக்குப் பிரசங்க ஊழியம் முக்கியமானது. உபதேசிகர்கள் கல்வி காரியங்களைக் கவனிக்க வேண்டியவர்கள். உதவிக்காரர் ஏழைகளையும் மருத்துவ சாலைகளையும் கவனிக்கும் பொறுப்புடையவர்கள். கால்வினுடைய திட்டத்தில் மூப்பர்கள் முக்கியமான பணியைச் செய்தனர். அவர்கள் நகராலோசனைச் சங்கத்தால் தெரிந்தெடுக்கப்பட்ட குருப்பட்டம் பெருதவர்கள் அவர்கள் போதகர்களோடு சேர்ந்து சபையின் சிட்சைமுறையைக் கையாண்டனர். அவர்கள் சபை உறுப்பினர்களைச் சபைக்குப் புறம்பாக்கும் அதிகாரமுடையவர்கள் மரணதண்டனை விதிப்பதற்கு நகராலோசனைச் சங்கத்திற்கு அவர்கள் சிபார்சு செய்யக்கூடும் கடுமையான தண்டனையும் கொடுக்கப்பட்டது விபசாரத்திற்கு மரணதண்டனை விதிக்கப்பட்டது. ஒரு பிள்ளை தன் பெற்றோரை அடித்ததற்காகச் சிரச்சேதம் செய்யப்பட்டது. கால்வின் ஒரு பூரண கிறிஸ்தவ சமூகத்தை ஜெனீவாவில் உருவாக்க எத்தனித்தார். எனவே, பலர் ஜெனீவாவுக்குக் கவரப்பட்டனர்.

ஜெனீவாவில் கால்வின் ஒரு பல்கலைக்கழகத்தை ஏற்படுத்தினுர். அது இறையியல் அறிவுக்கு பேர்பெற்ற இடமாயிற்று. அங்கே பயிற்சிபெற்ற பலர் ஐரோப்பாவின் பல பாகங்களுக்கு சமயத்தூதுவர்களாகச் சென்றனர்.

## கால்வினின் போதனை

திருமறையைக் கால்வின் முக்கிய ஆதாரமாய்க் கொண்டார். அதன் மூலமாகவே கடவுள் மனிதனில் செயலாற்றுகிருரென்று கருதி அதையே தெய்வீக அதிகாரமுள்ளதாய் எண்ணினுர்.

கடவுள் அவர் எண்ணத்தில் முதன்மையானவராயிருந்தார். அவரே எல்லாவற்றையும் படைத்து ஆளுபவரும் யாவற்றிற்கும் மேலானவருமாவர்.

மனிதன் வெறும் சூனியமானவன். கடவுளின் சாயல் பாவத்திஞல் சிதைவுற்றது. எனினும், அது முற்றும் மனித ஆத்துமாவில் அழியவில்லை. ஆனல் அச்சாயல் முற்றிலும் அழிந்ததற்குச் சமமான கேட்டை அடைந்துள்ளது. அதன் விளைவால் மனிதன் முற்றிலுமான இழிவுநிலை (total depravity) அடைந்துள்ளான். கடவுளின் கிருபையின்றி அவன் எந்த நற்செயலும் செய்ய திராணியற்றவன். ரட்சிப்பு முற்றிலும் கடவுளின் செயல்.

லூத்தரைப்போல் கால்வினும் கிறிஸ்தவனின் சுயாதீனத்தை வலியுறுத்திஞர். நியாயப் பிரமாணத்தினின்றும் வெளிப்படையான சடங்குகளின் அடிமைத்தனத்திலிருந்தும் கிறிஸ்தவன் விடுதலை பெற்றுள்ளான்.

திருச்சபை தெரிந்துகொள்ளப்பட்டவர்களாலானது. அதில் ஜீவிக்கிறவர்களும் மரித்தவர்களும் அமைவர். உண்மையான சபை அதரிசனமானது. கடவுள் மட்டுமே அதை அறிவர் காணப்படுகிற சபையில் மாய்மாலக்காரரும் பெயரளவில் மட்டும் கிறிஸ்தவர்களாயிருக்கிறவர்களும் உண்டு.

கால்வின் சபைக்கும் அரசாங்கத்திற்குமுள்ள வேறுபாட்டை வலியுறுத்திஞர். ஒவ்வொன்றும் வித்தியாசமாக ஆட்சி வகிக்க வேண்டியவை. அதிகாரங்களெல்லாம் கடவுளாலே உண்டானதால் சபையும் அரசாங்கமும் கடவுளின் சித்தத்தாலேயே ஆளப்படுகின்றன. இரண்டும் கடவுளின் மகிமையை வெளிப்படுத்தக் கூடும். எனவே தனிப்பட்ட இரு அதிகாரங்களும் ஒன்ருேடொன்று ஒத்துழைக்க வேண்டும். திருமறையின்படி கடவுளின் சித்தத்தை அறிய சபைப் போதகர்களே வல்லவர்களாகையால் அரசாங்கம் போதகர்களின் ஆலோசனையைக் கேட்டு அவர்களது தீர்மானங்களுக்கு இணங்கவேண்டும். கிறிஸ்து தமது சட்டத்தின்படி நாட்டை ஆளவேண்டும். அச்சட்டம் போதகர்களால் தெளிவுபடுத்தப்பட வேண்டும். ஆகவே கால்வின் முறைப்படி

அரசாட்சி இறையாட்சி (**Theocracy**) யாகும். இம்முறையால் ஜெனிவா நகரம் முழுவதுமே ஒரே சபையாய் இயங்கினது.

முன் விதிப்புக்கொள்கை கால்வினின் போதனையில் முக்கிய இடம் பெற்றிருந்தது. அவரது எண்ணத்திற்கிசைய சம்பவிக்கப் போகும் யாவும் கடவுளால் முன் குறிக்கப்பட்டுள்ளன. சிலர் மீட்புக்காகவும் மற்றவர்கள் நித்திய ஆக்கினைக்காகவும் தெரிந்து கொள்ளப்பட்டவர்கள். அவருடைய சிந்தனையில் கடவுளின் சித்தம் முக்கியமானது. இரட்சிக்கப்பட நியமிக்கப்பட்டவர்கள் இரட்சிப்பை அடைய கடவுளின் கிருபையைப் பெறுவார்கள். ஒருமுறை இரட்சிக்கப்பட்டவர்கள் நித்தியமாய் இரட்சிக்கப்பட்டவர்கள். இரட்சிக்கப்பட்டவர்கள் கடவுளின் கிருபையிலிருந்து விழுந்துபோக மாட்டார்கள்.

அவரது முன்விதிப்புக் கொள்கை சாக்கிரமந்துகளைப்பற்றிய எண்ணத்தையும் பாதித்தது. திருமுழுக்கு, நற்கருணை ஆகிய இரு சாக்கிரமந்துகளையும் கால்வின் அங்கீகரித்தார். தெரிந்து கொள்ளப்பட்டவர்களுக்கே அவை பயனளிக்கும். திருமுழுக்கில்லாமல் கடவுள் தெரிந்து கொள்ளப்பட்டவர்களுக்கு மன்னிப்பை அருளமுடியும். ஆகவே திருமுழுக்கு இன்றியமையாததல்ல' திருமுழுக்கில்லாமல் மரிக்கிற தெரிந்துகொள்ளப்பட்ட பிள்ளைகள் இரட்சிப்பை சுதந்தரிப்பார்கள். நற்கருணையில் தெரிந்துகொள்ளப்பட்டவர்கள் கிறிஸ்துவோடு ஐக்கியமடைவார்கள். உரோமன் கத்தோலிக்கரின் பொருள் மாறுதல் கொள்கையை அவர் எதிர்த்தார். லூத்தருக்கும் ஸ்விங்கிளிக்கும் இடைப்பட்ட கொள்கையைக் கால்வின் பின்பற்றினார். தெரிந்துகொள்ளப்பட்டவர்கள் கிறிஸ்துவின் சரீரத்திலும் இரத்தத்திலும் பங்குபெறுகின்றனர். ஆனால் தெரிந்துகொள்ளப்படாதவர்கள் அப்பத்திலும் ரசத்திலுமே பங்குபெறுகின்றனர். லூத்தரின் எண்ணத்தின்படி எல்லாரும் கிறிஸ்துவின் சரீரத்திலும் ரத்தத்திலும் பங்குபெறுகின்றனர். ஆனால் பலன் தகுதியுள்ளவர்களுக்கும் தகுதியற்றவர்களுக்கும் வெவ்வேறுயிருக்கிறது.

கால்வின் தமது சபை ஆட்சிமுறையாலும் பல்கலைக்கழக ஒழுங்கினாலும் சீர்திருத்த லட்சியங்களை ஐரோப்பாவில் நல்வடிவத்திற்குக் கொண்டுவந்தார். அவரது முறைகள் அரசாங்கத்தால் வரும் எதிர்ப்பினூடே நிலைநிற்கக்கூடியவைகளாயிற்று. திருமறை வாழ்க்கைக்கும் தொழுகைக்கும் ஆதாரமாயுள்ளதென்று அவர் வலியுறுத்தினது மக்களுக்கு நம்பிக்கையையும் தைரியத்தையும் அதிகமாய் அளித்தது. கால்வின் 1564 மேய் 27ம் நாள் மரித்தார்.

---

## 4. இங்கிலாந்தில் சீர்திருத்தம்

16ம் நூற்றுண்டில் இங்கிலாந்திலுண்டான தேசாபிமான எண்ணம் சீர்திருத்தத்திற்கு அதிக தூண்டுதலாயிருந்தது. இங்கிலாந்து ஆங்கிலேயருக்கே என்று எழுப்பப்பட்ட கூக்குரல் போப்புவின் அதிகாரத்தை ஆங்கிலேயர் எதிர்க்க ஏவிற்று. அத்தியட்ச நியமனங்கள் அரசரால் கொண்டு நடத்தப்பட்டது. அக்காலத்தில் குருக்களும் அரசாங்க உத்தியோகங்களை வகித்தனர். எட்டாம் ஹென்றி அரசனுயிருக்கையில் சீர்திருத்தத்திற்கு ஒரு நல்ல காலம் உருவானது.

### *8ம் ஹென்றி (1509-1547)*

அவரது ஆட்சியின் ஆரம்பகாலத்தில் உரோமன் கத்தோலிக்க ஒழுங்கையே ஆதரித்தார். தாமஸ் வொல்சி **(Thomas Wolsey)** என்னும் கார்டினல் அவருக்கு அச்சமயத்தில் அதிக உதவியாயிருந்தார். லூத்தரின் நூல்கள் இங்கிலாந்தில் தடைபண்ணப்பட்டிருந்தது. 'ஏழு சாக்கிரமந்துகளைப்பற்றிய ஒரு பாதுகாப்புரை' **(A Defence of the Seven Sacraments)** என்னும் வெளியீடு ஹென்றி அரசனுல் பிரசுரிக்கப்பட்டது. அப்பொழுது போப்புவாயிருந்த பத்தாம் லேயோ மகிழ்ந்து, 'விசுவா

சத்தின் பாதுகாவலர்' (Defender of the Faith) என்று அவரைக்கூறி புகழ்மாலை சூட்டினர். ஆனால் விரைவில் ஹென்றியின் எண்ணம் மாறியது.

ஹென்றி ஸ்பானியா நாட்டு அரசன் பெர்டினன்டின் மகளாகிய காதரீன் என்னும் பெண்ணை மணம்புரிந்திருந்தார். காதரீன் அவருக்கு ஆறு பிள்ளைகளைப் பெற்றாள். அவர்களில் மேரி என்னும் மகள் மட்டும் பிழைத்திருந்தாள். இனி காதரீனுக்கு ஆண்மகன் பிறவாதென்ற எண்ணத்தால் ஆனி போலின் (Anne Bo'eyn) என்னும் பெண்ணை மணம்புரிய நினைத்தார். ஆனால் அப்பொழுதிருந்த போப்புவானவராகிய ஏழாம் கிளமந்து அதற்குச் சம்மதிக்கவில்லை. எனவே தாமே இங்கிலாந்து சபைக்கு மேலான தலைவரென்று பிரஸ்தாபித்தார்.

1532ல் போப்புவுக்குச் செலுத்தப்படவேண்டிய வரிகளை ஹென்றி நிறுத்தினர். சீர்திருத்த எண்ணமுடையவர்களை ஆதரித்து புராட்டஸ்தாந்து நூல்களைப் பரவச்செய்தார். தோமா கிராம்வெல் (Thomas Cromwell) என்னும் புராட்டஸ்தாந்து ஆதரவாளர் பிரதம அமைச்சராக்கப்பட்டார். தோமா கிரான்மர் (Thomas Cranmer) என்ற புாட்டஸ்தாந்து கொள்கைக்காரர் முதல் புரட்டஸ்தாந்து கந்தர்புரி பிரதம அத்தியட்சகராக 1533ல் அபிஷேகம் செய்யப்பட்டார். அவர்மூலம் ஹென்றி காதரீனோடுள்ள மணத்தை ரத்துசெய்து ஆனி போலினை மணஞ்செய்துகொண்டார். அவருக்குப் பிறந்த எலிசபெத் பின்னர் இங்கிலாந்து அரசியானாள்.

1534இல் போப்புவானவர் ஹென்றி அரசனைச் சபைக்குப் புறம்பாக்கினர். அரசன் 1534 நவம்பர் மாதம் பாராளுமன்றம் 'தலைமைப் பதவியைப் பற்றிய நடபடி' (The Act of Supremacy) என்னும் தீர்மானத்தை அமுலாக்கும்படி செய்தார். அதன்மூலம் ஹென்றி அரசனும் அவரது வாரிசுகளும் இங்கிலாந்து சபைக்கு உலகிற்குரியமேலான தலைவர்களாக்கப்பட்டனர்.

எனவே போப்புவானவருக்குப் பதிலாக அரசன் அந்நிலையில் தலைவராக எண்ணப்பட்டார். ஆனால் குரு அபிஷேகம் முதலியன அரசனின் பொறுப்பிலிருக்கவில்லை. துறவி மடங்களுக்குரிய பல சொத்துக்களை ஹென்றி அபகரித்துக்கொண்டார். 1540க்குள் 645 துறவி மடங்கள் அழிக்கப்பட்டன. எனவே துறவறமே நாட்டிலிருந்து அகற்றப்பட்டது.

ஆனி போலினைப்பற்றியும் ஹென்றிக்கு வெறுப்புண்டாயிற்று. ஆனி விபசாரக் குற்றம் சுமத்தப்பட்டு சிரச்சேதம் பண்ணப்பட்டாள். பதினொன்று நாட்களுக்குப் பின் ஜேன் செய்மோர் (Jane Seymour) என்னும் பெண்ணை மணம்புரிந்தார். 1537 அக்டோபர் 12-ாம் நாள் ஜேனுக்கு எட்வட் பிறந்தார். பன்னிரண்டு நாட்களுக்குப் பின் ஜேன் மரணமடைந்தாள்.

இக்காலத்தில் சீர்திருத்த ஆவி பரவிக் கொண்டிருந்தது. உல்லியம் டின்டேல் (William Tyindale) தமது புதிய ஏற்பாடு மொழிபெயர்ப்பைப் பிரசுரித்தார். ஆனால் அரசாங்க அதிகாரிகளும் சபை அதிகாரிகளும் அதை எதிர்த்தனர். எனினும் அது பலரைக் கவர்ந்தது. அவர்களில் கிரான்மர், ரிட்லி, லேட்டிமர், கூப்பர் ஆகியோர் பிரதானமானவர்கள்.

திருமறையின் தேவையை ஹென்றி அரசன் சீக்கிரத்தில் உணர்ந்தார். ஆகவே 1538-இல் ஒவ்வொரு ஆலயத்திலும் ஒரு திருமறை வைக்கப்பட்டது. அதை ஒருவரும் எடுத்துச்செல்லாதபடி சங்கிலியால் கட்டப்பட்டு வைக்கப்பட்டிருந்தது.

1539-இல் ஹென்றி கத்தோலிக்கரையும் புராட்டஸ்தாந்தினரையும் பிரியப்படுத்த விரும்பினார். கத்தோலிக்கரைப் பிரியப்படுத்துவதற்காக அவர் பாராளுமன்றத்தில் ஆறு அம்சங்களடங்கிய ஒரு நடபடி (Six Articles Act) உருவாக்கும்படி செய்தார். அதன் மூலம் தாம் ஒரு வைராக்கியமான கத்தோலிக்கரென்று உலகம் எண்ணுவதற்கு ஒரு முகாந்தரம் வைத்தார்.

இந்த ஆறு அம்சங்களடங்கிய நடபடிக்கைக் கிசைய 1) தன்மை மாறுதற் கொள்கை இங்கிலாந்தின் விசுவாசப் பிரமாணமாக உறுதியாக்கப்பட்டது. இதை மறுக்கிறவர்களுக்குச் சுட்டெரிக்கப்படும் தண்டனை விதிக்கப்பட்டது. 2) அப்பமும் ரசமும் கொடுக்கப்படுவது இதில் தடை செய்யப்பட்டிருந்தது. 3) குருக்கள் திருமணம் புரிவதும் தவிர்க்கப் பட்டிருந்தது. 4) தூய்மையைக் கடைப்பிடிக்கும் ஆணைகள் நிரந்தரமாக அனுசரிக்கப்படவேண்டும் என்னும் கட்டளையும் இதில் அடங்கியிருந்தது. 5) நற்கருணைப் பூசைகள் ஆதரிக்கப்பட்டன. 6) குருக்களிடம் பாவ அறிக்கை செய்தலும் அனுசரிக்கப்பட இதில் கட்டளையிடப்பட்டிருந்தது. ஹென்றியின் மரணம் வரையிலும் இவை பின்பற்றப்பட்டன.

புராட்டஸ்தாந்தினரைப் பிரியப்படுத்துவதற்காக ஜெர்மானிய சிற்றரசனான யோவான் பிரடெரிக்கின் சகோதரியும் புராட்டஸ்தாந்து கிறிஸ்தவருமான ஆனி (Anne of Cleves) என்னும் பெண்ணை மணஞ்செய்தார். அதன் மூலமாக ஜெர்மானிய புராட்டஸ்தாந்தினர் தமது சார்பாயிருக்க ஏதுவாக்கினார். பேரரசனாயிருந்த ஐந்தாம் சார்ல்ஸுக்கு விரோதமாயிருந்தவர்களோடு ஒருமைப்பட்டுக்கொள்ள அவர் இவ்வாறு விரும்பினார். இத்திருமணமானது 1540 ஜனுவரி 6-ாம் நாள் நடைபெற்றது. இதற்கு நாட்டு பலனே அடிப்படையான காரணமாயிருந்தது. உண்மையில் தாம் அதிற்கு முழுச் சம்மதம் அளிக்கவில்லை என்ற காரணத்தினால் ஆறு மாதத்திற்குள், அதாவது, 1540 ஜுலை மாதத்தில், அவளுக்கு மிகுதியான பணத்தைக் கொடுத்து அவளை அனுப்பிவிட்டார்.

படிப்படியாக ஹென்றி கத்தோலிக்க எண்ணமுடையவரானாரென்பது இதனால் விளங்கும். இத்திருமண இணைப்புக்குக் காரணராயிருந்த குராம்வெல் என்பவரும் 1540 ஜுலை 2-ாம் நாள் சிரச்சேதம் பண்ணப்பட்டார். அதன்பின் காதரின் ஹவட் என்னும் பெண்ணை அவர் திருமணம் புரிந்தது அவரது கத்தோலிக்க எண்ணத்தை அதிகமாக வெளிப்படுத்திற்று. ஆனால் அவளது நடக்கையைப் பற்றி அவர் சந்தேகித்து 1542 பெப்ரு

வரி மாதத்தில் அவளைக் கொல்லுவித்தார். இறுதியாக ஹென்றி காதரின் பார் (Catherine Parr) என்னும் பெண்ணை 1543 ஜூலை மாதத்தில் மணஞ்செய்தார். அவள் அவருடைய காலத்திற்குப் பின்னும் வாழ்ந்திருக்கும் பாக்கியம் பெற்றாள். ஹென்றி 1547 ஜனுவரி மாதம் 28-ாம் நாள் மரணமடைந்தார்.

அவருடைய மரண காலத்தில் இங்கிலாந்தில் மூன்று கட்சிகள் இருந்தன.

1) போப்புவானவரின் ஆட்சியை எதிர்த்தவர்கள். இவர்கள் ஆங்கிலேயரில் பெரும்பான்மையோர். இவர்கள் போப்புவானவரின் அதிகாரத்தை அங்கீகரியாமலிருந்த போதிலும் சபையில் வேறு மாறுதல்களை விரும்பவில்லை.

2) கத்தோலிக்கர். இவர்கள் போப்புவானவரின் ஆளுகையை மீண்டும் செயலுக்குக் கொண்டுவரவேண்டுமென்று விரும்பினவர்கள்.

3) புராட்டஸ்தாந்தினர் இவர்கள் இங்கிலாந்தில் ஒரு முழுச் சீர்திருத்தத்தை விரும்பினவர்கள். ஐரோப்பாவில் நடைபெறும் சீர்திருத்தத்தை இவர்கள் அறிந்து இங்கிலாந்திலும் அது பரவ வேண்டுமென்று விரும்பினார்கள். இக்கட்சியினர் இங்கிலாந்தில் பெருகி வந்தனர்.

ஹென்றியின் காலத்திற்குப்பின் 6-ாம் எட்வட் தமது ஒன்பதாவது வயதில் அரசரானார். அவர் ஒரு ஆலோசனைச் சங்கத்திற்குக் கீழ்ப்பட்டிருந்தார். அதில் முக்கியமானவர் சாமர்செட்டின் அதிபர் (Duke of somerset). இவர் புராட்டஸ்தாந்து கொள்கையைச் சார்ந்தவர். எனவே புராட்டஸ்தாந்து சீர்திருத்தத்தின் அடிப்படையில் சில மாறுதல்கள் கொண்டுவரப்பட்டன.

முதலாவது ஆறு அம்ச நடபடிகள் நிராகரிக்கப்பட்டன. இரண்டாவது, சொரூபங்கள் அகற்றப்பட்டன. மூன்றாவது,

சபைச் சொத்துக்கள் கைப்பற்றப்பட்டன. நான்காவது, நற் கருணையில் ரசமும் அப்பத்திற்குப் பின் கொடுக்கப்பட்டது.

எட்வட் காலத்தில் ஏற்பட்ட முக்கிய செயல் 1549-இல் உருவாக்கப்பட்ட ஒத்தொருமைச் செயல் (Act of Uniformity) ஒரு ஜெபப்புஸ்தகம் பிரசுரிக்கப்பட்டது. இது தற்காலத்தில் பயன்படுத்தப்பட்டுவரும் ஜெபப்புஸ்தகத்திலிருந்து வேறுபட்டிருந்தது. சில பழைய பழக்கங்கள் இதில் இன்னும் சேர்க்கப்பட்டிருந்தது. ஒவ்வொருவரும் தொழுகையில் ஜெப புஸ்தகத்தை பயன்படுத்த வேண்டுமென்று பாராளுமன்றம் வற்புறுத்தினது. பின்னர் இது திருத்தி அமைக்கப்பட்டது. திருத்தங்களின் மூலம் பழைய பழக்கங்கள் சிறிது சிறிதாக விடப்பட்டன. பலிபீடமாக (altar) எண்ணப்பட்டது நற்கருணை மேசையாக (communion table) மாறினது. அப்பச்சில்லுக்குப் (Wafers) பதிலாக சாதாரண ரொட்டி பயன்படுத்தப்பட்டது. மரித்தோருக்காகச் செய்யப்படும் ஜெபமும் விடப்பட்டது.

1553-இல் எட்வர்ட் மரித்தபோது மேரி அரசியானுள். மேரி கத்தோலிக்க எண்ண முடையவளாயிருந்தாள். ஸ்பானியாவிலுள்ள இரண்டாம் பிலிப்புவை 1554 ஜூலை 25-ஆம் நாள் மணம் புரிந்தாள். பிலிப்பு கத்தோலிக்க வைராக்கியமுடையவராயிருந்தார். இவரது தந்தையான 5-ஆம் சார்ல்ஸ் பேரரசன் இவ்வுறவு இங்கிலாந்தை வெல்ல அனுகூலமளிக்குமென்று எண்ணினுர்.

இக்காலத்தில் பழைய சபையாட்சி முறை பெலப்படுத்தப்பட்டது. புராட்டஸ்தாந்து அத்தியட்சர்களுக்குப் பதிலாக கத்தோலிக்க அத்தியட்சர்கள் மீண்டும் ஏற்படுத்தப்பட்டனர். போப்புவானவரின் ஒரு பிரதிநிதியாகிய கார்டினல் ரெஜினுல்ட் போல் இங்கிலாந்தில் ஏற்றுக்கொள்ளப்பட்டார். பாராளுமன்றம் போப்பாட்சியை அங்கீகரிக்கக் கேட்டுக்கொள்ளப்பட்டது. அவ்வாறு அங்கீகரிக்கப்பட்டபின் கார்டினல் நாட்டிற்குப் பாவ நிவிர்த்தி கூறினுர்.

இதைத் தொடர்ந்து ஒரு உபத்திரவ காலம் நாட்டில் வந்தது. சீர்திருத்தத்தை ஆதரித்த சில அத்தியட்சர்கள் சுட்டெரிக்கப்பட்டனர். மேரி அரசியின் மரணம் வரை இத்தகைய உபத்திரவம் நேரிட்டது. அப்பொழுது உண்டான இரத்தசாட்சி மரணங்கள் சீர்திருத்தத்தைப் பரப்புவதற்கு அதிக தூண்டுதலாயிருந்தன.

1588-இல் எலிசபெத் அரசியானுள் எலிசபெத் புராட்டஸ்தாந்து கிறிஸ்தவளாயிருந்தமையால் சபைக்குள் மாறுதல்கள் கொண்டுவரப்பட்டன. 1559-இல் மேலுரிமைச் செயல் (**The Act of Supremacy**) என்னும் நடபடியை உண்டாக்கினுள். கிறிஸ்துவே சபைக்குத் தலையாகையால், அரசனைச் சபைக்குத் தலையாக்கின தன் தந்தை ஹென்றியின் ஒழுங்கை மாற்றி ஆளுநர் என்னும் பெயரை வைத்துக்கொண்டாள்.

ஒத்தொருமைச் செயல் என்னும் மற்றொரு நடபடியையும் அமுலாக்கி, திருத்தி அமைக்கப்பட்ட ஜெப புஸ்தகத்தை வெளியிட்டு அதை அனைவரும் பின்பற்ற எலிசபெத் கட்டாயப்படுத்தினுள். 1559 டிசம்பர் 17-ம் நாள் மத்தேயு பார்க்கர் (**Matthew Parker**) என்பவர் கந்தர்புரி பிரதம அத்தியட்சராக அபிஷேகம் பெற்றுர். இவ்வாறு ஒரு புதிய ஆங்கிலேய அத்தியட்ச ஆளுகை முறைச் சபை உருவானது.

மத்தேயு பார்க்கர் அபிஷேகம் பண்ணப்பட்ட செயல் நியாயமானபடி அப்போஸ்தல வரிசைக்குட் பட்டதல்லவென்று உரோமன் கத்தோலிக்க அறிஞர்கள் சாதித்தனர். பதிமூன்றும் லியோவாகிய போப்புவானவரும் 1896-இல் அப்போஸ்தல வரிசைக்கு மாறுனதென்று தீர்த்தார். ஆனுல் 8-ம் ஹென்றி காலத்திலும் 6-ம் எட்வர்ட் காலத்திலும் அத்தியட்சர்களாக அபிஷேகம் பண்ணப்பட்ட வில்லியம் பார்லோ (**William Barlow**) யோவான் ஸ்கோரி (**John Scory**), மைல்ஸ் கவெர்டேல் (**Miles Coverdale**) யோவான் ஹாட்ஜ்கின் (**John Hodgkin**) ஆகிய நால்வரால்

மத்தேயு பார்க்கர் அபிஷேகம் பெற்றுர். எனவே, அது அப்போஸ்தல வரிசையில் உட்பட்டதென்று ஆங்கிலேய அறிஞர்கள் உறுதி கூறினர்கள்.

1563-இல் புகழ்பெற்ற 39 விசுவாச அம்சங்கள் (The Thirty nine Articles) ஆங்கிலேய சபையின் விசுவாச வெளியீடாயிற்று.

புராட்டஸ்தாந்து கொள்கையை அனுசரித்த சிலர் எலிசபெத் அரசியின் ஒழுங்குகளில் திருப்தியடையவில்லை. குருக்கள் அலங்கார ஆடைகள் அணிவதையும், சிலுவையின் முன் வணங்குவதையும், சிலுவை அடையாளம் போடுவதையும் அவர்கள் எதிர்த்தனர். அவர்கள் தூய்மையாளவர்கள் (Puritans) என்று அழைக்கப்பட்டனர்.

1570-இல் போப்புவானவர் எலிசபெத்தை ஏறக்குறைய பதவியிலிருந்து நீக்கும் ஒரு கட்டளையைப் பிறப்பித்தார். ஆங்கிலேய மக்கள் போப்புவானவரின் அதிகாரத்தை எதிர்க்க இச்செயல் ஏவிற்று. போப்புவானவரின் பக்கம் சாய்ந்து போராடின உரோமன் கத்தோலிக்கர் பலர் கொல்லப்பட்டனர்.

இங்கிலாந்தில் உருவான புராட்டஸ்தாந்து சபை ஐரோப்பாவிலுள்ள புராட்டஸ்தாந்து சபையிலிருந்து வேறுபட்ட தன்மையுடையதாயிருந்தது. மேலுருமைச் செயல் ஒத்தொருமைச் செயல், 39 விசுவாச அம்சங்கள் ஆகிய மூன்றும் இங்கிலாந்து சபைக்குப் பிரதானமாயிருந்தது. இங்கிலாந்தில் ஏற்பட்ட சீர்திருத்த சபை ஆங்கிலேய சபை (Anglican Church) என்று அழைக்கப்பட்டது. அச்சபையினர் ஆங்கிலேய கத்தோலிக்கர் (Anglo-Catholics).

# 5. ஸ்காத்லாந்தில் சீர்திருத்தம்

பதினாராம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் ஸ்காத்லாந்து அரசனின் அதிகாரம் குறைந்ததாயிருத்தது. உயர்குடி மக்கள் பலத்திருந்தனர். எனவே அரசன் சபையின் உதவியில் சார்ந்து நிற்கவேண்டியதாயிற்று.

இங்கிலாந்தின் ஆக்கிரமிப்புக்கு அஞ்சி அரசன் பிரெஞ்சு நாடோடு இணைய வேண்டியதாயிருந்தது. 1513 முதல் 1542 வரையிலும் ஸ்காத்லாந்தில் அரசனாயிருந்த 5-ஆம் ஜேம்ஸ்என்னும் அரசன் முதல் முறையில் முதலாம் பிரான்சிஸ் என்னும் பிரெஞ்சு அரசனின் மகளை மணஞ்செய்திருந்தார். அவள் மரணத்திற்குப் பின் இரண்டாம் முறையாக ஒரு பிரெஞ்சு கத்தோலிக்க குடும்பத்தைச் சேர்ந்த லொரேய்னிலுள்ள மேரி (Mary of Lorraine) என்னும் பெண்ணை மணம்புரிந்தார். அவளுக்குப் பிறந்தவள் ஸ்காத் அரசியாகிய மேரி (Mary of Queen Scotts).

இச்சூழ்நிலையிலும் புராட்டஸ்தாந்து சபை ஸ்காத்லாந்தில் பரவினது. 1543 இல் அங்குள்ள பாராளுமன்றம் திருமறை ஆங்கிலத்தில் மொழிபெயர்க்கப்படவும், ஆங்கில திருமறை வாசிக்கப்படவும் அதிகாரமளித்தது. எனினும் அடுத்த ஆண்டில் பலமான அடக்கு முறைகள் கார்டினல் பீட்டன் முதலியோரால் கையாளப்பட்டன. 1546 மேய் 29இல் பீட்டன் பிரெஞ்சு இணைப்பை எதிர்த்தவர்களால் கொல்லப்பட்டார். அவரைக் கொன்றவர்கள் சென்று அந்திரேயா கோட்டைக்குள் ஒளித்திருக்கையில் ஒரு புரட்டஸ்தாந்து ஊழியன் அங்கு சென்று அவர்களுக்குத் தலைவரானார். அதுவே ஸ்காத்லாந்து சீர்திருத்தத்திற்கு வீரமணியாய் விளங்கிய யோவான் நாக்ஸ் (John Knox) என்பவராகும்.

யோவான் நாக்ஸ் என்பவரின் ஆரம்ப காலத்தைக் குறித்து அறிவதற்கிடமில்லை. அந்திரேயா கோட்டைக்குள் அவர் இருக்

கையில் பிரெஞ்சு ராணுவத்தால் கைதியாக பிரெஞ்சு நாட்டுக்குக் கொண்டு செல்லப்பட்டார். பத்தொன்பது மாதங்களுக்குப்பின் அவர் விடுவிக்கப்படவே இங்கிலாந்துக்கு வந்து 7-ம் எட்வட் அரசனின் ஆட்சிக்குள் ஒருராணுவ குருவாக அமைந்தார். பின்பு உபத்திரவம் ஏற்பட்டபொழுது ஜெனீவாவுக்குச் சென்று கால் வினுடைய ஒரு சீடனானர்

1559-இல் நாக்ஸ் ஸ்காத்லாந்திற்கு வந்து தமது பணியை ஆரம்பித்தார். அதன் விளைவாக கத்தோலிக்க விசுவாசத்திற்கு விரோதமான எதிர்ப்பு மக்களுக்குள் உண்டானது. ஆலயங்க ளும் துறவி மடங்களும் அழிக்கப்பட்டன. போப்புவானவரின் ஆளுகையை நீக்கவும் நற்கருணைப் பூசையை அகற்றி கால்வின் ஒழுங்குப்படியான நற்கருணையை அனுசரிக்கவும் ஸ்காத்லாந்து பாராளுமன்றத்தில் சட்டங்கள் பிறப்பிக்கப்பட்டன. 1561-இல் கால்வினின் முறையை ஸ்காத்லாந்து முழுவதும் பின்பற்ற ஸ்காத்லாந்து பாராளுமன்றம் நடபடி எடுத்தது. இவ்வாறு ஸ்காத்லாந்தில் சீர்திருத்தம் பூரணமாக நிறைவேறினது.

நாக்ஸ் ஏற்படுத்திய கால்வின் முறைப்படி ஒவ்வொரு சபை யிலும் சபையாரால் தெரிந்தெடுக்கப்பட்ட ஒரு போதகரும் மூப் பர்களும் ஏற்படுத்தப்பட்டனர். போதகரும் மூப்பர்களும் சேர்ந்த ஆலோசனைக் கூட்டம் சபைக்குப் புறம்பாக்கும் அதிகாரத்தை யுடையதாயிருந்தது. இதற்குமேல் பேரவைகளும் பொது ஆலோசனைச் சங்கங்களும் இருந்தன.

மக்களுக்கு அறிவு புகட்டுவதிலும் வறுமையைத் தொலைப் பதிலும் அதிக முயற்சி எடுக்கப்பட்டது. ஸ்காத்லாந்து கல்வி முறையானது புகழ்பெற்றதாயிற்று. எனவே புகழ்பெற்ற இறையியல் வல்லுநர்கள் இந்நாட்டில் எழும்பலானார்கள். வேத ஆதாரமில்லாத அனுஷ்டானங்கள் சபையிலிருந்து நீக்கப்பட் டது. ஞாயிற்றுக்கிழமை மட்டும் பரிசுத்த நாளாக அனுசரிக் கப்பட்டது. வழிபாட்டில் பயன்படுத்த ஒரு ஜெபப்புஸ்தகமும் தயாரிக்கப்பட்டது. ஆனால் ஜெபப்புஸ்தகத்தை உபயோகிப்ப தில் ஒருவரும் கட்டாயப்படுத்தப்படவில்லை.

ஸ்காத் அரசி மேரி பிரெஞ்சு இளவரசனுக்கு நியமிக்கப் பட்டு பாதுகாவலுக்காக பிரான்ஸுக்கு அனுப்பப்பட்டாள். அவரை மேரி திருமணஞ் செய்தபோது பிரான்ஸுக்கும் ஸ்காத் லாந்துக்கும் நெருங்கின இணைப்பு அவர்களுக்கும் பிறக்கும் புதல்வன் பிரான்ஸுக்கும் ஸ்காத்லாந்திற்கும் அரசனுகை உரிமை உண்டு.

1560-இல் தன் கணவன் மரிக்கவே மேரி ஸ்காத்லாந்திற்கு திரும்பினுள். அவள் கத்தோலிக்க விசுவாசமுள்ளவளாகையால் புராட்டஸ்தாந்து சபை ஆபத்துக்குள்ளாயிற்று எனினும் மேரி யின் தவறுதலினுல் புரட்டஸ்தாந்து சபை பாதுகாக்கப்பட்டது.

மேரி டார்ன்லி (Darnley) என்பவருக்கு மனைவியாகி ஜேம்ஸ் என்னுமொரு குமாரனைப் பெற்ருள். அவர் ஸ்காத்லாந் துக்கு 6-ாம் ஜேம்ஸாகவும் இங்கிலாந்துக்கு 1-ாம் ஜேம்ஸாகவும் ஏற்பட்டவர். மேரி ஒரு புராட்டஸ்தாந்து கிறிஸ்தவனை மணஞ் செய்ததினிமித்தம் உண்டான புரட்சியின் காரணத்தால் அரசி பதவியை விட்டு நீங்கி இங்கிலாந்துக்குத் தப்பியோடினுள். அங்கு எலிசபெத் அரசிக்கு விரோதமாய்ச் செயல்பட்டதினுல் மேரி 1587-இல் சிரச்சேதம் பண்ணப்பட்டாள். புராட்டாஸ் தாந்து சபை ஸ்காத்லாந்தில் வெற்றியடைந்தது.

## 6. உரோமைச் சபையிலுண்டான சீர்திருத்தம்

உரோமைச் சபையானது சீர்திருத்தத்தின் முக்கியத்தைப் படிப்படியாக உணர்ந்தது 1517-இலேயே இத்தாலியாவில் சிலர் உரோமைச்சபையில் சீர்திருத்த இயக்கத்தை உருவாக்க ஆவல்

கொண்டனர். உரோமையில் அதற்கென ஒரு சங்கம் நிறுவப் பட்டது. அச்சங்கத்தினர் தங்கள் ஆவிக்குரிய வாழ்க்கையை பலப்படுத்த ஜெபத்திலும் வேறு முயற்சிகளிலும் ஈடுபட்டனர். அருளுரைகள் ஆற்றுவதிலும் அவர்கள் ஆர்வம் கொண்டனர். இவ்வித முயற்சிகளின் பலனாக புதிய துறவற வரிசைகள் உரு வாயின. **1524**-இல் தியத்தைன் (Theatines) வரிசையும், **1526**-இல் காப்புக்கின் (Order of the Capuchins) வரிசையும், **1530**-இல் பர்னபா (Order of the Barnabites) வரிசையும், **1535**-இல் உர்சுல்லிட் (Order of the Ursullits) வரிசையும் நிறுவப்பட்டன.

கத்தோலிக்க சபையில் ஏற்பட்ட உயிர்மீட்சி நற்செய்தி பரப்பும் பணிக்கும் வழிநடத்தினது. புறமதத்தினருக்கு நற்செய் தியை அறிவிப்பதற்காக உலகின் பல பாகங்களுக்கு உரோமன் கத்தோலிக்கர் தூதுவர்களாகச் சென்றனர். இம்முயற்சியில் ஆக்கமளித்தவர்களில் தலைசிறந்தவர் இன்னுசியு லயோலா (Ignatius Layola) என்பவர்.

## *இன்னுசியு லயோலா (1491-1556)*

ஸ்பானியாவின் வடபாகத்தில் பிறந்து ஒரு படைவீரனாக அமர்ந்தார். அவர் **1521**-இல் போரில் அடைந்த காயத்தினிமித் தம் இராணுவச் சேவையில் ஈடுபடக்கூடாதவரானார். அவர் குணமடையும் நிலையில் கிறிஸ்துவின் வாழ்க்கை, தொமினிக் கின் வாழ்க்கை, பிரான்சிஸின் வாழ்க்கை ஆகியவற்றை படிக்க லானார். அதன்பின்னர் கன்னிகையின் வீரனுவதாகத் (Knight of the Virgin) தீர்மானித்தார். இவ்வெண்ணத்துடன் அவர் எருசலேமுக்குச் சென்றார். ஆனால் எருசலேமிலிருந்த பிரான்சிஸ் கன் துறவிகள் அவரை ஏற்றுக்கொள்ளவில்லை.

எருசலேமிலிருந்து அவர் ஸ்பானியாவுக்குத்திரும்பி கல்வி கற்கலானார். பல்கலைக் கழகத்தில் அவர் புகழுடன் தேர்ச்சிபெற் றார். பாரீஸ் நகரில் பல தோழர்களைச் சேர்த்து, தூய்மையும்

வறுமையுமான வாழ்க்கை நடத்தவும், சிலுவையினிமித்தம் போர் செய்ய எருசலேமுக்குப் செல்லவும் ஆணை எடுத்தனர். அது கூடாதிருந்தால் போப்புவானவர் அவர்களை எங்கே அனுப்புகிருரோ அங்கே செல்ல தங்களை ஒப்படைத்தனர். எருசலேமில் பணிசெய்வது கூடாததால் அவர்கள் போப்புவானவரிடம் சென்று தாங்கள் இயேசுவின்கூட்டமாக அமைந்து திரிபுக்கொள்கைக் காரருக்கும் விசுவாசத்திற்கு எதிர்த்து நிற்கிறவர்களுக்கும் விரோதமாகப் போர் செய்யும் கூட்டமாக இருப்பதாகக் கூறினுர்கள். **1540**-இல் போப்புவானவர் அதற்குத் தமது சம்மதத்தை அளிக்கவே இயேசுநாதரின் சங்கம் (Society of Jesus) அல்லது ஜெசூட்ஸ் (Jesuits) சங்கம் உருவானது. இச்சங்கத்தில் தலைவருக்குப் பரிபூரணமாகக் கீழ்ப்படிதல் வற்புறுத்தப்பட்டது சங்கத்தைச் சேர்ந்த ஒவ்வொருவருக்கும் ஆவிக்குரிய பயிற்சி கொடுப்பதற்கு ஒரு ஆவிக்குரிய அப்பியாச ஆசிரியரும் இச்சங்கத்திற்குண்டு. ஒவ்வொருவருக்கும் பொருத்தமான அப்பியாச வேலை அவரால் கொடுக்கப்பட்டது.

ஜெசூட்ஸ் சங்கத்தினரின் வேலை நான்கு விதத்தில் அமைந்திருந்தது. அவையாவன:- 1) அருளுரையாற்றும் வேலை 2) பாவ அறிக்கை வழிபாடு நடத்தும் வேலை 3) கல்விச் சாலைகளில் ஆசிரியப் பணிசெய்தல் 4) பரதேச மிஷனெரி சேவை. கத்தோலிக்க சபையில் பிரசங்க வேலை வற்புறுத்தப்படாத காரணத்தால் புராட்டஸ்தாந்து கொள்கை ஏற்பட்டதென்று அவர்கள் எண்ணினுர்கள். மேலும் இச்சங்கத்தினரின் சேவையால் சபைகளில் பாவ அறிக்கை செய்யும் பழக்கமும் கடவுளோடு ஒருமைப்படுதலும் வளர்ந்தது ஆனுல் பாவத்தைப்பற்றி நவீன கோட்பாடுகளை அவர்கள் பிறப்பித்தனர். அதாவது ஒரு செயல் தீயதாயிருப்பினும் சபையின் அதிகாரம் இருந்தால் அதைச் செய்யலாமென்னும் ஒரு கொள்கை (Theory of Probabilism). மற்றென்று நல்ல நோக்கங்களுக்காக முழு உண்மையையும் கூறுதிருத்தல் என்னும் கொள்கை (Theory of Reservation).

ஜெசூட் சங்கமானது மிகவும் விரைவில் வளர்ந்தது. கத்தோலிக்க சபையில் உயிர்மீட்சி உண்டாக வேண்டுமென்று எண்ணம் அதிகமாயிருந்தபடியாலும், இதை நிறுவிய இன்ஞசியு லயோலா என்பவர் சிறந்த பண்புடையவராகச் செய்த சேவையினுலுமே இச்சங்கம் அதிகமாகப் பரவினது எனலாம். எனவே, இத்தாலியா, போர்த்துக்கல், பிரான்ஸ், ஜெர்மனி ஆகிய இடங்களில் இதன் கிளைச்சங்கங்கள் ஏற்படுத்தப்பட்டன.

இச்சங்கம் புறமதத்தினர் நிறைந்த இதர நாடுகளில் சிறப்பான பணி புரிந்தது இச்சங்கத்தால் செய்யப்பட்ட மற்ருெரு முக்கியமான பணி டிரென்ட் ஆலோசனைச் சங்கத்தில் (**Council of Trent)** எடுக்கப்பட்ட தீர்மானங்களாகும்.

## *டிரென்ட் ஆலோசனைச் சங்கம்*

**1545** முதல் **1563** வரையிலும் நடைபெற்றுக் கொண்டிருந்தது. டிரென்ட் இத்தாலியாவைச் சார்ந்த ஒரு நகரம். இத் தீர்மானங்களுக்கிசைய அத்தியட்சர்களும் குருக்களும் தாங்கள் சபைகளில் அருளுரையாற்றக் கடமைப்பட்டிருக்கிருர்கள். குருத்துவ பயிற்சிக்காக செமினரிகள் ஆரம்பிக்க ஏற்பாடு செய்யப்பட்டது. தவருன திருமணங்களைத் தடுக்க விதிகள் ஏற்படுத்தப்பட்டன. வாசிக்கத் தகாத நூல்கள் எவையென்று போப்புவானவர் அறிவிக்கவேண்டுமென்றும் தீர்மானிக்கப்பட்டது

ஆனுல் சபையின் கோட்பாடுகள் இச்சங்கத்தில் ஆலோசிக்கப்படவுமில்லை மாற்றப்படவுமில்லை. இடைக்காலத்தில் சபையிலிரிந்த எண்ணங்களே தொடர்ந்து கடைப்பிடிக்கப்பட்டன. ஆகவே சிலருக்கு டிரென்ட் ஆலோசனைச் சங்கம் ஏமாற்றத்தைக் கொடுத்தது. எனினும் சபை வாழ்க்கையில் சீர்திருத்தம் ஏற்பட்டது. பக்திக்குரிய வாழ்க்கை வளர்ந்தது. சிறந்த பக்த சிரோமணிகளாகிய பரிசுத்த டெரசா (**St. Teresa**), பிரான்சிஸ் டி சேல்ஸ் (**Francis de Sales**) ஆகியோரைக் கத்தோலிக்க சபையிலுண்டான உயிர் மீட்சி பிறப்பித்தது.

# 7. சில புராட்டஸ்தாந்து பிரிவுகள்

## 1. சொசினிய கொள்கை (*Socinianism*):

சொசினியஸ் (**Socinius**) என்பவரின் பெயரால் இக் கொள்கை அழைக்கப்பட்டது. கிறிஸ்து ஒரு மனிதனே என்பது இக்கொள்கையின் போதனை. அவர் உயர்தாழும், கீழ்ப்படிதலும் ஞானம் நிறைந்ததுமான வாழ்க்கை நடத்தினர். எனவே, அவருக்கு உயிர்த்தெழுதலும், தெய்வீக நிலையும் பரிசாக அளிக்கப்பட்டது. ஒவ்வொரு கிறிஸ்தவனும் காட்டவேண்டிய கீழ்ப்படிதலுக்கு இது ஒரு முன்மாதிரியாக அமைகிறது. ஆனால் கிறிஸ்துவின் கீழ்ப்படிதலோ மரணமோ மற்றவர்களுக்கு பலனளிக்க முடியாது சபையின் அதிகாரங்களுக்கும் இக்கொள்கையினர் உட்பட மறுத்தனர். புராட்டஸ்தாந்து சபையும் ஜெசூட் சங்கத்தினரும் இத்திரிபுக் கொள்கையை எதிர்த்து அடக்கினர்.

## 2. ஆர்மீனியக் கொள்கை (*Armenianism*)

இதை உருவாக்கக் காரணமாயிருந்த ஜேக்கப் ஆர்மீனியஸ் என்பவர் ஏடன் பல்கலைக் கழகத்திலும் ஜெனிவா பல்கலைக்கழகத்திலும் கல்வி பயின்றார். இவர்சிறந்த அருளுரையாளராகவும் போதகராகவும் திகழ்ந்தார். லேய்டனில் (**Leyden**) பேராசிரியராக இவர் பணியாற்றினர். முன்குறித்தல் என்னும் எண்ணத்தைப்பற்றி கருத்து வேறுபாடுகள் இருந்தன. கடவுள் சிலர் தெரிந்துகொள்ளப் படுவதையும் மற்றவர்கள் கைவிடப்படுவதையும் முன் குறித்து மனிதனின் வீழ்ச்சியை அதை நிறைவேற்றுவதற்குரிய ஒன்றாக அதை அனுமதித்தாரா அல்லது மனிதனின் வீழ்ச்சியை முன்னறிந்து அதற்கு இடமளித்து தெரிந்து கொள்ளுதலை ஒரு ரட்சிப்பின் முறையாகக் கொண்டுள்ளாரா என்னும் இரு கேள்விகளில் முதல் கேள்விக்கு ஆம் என்று கூறினவர்கள் சூப்ரா லேப்சேரியன்ஸ் (**Supra Lapsarians**) என்றும் இரண்டாம் கேள்விக்கு ஆம் என்று கூறினவர்கள் இன்பிரா

லேப்சேரியன்ஸ் (**Infra Lapsarians**) என்னும் அழைக்கப்பட்டனர். ஆர்மீனியஸ் மனிதனின் சுயாதீனத்தை வற்புறுத்தினுர். ஆர்மீனியஸின் எண்ணத்தை சிலர் விரிவாக்கி நெதர்லேண்ட், ஜெர்மனி, இங்கிலாந்து ஆகிய நாடுகளுக்குப் பரப்பினுர்கள்.

இங்கிலாந்தில் ஆங்கிலேய சபை, தூய்மையானவர்கள், சபை ஆட்சிமுறை (**Congregationalism**), அத்தியட்ச ஆளுகை முறை (**Episcopacy**), மூப்பர் ஆளுகை முறை (**Presbyterianism**), குவாக்கர்ஸ் (**Quakers**) ஆகிய பிரிவுகள் உண்டாயின.

ஆங்கிலேய சபை எலிசபெத் அரசியின் ஆட்சியின் பிந்திய காலத்தில் ஏற்பட்டது. அது ஆங்கில வேத புஸ்தகத்தையும் ஜெப புஸ்தகத்தையும், 39 விசுவாச அம்சங்களையும் ஆதாரமாய்க் கொண்டிருந்தது. வேருெரு விசுவாசப் பிரமாணம் அக்காலத்தில் வற்புறுத்தப்படவில்லை.

## 3. *பியூரிட்டானியர் (Puritan):*

இவர்கள் முற்றிலுமாய் புராட்டஸ்தாந்து கொள்கையைப் பின்பற்றினவர்கள். குருக்கள் விசேஷ அங்கி அணிவதையும், திருமுழுக்கில் சிலுவை அடையாளமிடுதல் முதலியவற்றையும், அவர்கள் எதிர்த்தனர். உரோமன் கத்தோலிக்கர் பின்பற்றின இவைகள் மூட நம்பிக்கைக் குரியவைகளென்று அவைகளை அகற்றி சபையைத் தூய்மையாக்க விரும்பினுர்கள்.

அவர்களுக்குப் பலமான எதிர்ப்புகள் ஏற்பட்டபடியால், அவ்வித குருக்கள் தங்கள் நிலையை இழந்தனர். அவர்களில் சிலர் ஆங்கிலேய சபையிலேயே அமைய விரும்பினுர்கள் (**Non-separatists**). ஆனுல் சிலர் ஆங்கிலேய சபையை விட்டுப் பிரிந்தனர் (**Separatists**). அவர்கள் சபை ஆட்சிமுறையை அனுசரித்தவர்கள்.

## 4. சபை ஆட்சி முறையை அனுசரித்தவர்கள் (Congregationalists or Separatists):

முதற்கண் சபை ஆட்சி முறையைப் பிரஸ்தாபித்தவரூபட் பிரௌன் (Robert Browne) என்பவர். "உண்மையான கிறிஸ்தவர்களெல்லாருடைய வாழ்க்கையையும் ஒழுக்க நிலையையும் காட்டும் நூல்" ('A book which showeth the life and manners of all true Christians') என்னும் நூலை இவர் எழுதியுள்ளார். இந்நூலில் சபை ஆட்சி முறையின் மூலப் பிரமாணங்கள் விளக்கப்பட்டிருக்கின்றன. அவரது எண்ணப்படி தெரிந்தெடுக்கப்பட்டவர்களே சபையின் உறுப்பினர். விசுவாசிகள் ஒருவரோடொருவர் உடன்படிக்கை செய்து இணைக்கப்பட்டவர்கள். கிறிஸ்துதான் சபைக்குத் தலை. அவருடைய கிருபையும் ஈவுகளும் ஒவ்வொரு கிறிஸ்தவனுக்கும் உரியது. ஒவ்வொரு சபையும் சுயஆட்சியுள்ளது ஒரு போதகரையும் உபதேசிகளையும் மூப்பர்களையும் டீக்கன்மாரையும் ஒவ்வொரு தனிச் சபையும் தெரிந்துகொள்ளும் உரிமையுள்ளது. ஒரு சபைக்கு மற்றொரு சபையின்மேல் அதிகாரம் கிடையாது. குருக்களின் ஆடம்பர ஆடைகளை பிரௌன் வெறுத்தார். ஆவிக்குரிய சபையானது உலக அரசுக்குக் கீழ்ப்பட்டிருக்கலாகாதென்றும் அவர் வலியுறுத்தினார்.

ஆங்கிலேய சபையில் சேர்ந்திருந்தால் மெய்க்கிறிஸ்தவ வாழ்க்கை நடத்தமுடியாதென்று தீர்மானித்து நார்விச் (Norwich) சென்று 1580-இல் முதல் கான்கிரிகேஷனல் சபையை உண்டாக்கினார். பிரௌன் துன்பப்படுத்தப்பட்டபொழுது நெதர்லான்ட்ஸ் (Netherlands) அடைந்தார். ஆனால் அங்கிருந்து மீண்டும் வந்தபோது ஆங்கிலேய சபையில் சேர்ந்தார். இக்காரணத்தினால் கான்கிரிகேஷனல் சபையார் அவரை விரும்பவில்லை.

ஒயிட்கிப்ட் (Whitgift) என்பவர் கந்தர்புரி பிரதம அத்தியட்சரானபோது ஜெப புஸ்தகத்தை உபயோகிக்க கட்டாயப்

படுத்தினர். புயூரிட்டானியரும் சபை ஆட்சிமுறையைத் தழுவினவர்களும் துன்பப்படுத்தப்பட்டனர். எனினும் சபை ஆட்சி முறைச் சபைகள் பல இடங்களில் உண்டாயின. அநேகர் இங்கிலாந்திலிருந்து நெதர்லான்ட்ஸுக்குச்சென்று அங்கு அடைக்கலம் புகுந்தனர்.

இங்கிலாந்தில் முதலாம் ஜேம்ஸ் அரசனானபோது புயூரிட்டானியர் தங்கள் எண்ணங்களைத் தெரியப்படுத்தி அரசனுக்கு மனுக்கொடுத்தனர். அவ்வேண்டுகோளுக்கிசைய அத்தியட்சர்களும் புயூரிட்டானியரும் சேர்ந்த ஒரு மாநாடு ஹாம்டன் கோர்ட்டில் நடத்தப்பட்டது. முக்கியமான மாறுதல்கள் ஒன்றும் அனுமதிக்கப்படாவிட்டாலும் வேதத்தின் ஒரு புதிய மொழி பெயர்ப்பு செய்ய கட்டளையிடப்பட்டது. இதற்கிசைய வெளியிடப்பட்ட வேதாகமமே **1611**-இல் பிரசுரிக்கப்பட்டு, தற்காலத்தில் உபயோகப்படுத்தப்பட்டு வரும் வேதாகமம். புயூரிட்டானியர் சபை ஒழுங்குகளுக்குக் கட்டுப்பட பலவந்தப்படுத்தப்பட்டனர். எனவே அநேகர் நாட்டிலிருந்து வெளியேறினர்.

லெய்டனில் குடியேறின சபை ஆட்சி பிரிவினர் அமெரிக்காவுக்கு ஊழியர்களை அனுப்பத் தீர்மானித்தனர். ஆகவே **1620**-இல் மேய் பிளவர் (**May Flower** என்னும் கப்பலில் போதகப் பிரயாணிகள் (**Pilgrim Fathers**) அட்லாண்டிக் சமுத்திரத்தைக் கடந்து பிளிமத் என்னுமிடத்தில் குடியேறி சபையை உண்டாக்கினர்கள். இவ்வாறு அமெரிக்காவில் புதிய இங்கிலாந்து என்னுமிடத்தில் சபை ஆட்சிமுறைச் சபை நிறுவப்பட்டது.

## 5. *ஸ்காத்லாந்தில் மூப்பராட்சி சபை*

ஜேம்ஸ் அரசன் அத்தியட்சர்களை ஏற்படுத்தி ஒரு பிரதம அத்தியட்சரையும் நியமித்தார். பாராளுமன்றம் அத்தியட்சர்களுக்கு அதிக அதிகாரத்தைக் கொடுத்தது. ஜேம்ஸ் அரசனுக்

குப்பின் முதலாம் சார்ல்ஸ் அரசனும் அதே முறையைப் பின்பற்றினுர். அரசன் அத்தியட்சர்களோடு சேர்ந்து ஆளுகை நடத்தினபடியால் புயூரிட்டானியரிலும் சபை ஆட்சி பிரிவினரிலும் அநேகர் அமெரிக்காவில் சென்று குடியேறினர்.

இதற்குப்பின் ஸ்காத்லாந்திலும் இங்கிலாந்திலும் உள்நாட்டுப்போர் ஏற்பட்டது. ஸ்காத்லாந்தில் அத்தியட்ச ஆளுகை முறை நீக்கப்பட்டு மூப்பராட்சி முறை (Presbyterianism) ஏற்படுத்தப்பட்டது. இரண்டு முதல் விஞ விடைகள் பிரசுரிக்கப்பட்டு அவற்றேடு, வெஸ்ட்மினிஸ்டர் அறிக்கையும் பயன்படுத்தப்பட்டது.

முதலாம் சார்ல்ஸ் சிரச்சேதம் பண்ணப்பட்டபின், அரசனுயிருந்த 2-ாம் சார்ல்ஸ் 1662-இல் ஜெப புஸ்தகத்தைக் கட்டாயப்படுத்த நடபடியெடுத்தார். ஆங்கில சபையை விட்டுப் பிரிந்திருந்தவர்களும் புயூரிட்டானியரும் ஆங்கிலேய சபையிலிருந்து நீக்கப்பட்டனர்.

இரண்டாம் சார்ல்ஸ் அரசனுக்குப் பின் ஆண்ட இரண்டாம் ஜேம்ஸ் அரசன் கத்தோலிக்கரை ஆதரித்தார். அவர் இங்கிலாந்தை உரோமன் கத்தோலிக்க நாடாக்க வேண்டுமென்று எண்ணினுர். 1688-இல் ஏற்பட்ட புரட்சியில் நெதர்லான்ட்ஸிலுள்ள உல்லியம் (William of Orange) இங்கிலாந்துக்கு அரசனுக ஏற்படுத்தப்பட்டார். அவர் 1689-இல் எல்லாக் கட்சிகளுக்கும் உரிமை அளிக்கும் ஒரு கட்டளையைப் பிறப்பித்தார். ஸ்காத்லாந்திலுள்ள பாராளுமன்றமும் எல்லாச் சபைப் பிரிவினருக்கும் தத்தம் தொழுகைக்குரிய உரிமையை அளித்தது. ஸ்காத்லாந்தின் வட பாகத்தில் அத்தியட்ச ஆளுகை சபையும் தென் பாகத்தில் மூப்பராளுகை சபையும் பலத்திருந்தன. ஆனுல் இரு கட்சியினருக்கிடையே இருந்த போராட்டம் சமரசத்திற்கு வந்தது.

## 6. குவேக்கர் பிரிவினர் (Quakers)

இவர்கள் நண்பர் சங்கத்தார் (**Society of Friends**) என்றும் அழைக்கப்பட்டனர். இப்பிரிவை ஏற்படுத்தியவர் ஜியார்ஜ் பாக்ஸ் (**George Fox 1624–1691**) என்பவராகும். இவர் ஒரு நெசவு தொழிலாளரின் மகன். பாப்டிஸ்ட் சபையோடு சேர்ந்து வாழ்ந்தார். ஆனால் அச்சபையில் அவர் அதிருப்தி அடையலானார். கிறிஸ்து ஆத்துமாவில் பிரகாசிக்கச் செய்யும் உள்ளான ஒளியை அவர் வலியுறுத்தலானார். கடவுளின் வெளிப்படுதல் வேதாகமத்தில் மட்டும் அடங்கியிருக்கவில்லை. ஆவியானவர் விசுவாசிகளை உயிர்ப்பிக்கிறார். அவர் உள்ளங்களைப் பிரகாசிக்கச் செய்து கடவுளின் சித்தத்தை செய்ய வல்லமைப்படுத்துகிறார். ஆகவே கடவுளால் உபயோகப்படுத்தப்படுகிற ஆண்களும் பெண்களும் செய்யும் பணியே மெய்யான பணியாகும். இவ்வெண்ணத்தினால் உத்தியோக நிலையில் ஏற்படுத்தப்பட்ட போதக பணியை அவர் அங்கீகரிக்கவில்லை. சாக்கிரமந்துகள் உள்ளான ஆவிக்குரிய தன்மையுள்ளன. ஆதலின் வெளிப்படையான காரியங்கள் அவசியமில்லை. கிறிஸ்தவர்கள் அனைவரும் சமமானவர்கள். எனவே 'மறைத்திரு' என்று போதகர்கள் அழைக்கப்படுவதை அவர் வெறுத்தார். கிறிஸ்தவன் போரில் ஈடுபடலாகாது. அடிமைத்தனத்தை அவர் அரோசித்தார். கிறிஸ்தவர்கள் மாற்றி அமைக்கப்பட்டு பிரதிஷ்டிக்கப்பட்ட வாழ்க்கை நடத்தவேண்டும்.

புயூரிட்டானிய பிரிவிலிருந்து அநேகர் அவரைப் பின்பற்றலானார்கள். இரண்டு ஆண்டுகளுக்குள் லண்டன், பிரிஸ்ட்டல், நார்விச் முதலிய இடங்களில் குவேக்கர் கொள்கை பரவினது.

இங்கிலாந்தில் இக்கொள்கைக்கு மிகுந்த எதிர்ப்பு உண்டானது. அநேகர் சிறையிலிடப்பட்டனர். நானூறு பேர் சிறையில் மாண்டனர்.

உல்லியம் பென் என்பவர் 1666-இல் குவேக்கர் கொள்கைகளை ஏற்றுக் கொண்டு குவேக்கர் பிரிவை வளரச் செய்தார். அமெரிக்காவில் நியூ ஜெர்சி (New Jersey) யில் 800 குவேக்கர்கள் அனுப்பப்பட்டனர். 1689-இல் குவேக்கர்கள் தங்கள் தொழுகைக்குரிய உரிமையைப் பெற்றபொழுது அவர்கள் இடையூறின்றி வாழலானுர்கள்.

## *7 மறுமுழுக்குவாதிகள் (Anabaptists):*

1525-இல் மறுமுழுக்கு கொள்கை ஆரம்பமானது. ஸ்விங்கிளி பணிபுரிந்த சூரிச்சில் கிராபெல் (Grebel), மேன்ஸ் (Manz) என்பவர்கள் திருமறையின் அதிகாரத்தை ஒப்புக்கொண்டு சபையில் இன்னும் கூடுதலான சீர்திருத்தம் தேவை என்று உணர்ந்தனர். திருமறையில் குழந்தைகளுக்குத் திருமுழுக்கு கொடுப்பதைப் பற்றி ஒரு ஆதாரமும் இல்லாதபடியால் குழந்தைகளுக்குத் திருமுழுக்கு கொடுப்பது சரியல்ல என்று வாதித்தனர்.

1525-இல் ஒரு பொதுவான ஆய்வு நடத்தப்பட்டது. அதில் மறுமுழுக்குவாதிகளுக்குச் சரியான ஆதரவு கிடைக்கவில்லை எல்லா குழந்தைகளும் திருமுழுக்கு பெறவேண்டுமென்று வற்புறுத்தப்பட்டது. ஆகவே, கிரெபெல், மேன்ஸ் என்பவர்கள் சபையை விட்டுப்பிரிந்து ஒரு பிரிவினரானுர்கள். அவர்கள் மறுமுழுக்குவாதிகள் என்று அழைக்கப்பட்டனர். சூரிச் அரசாங்கம் அவர்களுக்கு எதிராயிருந்தது. எனினும், அவர்கள் பிடிவாதமாயிருந்தபடியால் அவர்களில் சிலர் நீரில் அமிழ்த்தப்பட்டனர்.

மறுமுழுக்குக் கொள்கை சாதாரண மக்களிடம் பரவினது. அவர்கள் சென்ற இடங்களிலெல்லாம் தங்கள் கொள்கையைப் பரப்பினுர்கள். இவ்வாறு நெதர்லான்ட்ஸில் அது பரவினது. அவர்களது விசுவாசத்தில் ஏழு அம்சங்கள் உள்ளன.

1) விசுவாசியானபின் திருமுழுக்கு பெற வேண்டும்.

2) திருமுழுக்கு பெற்ற மறுபடியும் பிறந்த கிறிஸ்தவர் களாலானதே திருச்சபை. நற்கருணையின் மூலம் அவர்கள் கிறிஸ்துவின் சரீரமாக இணைக்கப்படுகிறார்கள்.

3) சபைக்குப் புறம்பாக்குதல் சபையின் சிட்சை முறை.

4) உரோமை, லூத்தரன், ஸ்விங்கிளி சபைகளின் ஆரா தனைகளில் காணப்படும் மாம்சத்திற்கு அடிமைப்படும் அம்சங் கள் நீக்கப்படுதல்.

5) ஒவ்வொரு சபையும் அதனதன் உத்தியோகஸ்தர்களை தெரிந்துகொண்டு அவர்கள் மூலம் ஆட்சி நடத்தவேண்டும்.

6) உலகில் அரசாங்க முறை அவசியமெனினும், கிறிஸ்த வனுக்கு அதில் ஒரு பங்கும் இருக்கலாகாது.

7) கிறிஸ்தவன் போரில் ஈடுபடவோ பலம் உபயோகிக் கவோ, எந்தவிதமான ஆணையும் செய்வதோ தகாது.

திருமறையை எழுத்துப்படி நுட்பமாய் அனுசரிக்க மறு முழுக்கு வாதிகள் தீவிரமுடையவர்களாயிருந்தனர். அவர்களில் பல தலைவர்கள் எழும்பி வேறு காரியங்களையும் வலியுறுத்தலா னார்கள். ஒருவர் உள்ளான வாழ்க்கை திருமறையைவிட மேலானதென்றார். மற்றொருவர் தம்மை ஒரு தீர்க்கதரிசியாகத் தெரிவித்தார். சிலர் பொது உடைமையையும் சமூக புரட்சிகளை யும் போதித்தனர்.

இத்தகைய கொள்கைக்காரருக்கு எங்கும் எதிர்ப்பு இருந் தது. தலைவர்கள் இரத்த சாட்சிகளாய் மரித்தனர். அவர்களைப் பின்பற்றின பலரும் ஒழிந்தனர். உரோமன் கத்தோலிக்கரும் லூத்தரன் கிறிஸ்தவர்களும் இக்கொள்கையை பலமாய் எதிர்த்த படியால் இது அதிகமாய்ப் பரவவில்லை.

# ஜெர்மனியின் பக்தி இயக்கம்

# (PIETISTS IN GERMANY)

புராட்டஸ்தாந்து சபையில் அறிவு மிகவும் வலியுறுத்தப் பட்டபோது கோட்பாட்டில் பல தீமைகள் உட்புகுந்தன. அப் பொழுது புலமைக் கொள்கை (Scholasticism) உருவானது. இதை அனுசரித்த பிரபலமானவர்கள் வொல்ப் (Wolff), கான்ட் (Cant), ஹெகல் (Hegel) ஆகியோர். இதிலிருந்து பிரிந்து உண்டான இயக்கமே பக்தி இயக்கமாகும். இதை ஆரம்பித்த வர் பிராங்கபர்ட்டிலிருந்த ஸ்பேனர் (Spener) என்பவர். கிறிஸ் தவ வாழ்க்கையை உயர்த்துவதற்காக அவர் ஒரு குழுவை ஏற் படுத்தினுர். உண்மையான கிறிஸ்தவம் வாழ்க்கையில் காட்டப் படவேண்டுமென்று அவர் கூறினுர்.

இவ்வியக்கம் லீப்சிக் முதலான நகரங்களுக்குப் பரவினது. லீப்சிகில் பிராங்க் (Francke) என்பவர் அதன் ஒரு வல்லமை யான பிரசங்கியாயிருந்தார். 1691-இல் ஹாலே (Halle) பல் கலைக்கழகம் நிறுவப்பட்டபோது பிராங்க் இறையியல் வல்லுநராய் விளங்கினுர். அவர் மாணவர்களுக்குள் மிஷனெரி வாஞ்சை யைப் புகுத்தினுர். அதன் விளைவாக ஏறத்தாள அறுபது மிஷ னெரிமார் ஹாலே பல்கலைக்கழகத்திலிருந்து உலகின் பல்வேறு இடங்களுக்குச் சென்றனர். அவர்களின் மூவராகிய சீகன்பால்க் புளுச்சௌ, ஸ்வார்ட்ஸ் ஆகியோர் இந்தியாவுக்கு வந்தவர்கள்.

பக்தி இயக்கத்தைச் சேர்ந்தவர்கள் லூத்தரன் சபையிலி ருந்து பிரிந்து வாழவில்லை. ஆனுல் அவர்கள் உண்மையான ஆவிக்குரிய வாழ்க்கையை வற்புறுத்தினுர்கள். பிரசங்க ஊழி யத்தை அவர்கள் முன்னேற்றத்திற்குக் கொண்டுவந்தனர். திருச்சபையில் சபையாரின் பங்கையும் அவர்கள் அதிகரிக்கச் செய்தனர். வேதத்தை பக்திக்குரிய முறையில் ஆராய்ச்சி செய்ய வேத ஆராய்ச்சிகளையும் ஏற்படுத்தினுர்கள்.

# 9. மொரேவிய இயக்கம்

இவ்வியக்கத்தை ஆரம்பித்தவர் சீமான் சின்சன்டார்ப் (Count Zinzendorf) என்னும் பெரியாராவார். இவர் டிரெஸ்டனில் 1700 மேய் 26-ம் நாள் பிறந்தவர். இவரது தந்தை ஸ்பீனரின் நண்பராயிருந்தார். சின்சன்டார்ப் பிறந்து சிறிது காலத்திற்குள் அவரது தந்தை மரித்துவிடவே அவரது அன்னை வேறு மணம்புரிந்தனர். எனவே அவரது பக்தியுள்ள பாட்டி அவனை வளர்த்தனர். சிறு வயதிலிருந்தே அவர் கிறிஸ்துவிடம் பக்தியாயிருந்தார். 1716-இலிருந்து 1719 வரை சட்டம் பயின்ருர். ஆனுல் அவர் பக்தி இயக்கத்தால் கவரப்பட்டவராயிருந்தார்.

மொரேவியாவிலுள்ள கிறிஸ்தவர்கள் உபத்திரவத்தினிமித்தம் வேறிடத்தில் குடியிருக்கத் தேடுகையில் சின்சன்டார்ப் தமது இடத்தில் அவர்களைக் குடியிருக்கச் செய்தார். பின் அவரே அவர்களுக்குத் தலைவராய் விளங்கினுர். அவர்களது ஆவிக்குரிய வாழ்க்கையை அவர் ஒழுங்குபடுத்தினுர். மணமாகா நிலையை அவர் வற்புறுத்தவில்லை தினந்தோறும் தொழுகைக்காக அவர்கள் கூடும்படி திட்டம் செய்தார் மொரேவிய தொழுகைக்கு அவர் ஒழுங்கு செய்த இடம் ஹெர்ன்கட் (Herrnhut) என்று அழைக்கப்பட்டது. மொரேவியர் மிகுதியான தொகையினர் இருந்தனர் அவர்களோடு ஜெர்மனியிலுள்ள பக்தி இயக்கத்தாரும் வேறு பல வாஞ்சையுள்ள கிறிஸ்தவர்களும் சேர்ந்தனர்.

1727 ஆகஸ்ற் 13 ம் நாள் சின்சன்டார்ப் பரிசுத்த நற்கருணை ஆராதனையின் மூலம் மொரோவிய இயக்கத்தை உறுதிப்படுத்தினுர். அந்நாள் மொரேவிய சபைக்கு மறுபடியும் பிறந்த நாளாயிற்று. முந்நாள் மொரேவிய கிறிஸ்தவர்கள் ஒரு வித்தியாசமான பிரிவாய் வாழவேண்டுமென்று விரும்பியபோதும் சின்சன்டார்ப் பக்தி இயக்க எண்ணப்படி சபைக்குள்ளிருப்பதை

வற்புறுத்தினர். லூத்தரன் சபையிலேயே சேர்ந்திருக்க வேண்டுமென்ற அவரது எண்ணத்திற்கு எதிர்ப்பு இருந்தது.

கிறிஸ்துவின் சேவைக்காக எங்கும் செல்ல ஆயத்தமுள்ள மொரேவிய மனப்பான்மை அவ்வியக்கம் ஒரு சிறந்த மிஷனெரி ஆவலுள்ள இயக்கமாயிருப்பதற்கு காரணமாக்கிற்று. வேறெந்த புராட்டஸ்தாந்து வகுப்பினரும் இல்லாத அளவில் அவர்கள் மிஷனரி கடமையில் விழிப்புள்ளவர்களாயும், சேவைக்கு பலர் பிரதிஷ்டித்தவர்களாகவும் காணப்பட்டனர்.

ஆஸ்திரியாவிலுள்ள அதிகாரிகள் சின்சன்டார்ப் குடிகளை வசப்படுத்துகிறரென்று குற்றஞ்சாட்டலானார்கள். **1736** மார்ச் **20**-ஆம் நாள் அவர் நாடுகடத்தப்பட்டார். அதன் பின்னர் மேற்கு ஜெர்மனியில் சேவைபுரிய அவருக்கு வாய்ப்பு கிடைத்தது. **1737**-இல் பெர்லினில் அத்தியட்சராக அவர் அபிஷேகம் பண்ணப்பட்டார்.

மேற்கு இந்திய தீவுகளில் **1738, 1739**-இலும் லண்டனில் **1741**-இலும் சுற்றுப்பயணம் செய்து **1741** டிசம்பர் மாதம் நியூயார்க் சென்றார். பென்சில்வேனியாவில் மொரேவிய சபை ஏற்படுத்தி அவ்விடத்திற்கு பெத்லெகேம் என்று பெயரிட்டார். அது அமெரிக்காவில் மொரேவிய இயக்கத்திற்குத் தலைமை இடமாயிற்று.

அமெரிக்காவில் அவர் சேவை செய்தபின் **1743**-இல் ஐரோப்பாவுக்குத் திரும்பினர். ஹெர்ன்கட்டிலிருந்து ஆப்பிரிக்கா, லேபிரொடார் முதலிய இடங்களுக்கு மொரேவியா மிஷனரிமார் அனுப்பப்பட்டனர். மிகவும் கஷ்டமான இடங்களைத் தங்கள் சேவைக்காக மொரேவிய சங்கத்தார் தெரிந்தனர். இக்காலம் வரை இது அச்சங்கத்தின் பண்பாயிருக்கிறது.

சின்சன்டார்ப் லூத்தரன் சபையின் பாகமாயிருக்கவேண்டுமென்று விரும்பினபோதிலும் அது கைகூடவில்லை. மொரேவி

யன் இயக்கம் ஒரு தனிச்சபையாக இயங்கினது. 1745-க்குள் நல்ல அமைப்புக்குள் மொரேவியன் சபை வந்தது. அது பிரெஸ்பிற்றீரிய ஒழுங்கை சபை ஆட்சி முறைக்குப் பின்பற்றின போதிலும் அத்தியட்சர்களும், பிரஸ்பிற்றர்மாரும், டீக்கன்மாரும் இருந்தனர்.

சின்சன்டார்பின் இறுதி ஆண்டுகள் சபைச் சேவைகளில் செலவிடப்பட்டன. 1760 மேய் 9-ம் நாள் ஹெர்ன்கட்டில் அவர் மரித்தார். அமெரிக்காவில் மொரேவிய சங்கத்தின் சேவையில் ஈடுபட்டிருந்த ஸ்பேங்கன்பர்க் (Bishop Spangenberg) அத்தியட்சர் மொரேவிய சங்கத்தின் பொறுப்பை 1762-இல் ஹெர்ன்கட்டில் ஏற்றுக்கொண்டார். அவர் மூலம் மொரேவியன் சபை பெலப்பட்டு முன்னேற்றமடைந்தது.

---

## 10. இங்கிலாந்தில் மெதடிஸ்ட் இயக்கம்

பதினெட்டாம் நூற்றுண்டில் இங்கிலாந்தில் கிறிஸ்தவர்களுக்குள் ஊக்கம் குறைந்த அளவில் காணப்பட்டது. சபை ஊழியங்கள் ஆவிக்குரிய தன்மையில் குறைந்ததாயிருந்தது. மக்களிடமும் ஆத்மீக வாழ்க்கை குன்றுதலடைந்திருந்தது. ஒரு காலத்தில் இல்லாத அளவு குடிவெறியும் அதிகமாயிருந்தது.

ஆவிக்குரிய ஜீவியத்தில் அனலுண்டாக்க பல சங்கங்கள் ஏற்படுத்தப்பட்டன. 1678 இல் லண்டனில் சில வாலிபர் வேத வாசிப்புக்காகவும் ஜெபத்திற்காகவும் ஒன்றை ஏற்படுத்தினார்கள். 1700-க்குள் லண்டனில் மட்டும் ஏறத்தாழ 100 சங்கங்கள் அமைக்கப்பட்டன. இங்கிலாந்திலும் ஐயர்லாந்திலும் இத்தகைய சங்கங்கள் எழும்பின அவற்றில் ஒன்று எப்வொர்த் (Epworth) என்னுமிடத்தில் யோவான் வெஸ்லியின் தந்தையாகிய சாமுவேல் வெஸ்லியால் உருவாக்கப்பட்டது. இச்சங்கங்கள் மெதடிஸ்ட் இயக்கம் ஆரம்பமாகும் காலத்தில் முக்கியமாய் விளங்கின

யோவான் வெஸ்லி, சார்ல்ஸ் வெஸ்லி ஆகிய சகோதரர் எப்வொர்த்தில் குருவாயிருந்த சாமுவேல் வெஸ்லியின் குமாரர். யோவான் வெஸ்லி 1703 ஜூன் 17-ஆம் நாளிலும், சார்ல்ஸ் வெஸ்லி 1707 டிசம்பர் 18-ஆம் நாளிலும் பிறந்தனர். சாமுவேல் வெஸ்லிக்குப் பத்தொன்பது பிள்ளைகள் பிறந்தன. எட்டுப் பிள்ளைகள் குழந்தைப் பருவத்தில் இறந்துவிட்டன. யோவான் வெஸ்லி 15-ஆவது குமாரன். சார்ல்ஸ் வெஸ்லி 18-ஆவது குமாரன். அவர்களது தாய் சூசன்னு அவர்கள் தந்தையைப் போல் ஒரு பக்தியுள்ள ஆங்கிலேய சபையாள்.

பள்ளிக்கூடத்தில் இருவரும் திறமையாய்த் தேர்வு பெற்றனர். யோவான் 1720-இலும், சார்ல்ஸ் 1726 இலும் ஆக்ஸ்பர்டிலுள்ள கிறிஸ்து சபைக் கல்லூரியில் பிரவேசித்தனர்.

யோவானின் திறமையினிமித்தம் 1725 செப்டம்பர் 25-ஆம் நாள் டீக்கனாக அபிஷேகம் பெற்றார். அவர் டீக்கன் பட்டம் பெற்றதிலிருந்து 1738-இல் அவர் மனமாற்றம் அடையும் வரையில் மிகுந்த ஆத்ம போராட்டத்தை அனுபவித்தார். 1728 செப்டம்பர் 22-ஆம் நாள் யோவான் குருவாக அபிஷேகம் பெற்றார்.

சார்ல்ஸ் வேறு இருவரோடு சேர்ந்து ஒரு சிறு குழுவை ஆரம்பித்தனர். பின்னர் யோவான் அதற்குத் தலைவராய் அமைந்தார். அவர்கள் ஆக்ஸ்பர்டிலுள்ள சிறையில் சென்று சிறைவாசிகளை சந்தித்தனர். மேலும் அவர்கள் உபவாசித்து, பிரதிஷ்டிக்கப்பட்ட வாழ்க்கை செய்ய முயன்றனர். பல்கலைக் கழகத்தில் பலர் அவர்களைத் தூய குழுவினரென்றும், சில மாணவர்கள் அவர்களை மெதடிஸ்தர் என்னும்பட்டப்பெயராலும் அழைத்தனர்.

1735-இல் யோவான் வெஸ்லியும், சார்ல்ஸ் வெஸ்லியும் அமெரிக்காவிலுள்ள ஜியார்ஜியாவில் சேவை புரிய மிஷனெரிகளாய் **S. P. G.** சங்கத்தாரால் அனுப்பப்பட்டனர். அவர்கள் சிம்மன்ட்ஸ் (Simmonds) என்னும் கப்பலில் 1735 அக்டோபர்

14-ாம் நாள் அமெரிக்காவுக்குப் புறப்பட்டனர். அட்லாண்டிக் சமுத்திரத்தைக் கடக்கையில் பயங்கரமான கொந்தளிப்புகள் உண்டாயின. ஜனுவரி 25-ாம் நாள் உண்டான புயலிலும், அலை வீழ்ச்சியிலும் கப்பல் அமிழத்தக்க நிலையிலாயிற்று. கப்பலிலிருந்தவர்களில் மொரேவியரைத் தவிர ஏனையோர் பெருங் கூச்சலிட்டனர் மொரேவியரோ மிகுந்த அமைதலுள்ளவர்களாய்க் காணப்பட்டனர். மேலும் கவலைக்கிடமான அச்சமயங்களில் பாடிக் கொண்டிருந்தனர். பின்பு யோவான் வெஸ்லி மிகுந்த ஆச்சரியத்துடன் அவர்கள் பயப்படவில்லையோ என்று அவர்களிடம் கேட்க அவர்கள் இல்லை என்றனர். அவர்கள் சின்சன்டார்பின் சீடர்களாய் பக்தி இயக்கத்தைச் சேர்ந்தவர்களாயிருந்தனர். தனக்கும் அவர்களுக்குமுள்ள வித்தியாசத்தை அவர்கள் விடுத்த விடையிலிருந்து யோவான் வெஸ்லி எளிதில் புரிந்து கொள்ளலானார். அந்நாள் யோவானுக்கு ஒரு மகிமையான நாளாயிருக்தது. ஆயினும் அவரது மனமாற்றம் பின்னர்தான் நடந்தது. அவர்கள் கரை சேர்ந்ததும் ஸ்பேன்கன்பர்க் அத்தியட்சர் யோவான் வெஸ்லியிடம், ''இயேசு கிறிஸ்துவை நீர் அறிவீரா?'' என்று கேட்டார். அதற்குப் பதிலாக, ''அவர் உலகத்தின் மீட்பரென்று நான் அறிவேன்'' என்றார் வெஸ்லி. ஸ்பேன்கன்பெர்க் மீண்டும், ''அது மெய்யே. ஆனால், அவர் உம்மை மீட்டுள்ளாரென்று அறிவீரா?'' என்று கேட்டார். இக்கேள்வி யோவான் வெஸ்லியைத் திக்குமுக்காடச் செய்துவிட்டது.

ஜியார்ஜியாவில் நற்செய்தியைப் பிரசங்கித்து ஒரு ஆண்டு ஒன்பது மாதங்களுக்குப்பின் 1738, பெப்ருவரி 1-ாம் நாள் இங்கிலாந்து திரும்பினார். இங்கிலாந்தில் சின்சன்டார்பின் சீடராகிய பேதுரு போலர் (Peter Bohler) யோவான் வெஸ்லியை விசுவாசத்தில் உறுதிப்படுத்தக் காரணமாயிருந்தார். ''விசுவாசத்தை அடைந்து கொள்ளுமட்டும் அதைப் பற்றி பிரசங்கியும்; அப்பொழுது அது உமக்குக் கிடைக்கும். விசுவாசத்தைப் பற்றி பிரசங்கிக்கத் தொடருவீர்'' என்று அவர் யோவான் வெஸ்லிக்குக் கூறினார். இவ்வார்த்தைகள் 1738 மேய் மாதம் 24-ாம் நாளில்

நடந்த அவரது மனமாற்றத்திற்குக் காரணமாயிருந்தன. அதன் பின்பு சார்ல்ஸ் வெஸ்லியும் சில நண்பர்களால் வாழ்க்கைத் திருப்பத்தை அடையலானார்.

அதுமுதல் இருவரும் சபைகளிலும் கூட்டங்களிலும் பிரசங்கித்து வெற்றியைக் காணலானார்கள். ஆவிக்குரிய எழுப்புதல் உண்டாக ஆரம்பித்தது. வார நாட்களிலும் ஆலயங்கள் நிரம்பின. ஞாயிற்றுக்கிழமைகளில் ஆலயங்களில் இடமில்லாமல் பலர் திரும்பிப் போகவேண்டியதும் நேரிட்டது.

யோவான் வெஸ்லியும் சார்ல்ஸ் வெஸ்லியும் அவர்களுடன் ஜியார்ஜ் ஒயிட்பீல்ட் என்பவரும் உண்டாக்கின ஆவிக்குரிய எழுப்புதல் மாய்ந்து போகும் தன்மை யுடையதாயிராமல் பின் ஆண்டுகளில் பலனளிக்கக்கூடிய நிலைவரமான தன்மையுடையதாய்க் காணப்பட்டது. அது இங்கிலாந்திலுள்ளவர்கள் வாழ்க்கைத் தரத்தையும் பண்பாட்டையும் மாற்றக்கூடியதாயிருந்தது. மனமாற்றத்தை இறையியலோடு பொருத்தினது இதற்கு ஒரு சிறந்த காரணம் எனலாம். ஒவ்வொரு கிறிஸ்தவனும் தனது விசுவாசத்தைக் குறித்த இறையியல் உண்மையை அறிந்திருக்க வேண்டுமென்பது அவர்களின் திட்டமாயிருந்தது.

இவ்வாறு ஏற்பட்ட உயிர்மீட்சியின் மூலம் ஆங்கிளிக்கன் சபையிலும், சபை ஆட்சி பிரிவு சபையிலும், பாப்டிஸ்ட் சபையிலும் ஆவிக்குரிய எழுச்சி காணப்பட்டது. அநேகர் மனமாற்றமடைந்தனர்.

1739-இல் பிரிஸ்டலில் மெதடிஸ்ட் சங்கம் உருவானது. அவரோடிருந்த பிரசங்கிமாருக்குக் குருப்பட்டம் கொடுக்கப்பட யோவான் வெஸ்லி முயற்சித்தபோது ஆங்கிலேய சபை அதற்கு மறுப்பு தெரிவித்தது. ஆகவே அவரும் அவரோடிருந்தவர்களும் ஆங்கிலேய சபையை விட்டுப் பிரியவேண்டியதாயிற்று. அதன்பின்புதான் இந்த மெதடிஸ்ட் சங்கம் ஏற்பட்டது. அது நல்முறையில் ஒழுங்கான அமைப்புக்குக் கொண்டுவரப்பட்டது.

ஆலயத்தை (Church) யோவான் வெஸ்லி மனவழிபாட்டிடம் (Chapel) என்று அழைத்தார். ஆவிக்குரிய வாழ்க்கையை வளரச்செய்ய கூட்டங்களை ஏற்படுத்தி அவற்றிற்கு வகுப்புகள் (Classes) என்று பெயர் கொடுத்தார். உறுப்பினர்களுக்கு டிக்கட்டுகள் அளித்து வகுப்புத்தலைவர்களையும் (Class Leaders) ஏற்படுத்தினர். ஒரு கூட்டத்திற்கு (Group) 12-க்கு அதிகமான உறுப்பினர்கள் இல்லை. பிரசங்கிமாரையும், சபையாரையும் அவர் ஊக்கமூட்டினர்.

## மெதடிஸ்ட் இயக்கத்தாலுண்டான விளைவுகள்

1) பியூரிட்டானியரின் புகழ் அதிகம் விளங்கினது. சபை ஆட்சி, பாப்டிஸ்ட், மெதடிஸ்ட் சபைகள் பெருமிதமாய் வளர்ந்தன.

2) ஆங்கிலேய சபையில் பலர் சுவிசேஷ வாஞ்சையுடையவர்களானர்கள். அவர்கள் தாழ்ந்த சபைக் கட்சியின (Low Church party) ரென்றும். உரோமன் சபையோடு அனுதாபமுள்ளவர்கள் உயர்ந்த சபைக் கட்சியின (High Church party) ரென்றும் கருதப்பட்டனர்.

3) இங்கிலாந்திலும் அமெரிக்காவிலும் வேறு இடங்களிலும் சமூக சீர்திருத்தங்கள் ஏற்பட்டன. யோவான் ஹவர்ட் (John Howard என்பவர் சிறைச்சாலைகளைச் சீர்திருத்த முயன்று பல மாறுதல்களைக் கொண்டுவந்தார்.

4) சிறுவர் பயிற்சியில் அதிக கவனம் செலுத்தப்பட்டது. ருபட் ரேய்க்ஸ் (Robert Raikes) என்பவர் 1780-இல் ஓய்வு நாட் பாடசாலையை உருவாக்கினர். அது அமெரிக்காவுக்கும் பரம்பினது.

5) கிறிஸ்தவ இலக்கியம் உயிரடைந்தது. 1779-இல் மார்க்கக் கைப் பிரதி சங்கம் (Religious Tract Society) லண்டனில்

ஆரம்பிக்கப்பட்டது. 1804-இல் பிரித்தானிய சர்வ தேச வேதாகம சங்கம் (British and Foreign Bible Society) ஏற்படுத்தப்பபட்டது. 1812-இல் அமெரிக்கக் கைப்பிரதி சங்கம் (American Tract Society) உண்டாக்கப்பட்டது.

6) மிஷனரி இயக்கங்கள் ஏற்படுவதற்கும் மெதடிஸ்ட் இயக்கம் காரணமாயிருந்தது. சபைகளில் மிஷனரி சேவையைப்பற்றிய புத்தெண்ணம் எழுந்தது. அதன் மூலம் அநேக மிஷனரி சங்கங்கள் ஏற்பட்டன 1792-இல் பேப்டிஸ்ட் மிஷனரி சங்கம் உண்டானது. (B. M. S.) 1795-இல் லண்டன் மிஷனரி சங்கம் (L. M. S.) ஆரம்பிக்கப்பட்டது. 1799-இல் சபை மிஷனரி சங்கம் (C. M. S.) நிறுவப்பட்டது. 1813-இல் இங்கிலாந்து வெஸ்லியன் மிஷனரி சங்கம் (Wesleyan Missionary Society of England) உருவானது. 1819-இல் அமெரிக்கன் மிஷனரி சங்கம் (American Missionary Society) ஏற்படுத்தப்பட்டது. 1814-இல் அமெரிக்கன் பாப்டிஸ்ட் சங்கம் (American Baptist Society) ஆரம்பமானது. 1825-இல் ஸ்காத்லாந்து சபையின் மிஷன் போர்ட் (The Mission Board of the Church of Scotland) ஸ்தாபிக்கப்பட்டது. 1815-இல் பேசில் சுவிசேஷ மிஷனரி சங்கம் (Basel Evangelical Missionary Society) ஏற்படுத்தப்பட்டது. 1821-இல் டேனிஷ் மிஷனெரி சங்கம் (Danish Missionary Society) உண்டானது. 1924-இல் பெர்லின் மிஷனரி சங்கமும் (Berlin Missionary Society) பாரீஸ் மிஷனரி சங்கமும் (Paris Missionary Society) தோற்றுவிக்கப்பட்டன.

---

# 11. 19-ாம் நூற்றுண்டில் இங்கிலாந்தில் தோன்றின வேறு சபைப் பிரிவுகள்

## *1. விசால சபைப் பிரிவு (Broad Church party)*

ஆங்கிலேய சபையில் காணப்பட்ட உயர்ந்த தாழ்ந்த கட்சிகளிலிருந்து இது வேறுபட்டது. மார்க்க உள்ளுணர்வை அவர்கள் அதிகமாய் வற்புறுத்தினுர்கள். சபை தெய்வீக தாபனமெனினும் சாக்கிரமந்துகளிலும், புத்தியை உபயோகித்து வாதிப்பதிலும் அதிகமாய் வலியுறுத்தலாகாது. மார்க்க சத்தியங்களை நேரடியாகப் பெற்றுக்கொள்ள வேண்டும். தோமா அர்னுல்ட் என்பவர் இப்பிரிவில் பிரபலமானவர். சபையின் பல கோட்பாடுகளைப் புறக்கணித்தவர்களையும் சபையில் சேர்த்து உயிருண்டாக்க வேண்டுமென்பது அவரது கருத்து. உரோமன் கத்தோலிக்கரையும், ஒருமைக்கொள்கைக்காரரையும்(**Unitarians**) யூதர்களையும் சபையில் சேர்க்க அவர் விரும்பவில்லை. ஏனையோர் ஆங்கிலேய சபையிலிருக்க வேண்டுமென்று அவர் விரும்பினுர். இக்கட்சியானது வளரவில்லை. அனுல் இதிலிருந்து ஆங்கிலேய கத்தோலிக்க கட்சி உருவானது

## *2. ஆங்கிலேய கத்தோலிக்கப் பிரிவு அல்லது ஆக்ஸ்பர்ட் இயக்கம் (Oxford Movement)*

மெதடிஸ்ட் இயக்கத்திற்கு எதிராக இது எழும்பினது. பியூரிட்டானிய இயக்கத்திற்கும் இது எதிரானது. சபைக்குள்ளிருந்து ஆவிக்குரிய அனலைப் பெற்றுக்கொள்ளவேண்டுமென்பது அவர்களது எண்ணம். உரோமைச் சபைக்கும் புராட்டஸ்தாந்து சபைக்கும் இடையே ஆங்கிலேய சபை பொன்வழி என்று அவர்கள் எண்ணினுர்கள். பரிசுத்த நற்கருணையாகிய சாக்கிரமந்து முக்கியமானதென்றும் அப்போஸ்தல வரிசையிலுள்ளவர்களே அதை வழங்க வேண்டுமென்றும் அவர்கள் வலியுறுத்தினுர்கள். இந்த ஆக்ஸ்பர்ட் இயக்கமானது 1833 ஜுலை

14-ாம் நாள் பிறந்தது. கிறிஸ்துவின் சரீரம் என்னும் அளவுக்குச் சபையானது வளரவேண்டுமென்று அவர்கள் கருதினுர்கள்.

இப்பிரிவில் தலைவர்களாயிருந்தவர்கள் ஆங்கிலேய சபையின் எதிர்ப்பினிமித்தம் விட்டுப் பிரிந்து உரோமன் கத்தோலிக்க சபையைச் சேர்ந்தனர். இதில் ஒரு தலைவராயிருந்த நியூமன் (I. H. Newman) என்பவர் "காரிருளில் என் நேச தீபமே" என்னும் பாடலை இயற்றியவர். இவர் 1845 அக்டோபர் மாதத்தில் உரோமைச் சபையில் சேர்ந்தார்.

## 3. கத்தோலிக்க அப்போஸ்தல சபை (Catholic Apostolic Church)

இச்சபைக்குப் பன்னிரண்டு அப்போஸ்தலர்கள் இருந்தனர் பரிசுத்த ஆவியின் கருவிகளாக அவர்கள் எண்ணப்பட்டனர் கர்த்தருடைய தீவிர வருகையை அவர்கள் எதிர்பார்த்தனர். ஜெர்மனியிலும் அமெரிக்காவிலும் இது பரவினது.

## 4. பிளிமத் சகோதரர் (Plymouth Brethren)

பிளிமத்துக்கு அருகாமையில் குருவாக பணியாற்றின டார்பி (Dorbey) என்பவர் இதை நிறுவியவர். அவர் போதகர்களையும், விசுவாசப் பிரமாணங்களையும் ஒப்புக்கொள்ளவில்லை. விசுவாசமும் அன்புமே முக்கியமானவை. பரிசுத்த ஆவியானவர் விசுவாசிகளை வழிநடத்தி ஒன்ருய் இணைக்கிருர். இந்த இயக்கமானது ஸ்விட்சர்லாந்து, பிரான்ஸ், ஜெர்மனி, அமெரிக்கா முதலிய இடங்களுக்குப் பரவினது.

## 5. இரட்சண்ய சேனை

இதை நிறுவியவர் உல்லியம் பூத் (William Booth) என்பார். இவர் மெதடிஸ்ட் போதகராயிருந்தவர். 1873-இல் இராணுவ முறையில் திருப்பணியை அவர் அமைக்கலாஞர். 1880-இல் அதற்கு 'இரட்சண்ய சேனை' என்ற பெயர் வழங்கப்

பட்டது. அவர் தெருப்பிரசங்கத்தில் அதிக ஆர்வம் காட்டினர். சாக்கிரமந்துகளை அவர் முக்கியமாகக் கருதவில்லை. இது பல நாடுகளுக்குப் பரவினது. சிறந்த சேவையை இது செய்து வருகின்றது.

---

# 12. அமெரிக்காவில் 19-ாம் நூற்றாண்டிலிருந்து உண்டான சபைப் பிரிவுகள்

## 1. *உரோமன் கத்தோலிக்கர்*

புராட்டஸ்தாந்து சபை அமெரிக்காவில் பிரவேசிக்கும் முன்னரே கத்தோலிக்க சபை அங்கு பரவினது. தென் அமெரிக்காவில் பெரும்பாலும் உரோமன் கத்தோலிக்கர் நிறைந்துள்ளனர்.

## 2. *அமெரிக்காவின் ஆங்கிலேய சபை (The Church of England in America)*

புராட்டஸ்தாந்து சபையானது அமெரிக்காவில் கணக்கில்லாத பிரிவுகளுடையதாய்க் காணப்படுகின்றது. அது உலகில் ஒரு அதிசயம் எனலாம். ஆங்கிலேய சபை முக்கியமான பிரிவுகளில் ஒன்று. இது தற்பொழுது புராட்டஸ்தாந்து அத்தியட்சராளுகை சபை (The Protestant Episcopal Church) என்று பெயர் பெற்றுள்ளது. திருத்தி அமைக்கப்பட்டதொரு ஜெபப் புஸ்தகம் இச்சபையில் பயன்படுத்தப்பட்டு வருகிறது.

## 3. *அமெரிக்காவின் மெதடிஸ்ட் சபை (The Methodist Church in America)*

இச்சபைக்கு அத்தியட்சர்களும் உண்டு. இச்சபையில் அப்போஸ்தல வரிசை வலியுறுத்தப்படவில்லை.

## 4. லூத்தரன் சபை

இச்சபையின் தனிச்சபைகள் சபை ஆட்சி முறையைப் பின் பற்றுகின்றன. பேரவைகளில் மூப்பராளுகை முறை பின்பற்றப் படுகிறது.

## 5. அனைத்துலக மீட்புக்கொள்கைச் சபை (*The Universalists*)

இதை உருவாக்கின யோவான் முரே (**John Murray**) என்பவர் மனுக்குலம் அனைத்திற்கும் மீட்பு உண்டு என்று போதித்தார். அதைப் பலரும் பின்பற்றினபடியால் இச்சபை உண்டாயிற்று.

## 6. ஒருமைக் கொள்கைச் சபை (*Umitarian Church*)

இச்சபையின் தலைவர்களில் சிலர் புகழ்பெற்ற அறிஞர்களும் அரசாங்க உத்தியோகஸ்தர்களுமாவர்.

## 7. கும்பர்லாந்து மூப்பராளுகைச் சபை (*Cumberland Presbyterian Church*)

**1802**-இல் கும்பர்லாந்தில் சபைகள் மிகவாய்ப் பெருகின போது தேவையான பயிற்சியில்லாத வாலிபர்களுக்குக் குருப்பட்டம் கொடுக்கப்படவேண்டுமென்று சில குருக்கள் விரும்பின போது பேரவை அதற்கு மறுப்பு தெரிவித்தது. ஆகையால் பிரிந்து இச்சபைப் பிரிவை ஏற்படுத்தினார்கள்.

## 8. கிறிஸ்துவின் சீடர்கள் (*The Disciples of Christ*):

ஐயர்லாந்திலிருந்து அமெரிக்காவுக்கு **1807**-இல் சென்ற தோமா காம்பல் (**Thomas Campbell**) என்பவர் மூப்பராளுகைச் சபையைச் சேர்ந்த அனைவரையும் திருவிருந்துக்கு அழைத்தார்.

எல்லா கிறிஸ்தவர்களும் ஐக்கியமாயிருக்க வேண்டுமென்று அவர் விரும்பினர். திருமறையை ஆதாரமாய்க் கொண்டு கிறிஸ் தவ சீடத்துவத்தை அவர் அழுத்தினர். முழுக்கு ஸ்நான கோட்பாட்டையும் அவர் பின்பற்றினர். பாவ மன்னிப்புக்கு அது இன்றியமையாததென்றும் அவர் வலியுறுத்தினர். **1832**இல் 'கிறிஸ்துவின் சீடர்கள்' என்னும் பெயரோடு இச்சபை விளங்க லாயிற்று.

## *9. அட்வென்டு கொள்கைச் சபை (The Adventists Church):*

இப்பிரிவு உல்லியம் மில்லர் **(William Miller 1782–1849)** என்பவரால் ஆரம்பமானது. மாசச்சூசட்ஸிலும்**(Massachusetts)** நியூயார்க்கிலும் வாழ்ந்து பாப்டிஸ்ட் சபையைச் சேர்ந்தார். திரு மறையிலுள்ள தீர்க்கதரிசனங்களை அவர் ஆராய்ந்து கிறிஸ்து **1843**-இல் மீண்டும் வருவாரென்று முடிவு கட்டினர். அவரு டைய எண்ணங்களை அவரைப் பின்பற்றினவர்கள் பரப்பினதன் பயனுக ஒரு இயக்கம் உண்டானது. **1843**-இல் ஒன்றும் உல கில் ஏற்படாதபோது மில்லர் திரும்பவும் ஆய்வு செய்து கிறிஸ் துவின் வருகை **1844**-இல் நடக்குமென்று தெரிவித்தார். **1844** இலும் உலகில் ஒரு மாறுதலும் ஏற்படவில்லை. அப்பொழுது அவர்கள் ஏனைய சபைகளால் துன்பப்படுத்தப்பட்டனர். ஆகவே அவர்கள் தங்களுக்கு ஒருசபையை உருவாக்கி அதற்கு அட்வன் டிஸ்ற் சபை என்று பெயரிட்டனர். அவர்களில் பெரும்பான்மை யோர் வாரத்தின் முதல் நாளாகிய ஞாயிற்றுக்கிழமையில் ஓய்வு நாளை ஆசரிப்பதை விட்டுவிட்டு சனிக்கிழமையை ஓய்வுநாளாக அனுசரிக்கலானுர்கள். **1916**-இல் **80,000** பேர் இப்பிரிவைச் சேர்ந்தவர்களாயிருந்தனர். தங்கள் ஆட்சி அமைப்பை ஒழுங்கு படுத்தி உலகமெங்கும் தங்கள் எண்ணங்களைப் பரப்ப முயற்சி எடுத்தனர்.

### 10. விஞ்ஞான கிறிஸ்து சபை (*The Church of Christ Scientist,*)

இச்சபைப்பிரிவு மேரி மோர்ஸ் பேக்கர் எடி (**Mrs. Mary Morse Baker Eddy**) என்னும் பெண்ணால் உற்பத்தியானது. கான்கிரிகேஷனல் சபையைச் சேர்ந்த இப்பெண் வாலிபத்தில் நரம்புத்தளர்ச்சியினாலும் ஹிஸ்டீரியா (**Hysteria**) நோயினாலும் உபாதிக்கப்பட்டிருந்தனள். நியூ இங்கிலாந்திலுள்ள ஒருவரால் அவள் சுகம் பெற்றாள். **1879**-இல் இப்பிரிவு மாசச்சூசட்ஸில் பதிவுசெய்யப்பட்டது. பாஸ்ட்டன் (**Boston**) அதற்குத் தலைமை இடமாயிற்று. இது விஞ்ஞானக் கிறிஸ்து சபை அல்லது கிறிஸ்தவ விஞ்ஞான சபை (**The Christian Science Church**) என்று அழைக்கப்படலாயிற்று. திருமதி எடியின் திறமையால் இச் சபைப்பிரிவு பரம்பினது. இதில் சரீர சுகமளித்தல் முக்கிய அம்சமாயிருந்தது.

### 11. எகோவாவின் சாட்சிகள் (*Jehovah's Witnesses*)

இப்பிரிவினர் அனைத்துலக வேத மாணவ சங்கம் (**The International Bible Students' Association**) என்றும், விழிப்புக் கோபுரம் (**Watch Tower**) என்றும், ரசல் கூட்டத்தினர் (**Russellites**) என்றும் தற்காலத்தில் சபையாரின் சுதேச மிஷனரி இயக்கம் (**Laymen's Home Missionary Movement**) என்றும் அழைக்கப்படுகின்றனர். இதை ஆரம்பித்து வைத்தவர் சார்ல்ஸ் டேஸ் ரசல் (**Charles Taze Russell 1852-1916**) என்பவர். அவர் திருமறையை ஆராய்ந்ததின் பலனாக கிறிஸ்து அதரிசனமான முறையில் **1874**-இல் மீண்டும் வந்தாயிற்று என்றும், ஆயிர ஆண்டுகள் ஆட்சி ஆரம்பித்து வைக்கப்பட்டாயிற்று என்றும் நம்பி அவற்றைப் போதிக்கலானார். தமது சபையைத் தவிர ஏனை சபைகளையெல்லாம் கடவுளால் புறக்கணிக்கப்பட்டு விட்டன என்பது அவரது கருத்து. நரகவேதனை கிடையாது என்பது இப்பிரிவில் முக்கிய போதனை.

## 12. *பெந்தேகோஸ்து சபைகள்* (*Pentecostal Churches*):

பெந்தேகோஸ்து சபையின் பல பிரிவுகள் அமெரிக்காவில் காணப்பட்டன. இரண்டாவது ஆசீர்வாதத்தை (**Second Blessing**) அவரகள் வலியுறுத்தினர்கள். பெந்தேகோஸ்து நாளில் பரிசுத்த ஆவியானவர் இறங்கினது போலவே மீண்டும் மீண்டும் இறங்குவாரென்றும் பல பாஷைகள் பேசுதல் அதன் காரணமாக ஏற்படுமென்றும் அவர்கள் போதித்தனர்.

மேற்கூறப்பட்ட பிரிவுகள் அமெரிக்காவில் வளர்ந்த முக்கியமான சபைப் பிரிவுகள். ஆனுல் இவற்றைத்தவிர எண்ணுக்கடங்காத சபைப் பிரிவுகள் புராட்டஸ்தாந்து சபையில் காணப்பட்டன. உரோமன் கத்தோலிக்க சபையிலிருந்து பிரிந்தது இப்பிரிவுகளுக்கு ஒரு காரணம் எனலாம்.

## 13. *கடவுளின்கூட்டுறவு சங்கங்கள்* (*Assemblies of God*)

இப்பிரிவு **1914**-இல் அமைக்கப்பட்டது. இதில் தற்சமயம் **5** லட்சத்திற்கு அதிகமானவர்கள் உறுப்பினாயிருக்கின்றனர். எழுபது நாடுகளில் அவர்கள் பரவியிருக்கின்றனர். ஆண்டொன்றுக்கு **290** சபைகள் சராசரி உண்டாகின்றன.

இவர்கள் பரிசுத்த ஆவியானவரால் ஞானஸ்நானம் பண்ணப்பட்டதற்கு நாவுவரம் ஒரு அறிகுறி என்று வற்புறுத்துகின்றனர். குணமாக்கும் வரமும் முக்கியப்படுத்தப்படுகிறது. திருமறையை எழுத்துப்படி அர்த்தப்படுத்துவதும் அவர்களது பண்பு.

மிஷன்கள், ஓய்வுநாட் பாடசாலை ஊழியம், சுவிசேஷ ஊழியம், வானொலிப் பதிவு நிகழ்ச்சிகள் ஆகியவற்றை இவர்கள் கொண்டு நடத்துகின்றனர். இவர்களும் உட்பட்ட ஒரு பெந்தேகோஸ்து மாநாடு மூன்று ஆண்டுகளுக்கொருமுறை நடைபெறுகிறது.

## 12. ஆப்பிரிக்காவில் சபை வளர்ச்சி

ஆப்பிரிக்காவின் வடபாகத்தில் எகிப்துக்கு மேற்கேயுள்ள கடற்கரைப் பாகத்தில் ஆதி நூற்றுண்டுகளிலிருந்த கிறிஸ்தவ சபைகள் முஸ்லீம் ஆட்சியின் கீழ் அழிந்து விட்டன. 19-ஆம் நூற்றுண்டின் ஆரம்பத்தில் அங்கு குடியேறின வணிகர்கள் ஆகியோர் கிறிஸ்தவர்களாக விளங்கினுர்கள். 1815-க்கும் 1914க்கும் இடையில் மேற்கு ஐரோப்பிய நாடுகள் அங்கே ஆதிக்கம் செய்தபொழுது கிறிஸ்தவர்களின் எண்ணிக்கை அதிகரித்தது. உரோமன் கத்தோலிக்க சபையும் புராட்டஸ்தாந்து சபையும் யூதர்களுக்குள்ளும் முஸ்லீம்களுக்குள்ளும் சுவிசேஷத்தைப் பரப்ப முயற்சிகள் எடுத்தனர். யூதர்களுக்குள்ளும் முஸ்லிம்களுக்குள்ளும் அதிக பலன் காணப்படாவிடினும், 19-ஆம் நூற்றுண்டின் இறுதியில் அல்ஜீரியாவில் (Algeria) ½ கோடி உரோமன் கத்தோலிக்கரும் டுனிஷியாவில் (Tunesia) அநேக ஆயிரங்களும், லிபியாவில் சில ஆயிரங்களும் இருந்தனர்.

எகிப்தில் பூர்விகத்தில் இருந்த சபைகள் அழிந்துபோகவில்லை. அங்குள்ள கிறிஸ்தவர்கள் பெரும்பாலும் மானேபிசித்த கொள்கையைப் பின்பற்றுகிறவர்களாயிருந்தனர். உரோமன் கத்தோலிக்கர் சிலராகவே இருந்தனர். அவர்கள் 17-ஆம் நூற்றுண்டிலிருந்து அங்கு காணப்படுகின்றனர்.

---

## 13. பலஸ்தீனுவில் சபை வளர்ச்சி

19-ஆம் நூற்றுண்டில் துருக்கியர் பலஸ்தீனுவில் ஆதிக்கம் செய்திருந்தபோதிலும் அநேக கிறிஸ்தவர்கள் அங்கே காணப்பட்டனர். பூர்விக உரோமன் கத்தோலிக்க சபைகள் அங்கே இருந்தன. 19-ஆம் நூற்றுண்டில் புராட்டஸ்தாந்து சபைகளும் உண்டாயின.

## 14. சிரியாவில் சபை வளர்ச்சி

பலஸ்தீனுவிலிருந்ததைவிட சீரியாவில் அதிக கிறிஸ்தவர்கள் இருந்தனர். முதல் நூற்ருண்டிலிருந்தே இங்கே கிறிஸ்தவர்கள் இருந்து வருகின்றனர். யாக்கோபிய (Jacobite Church) சபை 8-ஏம் நூற்ருண்டிலேயே அங்கே ஆரம்பமானது. 19-ஏம் நூற்ருண்டில் புராட்டஸ்தாந்து சபைகளும் உண்டாயின.

---

## 15. ஆஸ்திரேலியாவில் சபை பரவுதல்

1815-இல் ஆஸ்திரேலியாவில் குடியிருந்தவர்கள் மிகச் சிலராக இருந்தனர். 18-ஏம் நூற்ருண்டின் பிற்பகுதியிலிருந்து பிரிட்டீஷ்காரர் அங்கே குடியிருக்க ஆரம்பித்தனர். 1914-இல் அவர்களே ஆஸ்திரேலியாவில் பெரும்பான்மையோராயிருந்தனர். ஆகவே பிரிட்டீஷ் தீவுகளிலிருந்து கிறிஸ்து மார்க்கம் அங்கே அதிகமாய்ப் பரவியது. ஜெர்மனியிலிருந்து லூத்தரன் சபையும் சிறிதளவில் அங்கே வேர்கொண்டது. 1836-இல் முதல் ஆங்கிலேய சபை அத்தியட்சர் அபிஷேகம் பண்ணப்பட்டார். அவர் உல்லியம் கிராண்டு பிரௌட்டன் (William Grant Broughton) என்பவர். அவருடைய திறமையான முயற்சிகளால் ஆங்கிலேய சபை ஆஸ்திரேலியாவில் அதிகமாய்ப் பரவியது.

---

# 2. மிஷனரி சங்கங்களின் காலம்

## 1. உரோமன் கத்தோலிக்க மிஷன்

சீர்திருத்தக் காலத்தில் கத்தோலிக்க சபையில் உண்டான உயிர் மீட்சி அயல் நாட்டு மிஷனரி ஊழியத்திற்கு வழி நடத்தினது. உரோமன் கத்தோலிக்க மிஷனரி ஊழியம் முக்கியமாக தொமினிக்கர், பிரான்சிஸ்கர் ஆகிய துறவற வகுப்புகளால் நடத்தப்பட்டது. ஜெசூட் மிஷன் நிறுவப்பட்டு அதன்மூலம் உலகின் பல இடங்களுக்கு மிஷனரிமார் அனுப்பப்பட்டனர்.

பிரான்சிஸ் சேவியர் (1506-1552) 1542-இல் இந்தியாவிலுள்ள கோவாவில் பிரவேசித்து தென்இந்தியாவிலும் அதன்பின் ஜப்பானிலும் சிறந்த ஊழியம் செய்து சபைகளை உருவாக்கினர்.

சீனுவில் உழைக்க சேவியர் செல்லும் தருணத்தில் மரிக்கலானுர். ஆனுல் 1581-இல் ஜெசூட் மிஷனைச் சேர்ந்த மேட்டியோ றிக்சி (Matteo Ricci, 1552-1610) சீனுவில் சென்று மிஷனரியாக உழைத்தார்.

இந்தியாவில் 1606-இல் ருபட் டி நொபிலி (1576-1656) மதுரையில் வந்து பிராமணரிடையில் நற்செய்திப் பணிபுரிந்தார். அதன்மூலம் நல்ல வெற்றி உண்டாவதாகக் காணப்பட்ட போதிலும் அம்முறை இறுதியில் போப்புவானவரால் அங்கீகாரம் பெறவில்லை. இத்தகைய முறைகளினுல் பல மனவேறுபாடுகள் ஏற்பட்டபடியால் 15-ாம் கிரகரி என்னும் போப்புவானவர் உரோமையிலிருந்தே மேற்பார்வை செய்யப்படும் ஒரு ஊழிய முறையை 1622-இல் நிறுவினுர்.

## 2. சுவிசேஷப் பிரபல்ய சங்கம் (The Society for the propagation of the Gospel in foreign parts)

S. P. G. சங்கம் என்று அழைக்கப்படும் இந்த மிஷனரி சங்கம் 1701-இல் நிறுவப்பட்டது.

## 3 தரங்கம்பாடி மிஷன்

டென்மார்க் அரசன் 4-ாம் பிரடரிக் இந்தியாவுக்குப் புராட்டஸ்தாந்து மிஷனரிமாரை அனுப்ப எண்ணினபோது பர்தொலோமேயு சீகன்பால்கும், ஹென்றிச் பூளுச்செளவும் தங்களை அர்ப்பணித்தனர். 1706-இல் ஜுலை 9-ாம் நாள் அவர்கள் தரங்கம்பாடியில் வந்து சேர்ந்தனர் அதுவே இந்தியாவில் புராட்டஸ்தாந்து மிஷனின் பிறந்தநாள். ஹாலே பல்கலைக் கழகத்திலிருந்தும் அதைச்சேர்ந்த தாபனங்களிலிருந்தும் 60 மிஷனெரிமார் அனுப்பப்பட்டனர். அவர்களில் சிறந்தவர் கிறிஸ்றியன் பிரடரிக் ஸ்வாட்ஸ் (Christian Friedrich Schwartz, 1726-1798).

## 4. மொரேவியன் மிஷனரி ஊழியம்

1732-இல் மொரேவிய மிஷனரி வேலைகள் ஆரம்பித்தன. ஹெர்ன்கட் மிஷனெரி ஊழியர்களுக்குத் தலைமை இருப்பிடமாக இருந்தது. சுரீனம் (Surinam), குயானு (Guiana), எகிப்து தென் ஆப்பிரிக்கா ஆகிய இடங்களில் மிஷனெரி வேலைகள் நடத்தப்பட்டன.

## 5. பாப்டிஸ்ட் மிஷனரி சங்கம்

இச்சங்கம் 1792-இல் உல்லியம் கேரியால் ஆரம்பிக்கப்பட்டது. உல்லியம் கேரி அதன் முதல் மிஷனரியாக இந்தியாவில் செய்த ஊழியம் வேறு மிஷனரி சங்கங்களும் எழும்பத் தூண்டிற்று.

## 6. லண்டன் மிஷனரி சங்கம் (L. M. S.)

இச்சங்கம் 1795 செப்டம்பர் மாதம் 21-ாம் நாள் நிறுவப்பட்டது. கான்கிரிகேஷனல் சபைப் போதகர் மறைத்திரு டேவிட் போக் (David Bogue என்பவரே அதை ஆரம்பிக்க முக்கிய காரணமாயிருந்தார். இச்சங்கத்தின் முதல் மிஷனரிமார் 1796-இல் டாகிற்றி (Tahiti) என்னுமிடத்திற்கு அனுப்பப்பட்டனர். மதகாஸ்கா, இந்தியா, பாப்புலா முதலிய இடங்களுக்கும் மிஷனரிமார் சென்று சபைகளை ஏற்படுத்தினர்கள்.

### 7 சபை மிஷனரி சங்கம் (*Church Missionary Society*):

இச்சங்கம் (C.M.S.) 1799-இல் யோவான் வென் (John Venn), தோமா ஸ்காட் (Thomas Scott) ஆகியோரின் முயற்சியால் உருவானது.

### 8. அமெரிக்கன் அயல்நாட்டு மிஷனரி போர்ட் (*American Board of Commissioners for foreign Missions*)

இது 1810-இல் நிறுவப்பட்டது. அமெரிக்காவிலுள்ள புது இங்கிலாந்து என்னுமிடத்தில் ஆரம்பிக்கப்பட்டது. புதிதாக உருவான ஆன்டோவர் இறையியல் செமினரி (Andover Theological Seminary) யிலுள்ள மாணவர்களின் வேண்டுகோளுக்கிசைய இந்த மிஷன் போர்ட் உருவானது. இதற்குக் காரணமாயிருந்த மாணவர்களின் தலைவர் யோவான் மில்ஸ் (John Mills) என்பவர். கான்கிரிகேஷனல் சபையைச் சேர்ந்தவர்களால் இது ஏற்படுத்தப்பட்டிருந்தபோதிலும் ஏனைய சபைகளும் இதை ஆதரித்தன. ஆசியாவைத் தங்கள் முக்கிய ஊழிய இடமாக இச்சங்கத்தினர் தெரிந்துகொண்டனர்.

### 9. வெஸ்லியன் மெதடிஸ்ட் மிஷனெரி சங்கம்

1817 – 1818-இல் இச்சங்கம் நிறுவப்பட்டது. ஆனால் அதற்கு முன்னேயே மெதடிஸ்ட் ஊழியர்கள் அயல் நாடுகளில் நற்செய்தியைப் பரப்பி வந்தனர்.

### 10. ஸ்காத்லாந்து சபையின் மிஷனெரி போர்டு (*The Church of Scotland Mission Boards*)

ஸ்காத்லாந்து சபையின் மிஷனரி ஊழியங்கள் 1825 இல் அமைக்கப்பட்டன. அலெக்சாந்தர் டப் (Alexander Duff)

அதன் முதல் மிஷனரியாக இந்தியாவில் 1829-இல் வந்து ஊழியம் செய்தார்.

## 11. பேசில் சுவிசேஷ மிஷனெரி சங்கம் (*Basel Evangelical Missionary Society*)

இது 1821-இல் தாபிக்கப்பட்டது.

## 1 . டேனிஷ் மிஷனரி சங்கம்

இது 1821-இல் உருவானது.

## 1:. பெர்லின் மிஷனரி சங்கம்

இச்சங்கம் 1824-இல் உண்டானது.

## 14. பாரீஸ் மிஷனரி சங்கம்

1824-இல் பாரீசில் இச்சங்கம் ஏற்படுத்தப்பட்டது.

## 15. சீனு உள்நாட்டு மிஷன் (*China Inland Mission*)

1865-இல் ஹட்சன் டேய்லர் (**Hudson Taylor**) என்பவரால் இந்த மிஷன் ஏற்பட்டது. திறமையும் வாஞ்சையுமுள்ள ஊழியர்கள் எச்சபையினராயிருப்பினும் அவர்கள் மிஷனெரிமாராக பயன்படுத்தப்பட்டனர். கிடைத்த வருவாயை ஊழியர்களுக்குப் பகிர்ந்து கொடுக்கப்பட்டதேயன்றி திட்டமான சம்பளம் கொடுக்கப்படவில்லை. நேரடியாக ஒருவரிடமும் பணஉதவி கேட்கப்படவில்லை. ஜெபத்தின் மூலமாகவே பண உதவியை நாடினூர்கள். 1914-இல் இம்மிஷனுக்கு 1000 மிஷனிமார் இருந்தனர்.

மிஷனெரி சங்கங்களின் ஊழியங்களின் விளைவாக உலகின் பல பாகங்களில் கிறிஸ்து மார்க்கம் பரவினது. ஆப்பிரிக்கா

வின் கடற்கரையோரங்களிலும் சுற்றியுள்ள தீவுகளிலும் போர்த்துக்கீசியரின் முயற்சிகளினால் உரோமன் கத்தோலிக்க சபை பரவினது. 1652-இல் டச்சுக்காரர் தென் ஆப்பிரிக்காவில் குடியேறினபோது புராட்டஸ்தாந்து சபை அங்கு வேர் கொண்டது. ஆப்பிரிக்காவின் புகழ்பெற்ற மிஷனரி லண்டன் மிஷன் சங்கத்தால் அனுப்பப்பட்ட டேவிட் லிவிங்ஸ்டன் (1813-1873) என்பவராகும். அவரது தியாக ஊழியம் வேறு மிஷனரி சங்கங்களும் அங்கே ஊழியம் செய்யத் தூண்டினது. ஸ்காத்லாந்து சுயாதீன சபையும், ஸ்காத்லாந்து சபையும் ஆப்பிரிக்காவில் மிஷனரிமாரை அனுப்பின. C. M. S. சங்கமும், மெதடிஸ்ட் மிஷனரி சங்கமும் ஆப்பிரிக்காவில் வேலைகள் ஆரம்பித்தன. இவ்வாறு பெருந்தொகையான மிஷன்கள் வேதத்தைப் பரப்பி, கல்விச்சாலைகளை ஏற்படுத்தி கிறிஸ்தவ ஒளியை ஆப்பிரிக்காவில் பரப்பினார்கள். 1914இல் உரோமன் கத்தோலிக்கரும் அங்கு பரவினார்கள். தென் ஆப்பிரிக்காவில் கிறிஸ்தவர்களின் எண்ணிக்கை அதிகமாயிற்று.

ஆப்பிரிக்காவில் புராட்டஸ்தாந்து கிறிஸ்தவர்கள் அநேக பிரிவினராய்க் காணப்பட்டனர். 1947இல் ஆயிரம் சபைப் பிரிவுகள் அங்கு காணப்பட்டன.

இந்தியாவிலும் சபைகள் அதிகரித்தன. 1914இல் 1/100 சதவீதம் கிறிஸ்தவர்கள் இந்தியாவிலிருந்தனர். 1950இல் 2 சதவீதத்திற்குமேல் கிறிஸ்தவர்களின் தொகை பெருகினது. 1961-இன் கணக்குப்படி இந்தியாவில் கிறிஸ்தவர்களின் எண்ணிக்கை 82 லட்சமாகும்.

சீனாவில் உரோமன் கத்தோலிக்க சபையும் புராட்டஸ்தாந்து சபையும் வளர்ந்து பெருகின. பொதுவுடைமைக் கட்சியினர் சீனாவில் வல்லமையடைந்தபோது மிஷனரிமார் நாட்டை விட

வேண்டியதாயிற்று. எனினும், **1947**-இல் உரோமன் கத்தோலிக்கரின் தொகை **3,251,347.** புராட்டஸ்தாந்து சபையில் **1936**-இல் திருச்சபையார் மட்டும் **567,390** பேராயிருந்தனர். **1952**-இல் எல்லா மிஷனரிமாரும் சீனவிலிருந்து வெளியேறி விட்டனர். அயல்நாட்டு ஆதரவின்றி சீன சபை தற்சமயத்தில் வளருகிறது.

ஜப்பானில் **1930**-இல் **100,000** உரோமன் கத்தோலிக்கரும்; புராட்டஸ்தாந்து கிறிஸ்தவர்கள் திருச்சபையார் மட்டும் **200000** பேராயுமிருந்தனர்.

# 3. திருச்சபை ஒருமைப்பாட்டுக் காலம்

## 1. மிஷனரி மாநாடுகள்

18, 19-ஆம் நூற்றுண்டுகள் மிஷனரி முயற்சிகளுக்குப் பேர் பெற்ற காலமாயிருந்தது. 20-ஆம் நூற்றுண்டு சபைகளின் ஒருமைப்பாட்டு இயக்கங்களுக்குத் தலைசிறந்த காலம். எனினும், திருச்சபை ஒருமைப்படுவதற்குரிய வேர்கள் 19-ஆம் நூற்றுண்டிலேயே போடப்பட்டன எனலாம்.

ஒரே இடத்தில் பல மிஷன்கள் சேவை புரிந்தபோது ஒரு ஒத்துழைப்பு தேவை என்பது உணரப்பட்டது. ஆகவே மிஷனரிமார் ஒன்றுபட்டு ஆலோசிக்கும் கூட்டங்கள் 1854-இல் நியூயார்க், லண்டன் முதலிய நகரங்களில் நடைபெற்றன. 1900இல் மற்றொரு அனைத்துலக மிஷனரி மாநாடு நியூயார்க் நகரில் நடைபெற்றது. இம்மாநாட்டில் முதன்முதல் 'ஈக்குமினிக்கல்' (Ecumenical) என்னும் ஆங்கில பதம் பயன்படுத்தப்பட்டது.

இத்தகைய மிஷனரி மாநாடுகள் ஸ்கான்டிநேவியா, ஹாலந்து, ஆப்பிரிக்கா, தென் அமெரிக்கா, இந்தியா முதலிய இடங்களிலும் நடைபெற்றன. தென் இந்தியாவில் முதன்முதலாக 1858 ஏப்ரல் 19 முதல் மே 5 வரை உதகமண்டலத்தில் நடைபெற்றது. 'இந்திய திருச்சபை' என்று பேசும் முறை அங்கு உருவானது. இரண்டாவது மிஷனரி மாநாடு லாகூரிலும், மூன்றும் மிஷனரி மாநாடு சென்னையிலும் நடைபெற்றன. சென்னையில் நடந்த மாநாடு 1900 ஜனுவரி 2 முதல் 5 வரை நடந்தேறியது.

இவற்றின் விளைவாக மிஷனரி ஊழியத்தில் ஒத்துழைக்க வேண்டுமென்ற உணர்ச்சி அதிகரித்தது. எனவே, 1910-இல் **முதல் அனைத்துலக மிஷனரி மாநாடு** (International

**Missionary Conference'** எடின்பரோவில் நடைபெற்றது. மிஷினரி சங்கங்கள் ஒத்துழைக்க வேண்டுமென்பது இம்மாநாட்டின் முக்கிய செய்தியாகும்.

இரண்டாம் அனைத்துலக மிஷனரி மாநாடு 1928-இல் எருசலேமில் நடைபெற்றது. மூன்றும் அனைத்துலக மிஷனரிமாநாடு சென்னையில் 1938இலும், நான்காம் அனைத்துலக மிஷனரி மாநாடு உயிட்பி (Whitby) யில் 1947இலும், 5-ாம் அனைத்துலக மிஷனரி மாநாடு ஜெர்மனியிலுள்ள வில்லிங்கனில் 1952-இலும், 6-ாம் அனைத்துலக மிஷனரி மாநாடு கானாவில் 1957இலும் நடந்தேறின. இவற்றில் பிரதான பங்கெடுத்த யோவான் மாட் (John R. Mott), ஒல்ட்ஹாம் (J. H. Oldham), பேட்டன் (W.M, Paton), வார்ன்சுயிஸ் (A. H. Warnshuis) ஆகியோரின் முயற்சியால் **சபைகளின் அனைத்துலக ஆலோசனை சங்கம்** (World Council of Churches) உருவானது. இச்சங்கம் ஆம்ஸ்டர்டாமில் (Amsterdam) 1948-இல் ஏற்படுத்தப்பட்டது.

மிஷனரி ஊழியத்தில் ஒத்துழைக்க வேண்டுமென்ற எண்ணம் சபைகள் ஒருமைப்பட வேண்டுமென்ற எண்ணத்திற்கு வளர்ந்தது. மிஷனரிச் சபைகளாக வல்ல தேசீயச் சபைகளாய் விளங்க வேண்டுமென்னும் ஆசை சென்னையில் 1928இல் நடந்த அனைத்துலக மிஷனரிமாநாட்டில் வலியுறுத்தப்பட்டது. ஆகவே 'சென்னை 1938' அனைத்துலக மிஷனரி ஒத்துழைப்பு வரலாற்றில் ஒரு புதிய அத்தியாயத்தை ஆரம்பித்தது எனலாம்.

## 2. சபைகளின் அனைத்துலக ஆலோசனை மன்றம் (WCC)

இம்மன்றம் சர்வதேச மிஷனரி ஆலோசனைச் சங்கங்களின் விளைவு என்று கூறுவது மிகையாகாது. சர்வதேச மிஷனரி சங்கங்களின் மாநாடுகள் ஆறுகும்.

1] முதலாம் சர்வதேச மிஷனரி மாநாடு (World Missionary Conference) ஸ்காத்லாந்திலுள்ள எடின்பரோவில் 1910-இல் நடைபெற்றது. 1921-இல் நியூயார்க்கில் சர்வதேச மிஷனரி ஆலோசனைச் சங்கமாக உருவானது.

2] இரண்டாம் சர்வதேச மிஷனரி ஆலோசனைச் சங்கம் எருசலேமில் 1928-இல் நடைபெற்றது.

3] மூன்றும் சர்வதேச மிஷனரி ஆலோசனைச் சங்கம் சென்னையிலுள்ள தாம்பரத்தில் 1938இல் நடைபெற்றது.

4] நான்காம் சர்வதேச மிஷனரி ஆலோசனைச் சங்கம் கானடாவில் டாரன்டோவிலுள்ள உயிட்பியில் 1947-இல் நடைபெற்றது.

5] ஐந்தாம் சர்வதேச மிஷனரி ஆலோசனைச் சங்கம் ஜெர்மனியிலுள்ள உயில்லிங்கனில் 1952இல் நடைபெற்றது.

6] ஆறும் சர்வதேச மிஷனரி ஆலோசனைச் சங்கம் கானுவில் 1958இல் நடைபெற்றது.

சபைகளின் அனைத்துலக ஆலோசனை மன்றம் ஒரு அனைத்துலக இயக்கமாகும். இது குறிப்பாக ஒரு பொது மன்றத்தின் மூலம் செயலாற்றுகிறது. ஐந்து ஆண்டுகளுக் கொரு முறை இம்மன்றம் கூடுகின்றது. மிஷனரி ஊழியத்திலுண்டான ஒரு

தூண்டுதலே இது ஆரம்பிக்கப்படுவதற்கு முக்கிய காரணம் எனலாம். எடின்பரோவில் 1910-இல் அனைத்துலக மாநாடு கூடினபோது இதற்கு விதையிடப்பட்டது. 1910 மாநாட்டின் தலைவர் ஜாண் ஆர். மாட் (John R Mott) ஒல்ட்ஹாம் (J.H. Oldham) அதன் செயலாளர். எடின்பரோ மாநாட்டின் விளை வால் மூன்று இயக்கங்கள் உற்பத்தியாயின.

1] சர்வதேச மிஷனரி ஆலசேனைச் சங்கம் [International Missionary Council];

2] வாழ்க்கை, பணி ஆகியவற்றிற்குரிய இயக்கம் [The Movement for Life and Work];

3] விசுவாசம், அமைப்பு ஆகியவற்றிற்குரிய இயக்கம் [The Movement for Faith and Order]

மேற்கூறப்பட்டவைகளில் 2-ாம், 3-ாம் இயக்கங்கள் 1938 இல் ஒன்றுசேர்ந்து சபைகளின் அனைத்துலக ஆலோசனை மன் றத்தை நிறுவ ஒரு குழுவை அமைத்தது. 1948-இல் ஆம்ஸ் டர்டாமில் சபைகளின் அனைத்துலக ஆலோசனை மன்றம் ஏற்ப டுத்தப்பட்டது. அக்கூட்டத்தில் 147 சபைகளைச் சேர்ந்த 351 பிரதிநிதிகள் வந்திருந்தனர். விசர்ட் ஹுப்ட் (Dr. W. A. Visser't Hooft) என்பவர் இம்மன்றத்தில் பொதுச்செயலாளராக 1938 முதல் 1966 வரை பணியாற்றினர். இயூஜின் கார்சன் பிளேக் (Dr. Eugene Carson Blake) என்பவர் இம்மன்றத்தின் தற்போதைய செயலாளர்.

சபைகளின் அனைத்துலக ஆலோசனை மன்றத்தின் வளர்ச் சிக்குக் குறிப்பிடத் தக்க அம்சங்கள் பின்வருமாறு:-

1921இல் சர்வதேச ஆலோசனைச் சங்கம் நிறுவப்பட்டது.

1925இல் ஸ்டாக்ஹோமிலும் (Stockholm), 1927-இல் எடின்பரோவிலும், 1937இல் ஆக்ஸ்போர்டிலும், 1938இல் தாம்

பாத்திலும், 1947-இல் உயிட்பியிலும், 1952-இல் உயிலிங்கனிலும் 1952-இல் லூண்டிலும், 1958-இல் காநுவிலும், 1963-இல் மான்டிரியேலிலும், 1966-இல் ஜெனீவாவிலும் உண்டான உலகப்பிரசித்தி பெற்ற மாநாடுகள் குறிப்பிடத்தக்கவைகள்.

அனைத்துலக வாலிபர் மாநாடுகளும் 1939-இல் ஆம்ஸ்டர்டாமிலும், 1947இல் ஆஸ்லோவிலும், 1952-இல் கோட்டயத்திலும் நடைபெற்றன.

இவ்வளர்ச்சிக்குக் குறிப்பிடத்தக்க பணி புரிந்தவர்கள் ஜாண் ஆர். மாட், ஒல்ட்ஹாம், விசர்ட் ஹூப்ட், பிரதம அத்தியட்க்ஷச் சோடர் பிளோம், உல்லியம் பேட்டன், ரூத் ரௌவ்ஸ், ஜியார்ஜ் பெல், பிரதம அத்தியட்க்ஷர் உல்லியம் டெம்பிள் ஆகிய மேற்கத்திய தலைவர்களும், தியத்தைராவிலுள்ள பிரதம அத்தியட்க்ஷர் ஜெர்மேனேஸ், D. T. நைல்ஸ், அத்தியட்க்ஷர் ராஜமாணிக்கம், S.H. அமிஸ்ஸா, வாவே டோமா, அத்தியட்க்ஷர் J.D. சாடிக், J. R. சந்திரன், D. G. மோசஸ், R. D. பால், P. D. தேவானந்தன் ஆகிய கிழக்கத்திய தலைவர்களுமாவர்.

எல்லா மனிதரும் இயேசு கிறிஸ்துவில் விசுவாசம் வைத்து மீட்பை அடைய உலகம் முழுவதற்கும் இயேசு கிறிஸ்துவைப் பற்றிய நற்செய்தியை அறிவிக்க ஊக்குவிப்பது ச. அ. ஆ. மன்றத்தின் நோக்கம். 1954இல் இவான்ஸ்டனில் கூடின பொது மன்றத்தில் இது தெளிவாக வரையப்பட்டுள்ளது. திருமறைக் கிசைய ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவைக் கடவுளாகவும் மீட்பராகவும் அறிக்கையிடும் சபைகளின் கூட்டுறவே ச. அ. ஆ. மன்றமாகும். ஆகவே, பிதா குமாரன் பரிசுத்த ஆவியாகிய ஒரே கடவுளை மகிமைப் படுத்துவதில் தங்கள் பொதுவான அழைப்பை ஒருங்கே நிறைவேற்ற ச.அ.ஆ. மன்றம் நாடுகிறது. இதை அங்கீகரிப்பதே ச.அ.ஆ. மன்றத்தில் உறுப்பாவதற்குள்ள நியதியாகும்.

ச.அ.ஆ. மன்றத்தில் நான்கு பிரிவிகள் அமைக்கப்பட்டிருக்கின்றன.

1) அனைத்துலகச் செயலாற்றுதல் (Ecumenical action)

2) ஆராய்ச்சி (Study)

3) சர்வதேச சபைகளுக்குதவி (Inter-Church Aid, Refugee and World Service)

4) உலக மிஷனும் நற்செய்திப் பணியும் (World Mission and Evangelism)

ச. அ. ஆ. மன்றத்திற்குத் தலைமை இருப்பிடம் ஜெனீவா. இவான்ஸ்டனில் நடந்த 2-ம் பொது மன்றம் நியூயார்க்கிலும் மன்றத்தின் காரியாலயமொன்று அமைக்கத் தீர்மானித்தது

பொதுச் செயலாளருக்கு உதவி புரிய துணைச் செயலாளர் ஒருவரும், கூட்டுச் செயலாளர்களும், பணம், செய்திஅறிவித்தல் ஆகிய துறைகளில் இரண்டு இயக்குநர்களும் உண்டு. மத்திய செயலாற்றும் குழுக்கள் ச.அ.ஆ. மன்றத்தின் திட்டத்தை வரையறுக்கும். பொதுச் செயலாயருக்கு 'The Ecumenical Review' என்னும் பத்திரிகையின் பொதுப் பொறுப்பும் உண்டு.

ச. அ. ஆ. மன்றம் உண்மையாகவே அனைத்துலக மன்றம் என்ற பெயருக்குத் தக்க அளவில் இயங்குகின்றது. ஆம்ஸ்டர்டாமில் 147 சபைகளின் 351 பிரதிநிதிகள் கலந்துகொண்டனர். இவான்ஸ்டனில் 160 சபைகளிலிருந்து 502 பிரதிநிதிகளும், புது டில்லியில் 181 சபைகளிலிருந்து 577 பிரதிநிதிகளும் கலந்து கொண்டனர். டில்லியில் சர்வதேச மிஷனரி ஆலோசனைச் சங்கமும் ச. அ. ஆ. மன்றமும் ஒன்ருய் இணைந்தன. டில்லி மன்றத்தில் நான்கு கிழக்கத்திய சபைகள் உறுப்பினர்களாய்ச் சேர்ந்தது குறிப்பிடத் தக்கது. தென் அமெரிக்காவிலி

ருந்து பெந்தேகோஸ்தே பிரிவிலுள்ள இருவரும் இம்மன்றத்திற்கு வந்திருந்ததும் குறிப்பிடத் தக்கதொன்ருகும்.

ச. அ. ஆ. மன்றம் இதுவரையிலும் நான்கு முறைகள் கூடியுள்ளது.

1) முதலாம் பொது மன்றம் 1948இல் ஹாலந்திலுள்ள ஆம்ஸ்டர்டாமில் நடைபெற்றது.

2) இரண்டாம் பொது மன்றம் 1954-இல் அமெரிக்காவிலுள்ள இவான்ஸ்டனில் நடைபெற்றது.

3) மூன்ரும் பொது மன்றம் 1961-இல் டில்லியில் நடைபெற்றது.

4) நான்காம் பொது மன்றம் 1968இல் ஸ்வீடனிலுள்ள உப்சாலாவில் நடைபெற்றது.

## ச. அ. ஆ. மன்றங்களின் பொருள்

1-ம் மன்றம் — மனிதனின் ஒழுங்கின்மையும், கடவுளின் திட்டமும் (Man's disorder and God's design)

2-ம் மன்றம் — இயேசு கிறிஸ்து, உலகின் நம்பிக்கை (Jesus Christ, the hope of the world)

3-ம் மன்றம் — இயேசு கிறிஸ்து, உலகின் ஒளி (Jesus Christ, the light of the world)

4-ம் மன்றம் — 'இதோ, நான் சகலத்தையும் புதிதாக்குகிறேன்.' (Behold, I make all things new.)

# 3. கிழக்கு ஆசிய கிறிஸ்தவ மாநாடு

## (East Asia Christian Conference)

1872 முதற்கொண்டு அனைத்து இந்திய மாநாடுகள் நடைபெற்றன. நான்காம் அனைத்து இந்திய மாநாடு 1910-இல் எடின்பரோவில் நடந்த அகில உலக மிஷனரி மாநாட்டை வடிவத்திற்குக் கொண்டுவர தூண்டுதலாயிருந்தது. 1912 நவம்பர் முதல் 1913 ஏப்ரல் வரை ஜாண் ஆர். மாட் ஆசியாவில் சுற்றுப் பயணம் செய்து இந்தியா, சீனு, ஜப்பான், பர்மா, மலேயா ஆகிய இடங்களில் சுதேச கிறிஸ்தவ ஆலோசனைச் சங்கங்கள் நிறுவப் பட உதவினுர் 1928 எருசலேம் மாநாட்டுக்குப் பின் தாய்லாந்திலும், பிலிப்பைன் தீவிலும் கிறிஸ்தவ ஆலோசனைச் சங்கங்கள் ஏற்படுத்தப்பட்டன. 1882 முதல் இந்தோனீஷியா, நெதர்லாண்ட்ஸ் இன்டீஸ் மிஷனரி ஒப்பந்தம் (Netherlands Indies Missionary Alliance) ஒன்றை ஆரம்பித்தது.

1949 டிசம்பரில் ஆசிய சபைகளின் முதல் மாநாடு பாங்காக்கில் சர்வதேச மிஷனரி ஆலோசனைச் சங்கம், ச. அ. ஆ. மன்றம் ஆகியவற்றின் ஆதரவில் நடைபெற்றது. இவ்விரண்டு சங்கங்களின் கிழக்கு ஆசிய கூட்டு செயலர் பணியகம் ஒன்று நிறுவப்பட அது காரணமாயிற்று. இந்தியாவிலுள்ள சுதேச கிறிஸ்தவ அவைக்குச் (NCC) செயலாளராயிருந்த Dr. ராஜா B. மாணிக்கம் ஆசிய சபைகளை ஒருங்கே இணைக்க ஆசிய சபைகளைச் சந்திக்க அழைக்கப்பட்டார். ஏழு ஆண்டுகளாக அவர் ஆசிய சபைகளைச் சந்தித்து மாறிக்கொண்டிருக்கும் ஆசிய சமூகத்தில் அவைகளின் பொதுவான பொறுப்பைப்பற்றிய ஒரு புது உணர்ச்சியை உருவாக்கினுர். இதன் பலனுக 1957-இல் இந்தோனீசியாவிலுள்ள பிரபாத்தில் (Prapat) கிழக்கு ஆசிய கிறிஸ்தவ மாநாடு (EACC) உருவானது. 1959 மேய் மாதத்தில் கி. ஆ. கி. மாநாட்டின் பொது மன்றம் மலேயாவிலுள்ள குவாலாலம்பூர் என்னுமிடத்தில் நடைபெற்றது.

கிழக்கு ஆசியாவில் சுவிசேஷ ஊழியத்தில் தங்கள் கடமையை நிறைவேற்ற 48 சபைப் பிரிவுகள் ஒப்பந்தம் செய்தன. சர்வதேச மிஷனரி ஆலோசனைச் சங்கத்தின் ஆசியாவிலிருந்து பிரதிநிதித்துவம் வைத்த பதினொரு ஆலோசனைச் சங்கங்களும், ஆஸ்திரேலியா, நியூசீலாந்து, ஒக்கினுவா ஆகிய நாடுகளிலுள்ள ஆலோசனைச் சங்கங்களும் கி. ஆ. கி. மாநாட்டின் உறுப்பினராயின. கி. ஆ. கி. மாநாட்டின் செயலர் பணியகம் சர்வதேச மிஷனரி ஆலோசனைச்சங்கம், ச. அ. ஆ மன்றம் ஆகியவற்றின் கூட்டுச்செயலர் பணியகமாகும்.

ஆசியாவில் நற்செய்தி பரப்புவதைப் பற்றி கி. ஆ. கி. மாநாடு கவனம் செலுத்துகிறது. அஃதுடன் இறையியல் துறையிலும், சபையார் திருச்சபையின்பணியில் பங்குபெறுவதில் ஊக்கமளிப்பதிலும், சபை ஒருமைப்பாடு விஷயத்திலும் கவனம் செலுத்துகின்றது.

---

# 4. இந்தியாவில் சுதேச கிறிஸ்தவ அவை

## (NCC in India)

எடின்பரோவில் 1910-இல் நடந்த அனைத்துலக மாநாட்டின் விளைவாக 1913-இல் இந்தியாவில் சுதேச மிஷனரி அவை (NMC) ஏற்படுத்தப்பட்டது. இதற்கு முக்கிய காரணராயிருந்தவர் ஜாண் ஆர் மாட். பின்னர் 1923-இல் சுதேச கிறிஸ்தவ அவை (NCC) என்னும் பெயர் பெறலாயிற்று. 1947 வரை இந்தியா, பர்மா, இலங்கை ஆகியவை இதில் உட்பட்டிருந்தது. 1947-இல் சுதந்திரத்திற்குப் பின் இந்திய கூட்டரசு மட்டும் இதில் அமைந்தது. இதில் 14 பிராந்திய கிறிஸ்தவ அவைகள் உட்பட்டிருக்கின்றன. இது 1961 வரை சர்வதேச மிஷனரி ஆலோசனைச் சங்கத்தோடு இணைந்திருந்தது. இப்

பொழுது 'உலக மிஷனும் சுவிசேஷப் பணியும்' என்னும் பிரிவின் ஆய்வுக்குழுவோடு இணைக்கப்பட்டுள்ளது.

உலகம் அனைத்திலும் நற்செய்தியானது கூறி அறிவிக்கப்படவேண்டுமென்பதும் அதற்காக ஒத்துழைப்பையும் ஒருமைப்பாட்டையும் உண்டாக்கவேண்டும் என்பதும் சுதேச கிறிஸ்தவ அவையின் அடிப்படையான நோக்கம். இந்நோக்கத்தை நிறைவேற்ற பல துறைகளில் செயலாற்றவேண்டுமென்னும் பொறுப்பையும் சுதேச கிறிஸ்தவ அவை அறிந்துள்ளது. இதற்கென்று பூரணமாய் உழைக்கும் முழுநேர செயலர்கள் இதில் பணியாற்றுகின்றனர். இதன் தலைமை காரியாலயம் நாகபுரியில் அமைந்துள்ளது. மூன்று ஆண்டுகளுக்கொருமுறை சு. கி. அவை கூடுகின்றது. 25 உறுப்பினர்களடங்கிய அதன் செயற்குழு ஆண்டுக்கு இருமுறைகள் கூடி செயலாற்றுகிறது அதன் மாதாந்தர பத்திரிகையாக சுதேச கிறிஸ்தவ அவை ஆய்வுமலர் **(N.C.C. Review)** வெளியிடப்படுகின்றது. **1959**-இல் இந்தியாவிலுள்ள சபைகளையும் மிஷன்களையும் பற்றிய குறிப்புகளடங்கிய நூல் **(Directory of Churches and Missions)** சு. கி. அவையால் வெளியிடப்பட்டது. இப்பொழுது அது இந்தியாவைப்பற்றிய கிறிஸ்தவ கைநூல் **(The Christian Handbook of India)** என்று அழைக்கப்படுகிறது.

சு. கி. அவையால் பல்வேறு சேவைகள் செய்யப்பட்டு வருகின்றன.

### *1. சுவிசேஷ சேவை*

இந்தியாவின் சில பாகங்களில் அனுசரிக்கப்பட்டு வரும் வாரங்களின் திருநாள் **(Feast of Weeks)** சு. கி. அவையின் முயற்சியாலானது. கும்பலியக்கத்தைப் பற்றி சு. கி. அவை செய்த ஆய்வின் பயனாக அத்தியட்சர் **J. W.** பிக்கட் வெளியிட்ட நூல் மதிப்புக்குரியது; ஹென்றி மார்ட்டின் இஸ்லாமிய

பாடசாலை (Henry Martyn School of Islamics) இதன் முயற்சியால் உருவாக்கப்பட்டது. இந்துக்களை அணுகவேண்டிய முறைகளைக் குறித்தும் இது கவனம் செலுத்தி வருகிறது. 1957-இல் சமயம் சமூகம் ஆகியவற்றை ஆய்வு செய்வதற்குரிய கிறிஸ்தவப் பள்ளி (Christian Institute for the Study of Religion & Society) பங்களூரில் நிறுவப்பட்டது.

## 2. அரசாங்கத்தோடு தொடர்பு

புராட்டஸ்தாந்து சமூகத்திற்காகப் பேசும் ஒரு அவையாக சு. கி. அவையை அரசாங்கம் அங்கீகரித்திருக்கிறது. சு. கி. அவையின் முயற்சியால் மார்க்கத்தைப் பரப்பும் சுயாதீனத்தை அளிக்கும் வாசகம் இந்திய கூட்டரசு சட்டத்தில் புகுத்தப்படலாயிற்று. மிஷனரி சங்கங்களை அங்கீகரிப்பதைப்பற்றி சிபார்சு செய்வற்குரிய அதிகாரத்தை அரசியல் சு. கி. அவைக்குக் கொடுத்திருக்கிறது. மிஷனரிமாருக்கு அனுமதிச் சீட்டுகள் அளிப்பதற்குச் சிபார்சு செய்யும் அதிகாரத்தையும் அரசு இதற்குக் கொடுத்திருக்கிறது. பஞ்ச நிவாரணத்திற்காகவும் அகதிகளுக்காகவும் சு. கி. அவை செய்த உதவியை அரசு அங்கீகரித்து அவ்விஷயத்தில் அது நல் உறவு கொண்டிருக்கிறது.

## 3. இறையியற்கல்வி

இறையியல் அறிவையும் வளர்க்க இது ஆவன செய்கிறது. பல உயர்தர இறையியற் கல்லூரிகள் இதோடு இணைக்கப்பட்டிருக்கின்றன. பிராந்திய மொழிகளில் இறையியலைக் கற்பிக்கவும் இது வசதிகள் செக்கின்றது.

## 4 கல்வி

பல தாபனங்கள் இதோடு இணைக்கப்பட்டிருக்கின்றன. வேலூர் மருத்துவக் கல்லூரி இதன் ஆதரவைப் பெறுகிறது. 1931-இல் வெளியான லின்ட்சே கமிஷன் அறிக்கை அதிக பயனைத் தருவித்தது.

## 5. முதியோர் கல்வியும் இலக்கியமும்

Dr. லாபேக் முறை முதியோருக்கு மொழி இலகுவான முறையில் கற்பிக்க பயன்படுத்தப்பட்டது. நாட்டு மொழிகளில் நூல்களைப் பிரசுரிக்க சு. கி. அவை ஆக்கமளித்து வருகிறது. கிறிஸ்தவ இலக்கியங்களை வெளியிடுவதில் ஆலோசனை கொடுக்க கிறிஸ் தவ இலக்கிய சேவை சங்கம் (The Christian Literature Service Association) ஏற்படுத்தப்பட்டிருக்கிறது.

## 6 சபையின் பொருளாதார நிலையை வளர்த்தல்

சபைகளின் சுய ஆதரவை சு. கி. அவை உற்சாகப்படுத்து கிறது. கிராம முன்னேற்றம், தொழிற்கல்வி, சுயஉதவி திட்டங் கள் ஆகியவற்றை இது ஆதரிக்கிறது.

## 7. நிவாரண உதவிகள்

பஞ்ச நிவாரணத்திற்கென்று ஒரு துறை ஏற்படுத்தப்பட் டிருக்கிறது.

## 8. கிறிஸ்தவ இல்லற இயக்கம்

இந்த இயக்கம் சபைகளில் பெருமிதமாக வளர்ந்து வருகி றது. கிறிஸ்தவ இல்லற திருநாள் ஆண்டுக்கொருமுறை வெகு விமரிசையாக சபைகளில் நடத்தப்பட்டு வருகிறது. கிறிஸ்தவ இல்லறவாழ்க்கைக்குரிய பல சிறப்புக்குரிய அம்சங்கள் மேன்மை பெறுகின்றன. குடும்பக் கட்டுப்பாடு திட்டத்தையும் சு. கி. அவை கவனத்திற்கு எடுத்திருக்கிறது. 'உத்தரவாதமான பெற் றோராயிருத்தல்' (Responsible Parenthood) என்னும் நூலை இது வெளியிட்டிருக்கிறது. 'கிறிஸ்தவ இல்லற தீபிகை' (The Christian Home Bulletin) என்னும் பத்திரிகை இவ்வியக் கத்தை 20 அயல்நாடுகளுக்கு அறிமுகப்படுத்துகிறது.

## 9. வாலிபர் சேவை

சபைகள் வாலிபர் மத்தியில் செய்யும் ஊழியங்களில் அதிக கவனம் செலுத்த சு. கி. அவை ஊக்கமளிக்கிறது. முழு நேர வாலிப செயலாளர்களும் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றனர். அகில இந்திய கிறிஸ்தவ வாலிபர் மாநாடு 1948-இல் நடத்தப்பட்டது.

## 10. கேள்வி-காட்சி உதவிகள் (Audio-visual aids)

இதன் மூலம் இந்தியாவிலேயே கிறிஸ்தவ திரைப்பட சுருள்கள் செய்யப்படுகின்றன. ஜபல்பூரில் இதற்கென்று CARAVS என்னும் கிறிஸ்தவ வானொலி, கேள்வி-காட்சி சேவை சங்கம் (Christian Association for Radio and Audio-Visual Service) ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. திரைப்படக் காட்சிகளுக்குரியவை, ஒளிச் சித்திரப்படக் காட்சிக்குரிய சாதனங்கள், இசைத்தட்டுகள், இவை சம்பந்தமான நூல்கள் ஆகியவை CARAVSஇன் மூலமாக உதவப்படுகின்றன.

## 11. உதவியற்றவர்களுக்குச் சேவை

குருடர், செவிடர் ஆகியோருக்கு உதவ ஒரு பிரத்தியேக குழு சு. கி. அவையில் ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. அத்தகைய சேவைகளைச் செய்யும் தாபனங்களோடும் இது தொடர்பு கொள்ளுகிறது. இது சம்பந்தமான இலக்கியங்களை வெளியிடுவதிலும் அதிக சிரத்தை எடுக்கப்படுகிறது.

## 5. ஐக்கிய சபைகள்

அனைத்துலக மிஷனெரி மாநாடுகளினாலும், சபைகளின் அனைத்துலக ஆலோசனைச் சங்கத்தினாலும் உலகில் சபை ஐக்கிய உணர்ச்சி அதிகரிக்கப்பட்டது. லூத்தரன் சபைகளிலும், பிரஸ்பிட்டீரியன் சபைகளிலும், காங்கிரிகேஷனல் சபைகளிலும், மெதடிஸ்ட் சபைகளிலும் ஒருமைப்பாடு உலகின் பல பாகங்களிலும் உண்டாகி வருகிறது.

அமெரிக்காவில் பல சபைகள் சேர்ந்து 1957-இல் கிறிஸ்துவின் ஐக்கிய சபை (United Church of Christ) ஒன்று ஏற்படுத்தியது.

இங்கிலாந்தில் சபை ஆட்சிப்பிரிவினர் ஒன்று சேர்ந்து 1832-இல் இங்கிலாந்து வேல்ஸ் சபை ஆட்சி ஒருமைப்பாடாக (Congregational Union of England and Wales) அமைந்தனர்.

ஸ்காத்லாந்தில் பல சபைகள் ஒருமைப்பட்டு 1900-இல் ஸ்காத்லாந்தின் ஐக்கிய சுயாதீன சபை (United Free Church of Scottland) என்ற பெயருடன் அமைந்தது.

ஜப்பானில், ஜப்பானிய மூப்பராளுகைச் சீர்திருத்த சபையும், ஜப்பானிய மெதடிஸ்ட் திருச்சபையும் ஒருமைப்பட்டு, 1941-இல் ஜப்பானின் கிறிஸ்து சபை (The Church of Christ in Japan) என்று அமையலாயிற்று. பிலிப்பைன் தீவுகளில் மூப்பராளுகை, சபை ஆளுகை, ஐக்கிய சகோதரச் சபைகளாகிய மூன்றும் ஒன்றித்து, 'பிலிப்பைன் ஐக்கிய இவாஞ்சலிக்கல் சபை' என்று அமைந்தது. 1946-இல் இவ்வைக்கியச் சபையுடன் கிறிஸ்துவின் சீடர், கிறிஸ்துவின் ஐக்கிய சபை, மெதடிஸ்ட் சபை, சுயாதீன மெதடிஸ்ட் சபை ஆகிய நான்கும், வேறு சில சிறு சபைகளும் ஒருமைப்பட்டு 'பிலிப்பைன் இவாஞ்சலிக்கல் சபை' ஆயிற்று. ஆனால் இந்த ஒருமைப்பாடு நிலைக்கவில்லை. 1946-இல் முதல் ஐக்கிய சபையான 'பிலிப்பைன் ஐக்கிய இவாஞ்

சலிக்கல் சபையும், பிலிப்பைன் இவாஞ்சலிக்கல் சபையும், பிலிப்பைன் மெதடிஸ்ட் சபையும் சேர்ந்து, 'பிலிப்பைனிலுள்ள கிறிஸ்துவின் ஐக்கிய சபை' என்ற வேறொரு ஐக்கிய சபையை ஏற்படுத்தினார்கள்.

தென் இந்தியாவில் சபை ஆட்சி, மூப்பராட்சி, அத்தியட்சராட்சி பாரம்பரியங்களுள்ள சபைகள் ஒருமைப்பட்டது சபை ஒருமைப்பாட்டின் வரலாற்றில் ஒரு சிறந்த எடுத்துக்காட்டாகும்.

தென் இந்தியாவில் சபை ஒருமைப்பாடு பல விதத்தில் வெளிப்பட்டது. பல மிஷன்கள் இந்தியாவில் செயல்புரிந்தன. S. P. G., C. M S முதலிய மிஷனரி சங்கங்கள் கல்கத்தா, பம்பாய், சென்னை, திருநெல்வேலி முதலிய முக்கிய நகரங்களில் ஊழியம் செய்தன. வெஸ்லியன் மிஷனெரி சங்கம் திருச்சிராப்பள்ளி,சென்னை முதலிய இடங்களில் பணியாற்றியது. ஸ்காத்லாந்து மிஷனெரி சங்கமும் இந்தியாவின் முக்கிய இடங்களில் சேவை புரிந்தது. அமெரிக்கன் மிஷன் பம்பாய், மதுரை, இலங்கை ஆகிய இடங்களிலும், பேசில் மிஷன் மங்களூர் முதலிய இடங்களிலும் வேலை செய்தன. இவ்வாறு பல மிஷன்கள் ஏற்பட்டன. கிறிஸ்தவர்கள் வெவ்வேறு சபைகளாகப் பிரிந்திருந்தாலும் ஒருவரோடொருவர் ஒன்றுபட்டு வாழவேண்டுமென்ற எண்ணம் அதிகரித்தது.

வெவ்வேறு சபைகளுக்குள் படிப்படியாக ஒத்துழைப்புஏற்படலாயிற்று. இதைவிட நெருங்கின ஒருமைப்பாடு தேவையென்று இந்திய கிறிஸ்தவர்கள் உணர்ந்தனர் இவ்வாறுண்டான ஒருமைப்பாட்டுணர்ச்சியின் பலனாக 1901-இல் ஸ்காத்லாந்து சுயாதீன சபையும் (Free Church of Scottland) அமெரிக்காவின் சீர்திருத்த மூப்பராளுகைச் சபையும் (The Reformed Presbyterian Church of America) தென் இந்தியாவில் ஒருமைப்பட்டன. அதன்பின்பு இந்தியாவிலுள்ள மூப்பராளுகைச் சபைகள்

1904-இல் ஒன்று சேர்ந்து இந்தியாவின் மூப்பராளுகை ஒருமைப்பாடு (The Presbyterian Alliance of India) ஏற்படுத்தின.

1906-இல் சபை ஆளுகை நிலையுள்ள லண்டன் மிஷன் சபைகளும், மதுரை அமெரிக்கன் மிஷன் சபைகளும் ஒன்றுய்ச் சேர்ந்தன. 1908-இல் அவை மூப்பராளுகைச் சபைகளோடு சேர்ந்ததினால் தென் இந்திய ஐக்கிய சபை (S. I. U. C) ஏற்பட்டது.

1910-இல் தென் இந்தியாவில் ஸ்காத்லாந்து சபையைச் சேர்ந்த இரு சபைகள் தென் இந்திய ஐக்கிய சபையைச் சேர்ந்தன. 1919-இல் மலபாரிலுள்ள பேசில் இவாஞ்சலிக்கல் மிஷன் சபை தென் இந்திய ஐக்கிய சபையைச் சேர்ந்தது.

1919-இல் S. P. G., C. M. S. ஆகிய சபைகள் ஒருமைப்பட்டதாலுண்டான 'இந்தியா, பர்மா, இலங்கைச் சபை (Church of India, Burma and Ceylon) யோடு தென்இந்திய ஐக்கிய சபை ஒருமைப்பாட்டுக்கான ஒப்பந்தங்கள் செய்ய கலந்தாலோசித்தன. ஆங்கிலேய சபையிலும் தென் இந்திய ஐக்கிய சபையிலுமிருந்து 33 உறுப்பினர்கள் தரங்கம்பாடியில் கூடினர். அவர்களில் ஒரு அமெரிக்கரையும் ஒரு ஐரோப்பியரையும் தவிர ஏனையோர் இந்தியர்களாயிருந்தனர். அவர்களில் தோர்ணக்கலில் அத்தியட்சராயிருந்த அசரியா அத்தியட்சர் ஒருவராவர். தரங்கம்பாடியில் அவர்கள் ஒருமைப் பாட்டுக்கான ஒரு திட்டத்தை வகுத்தனர்.

1920 முதல் தென் இந்திய ஐக்கிய சபையிலும், ஆங்கிளிக்கன் சபையிலுமுள்ள பிரதிநிதிகள் ஆண்டுதோறும் கூடி ஐக்கிய திட்டங்களை ஆய்ந்தனர்.

1925-இல் தென் இந்தியாவிலுள்ள வெஸ்லியன் மெதடிஸ்ட் சபையும் ஐக்கியப் பேச்சுவார்த்தையில் கலந்துகொண்டது. ஒருமைப்பட்ட பின் எல்லா போதகர்களும் அத்தியட்ச ஆளுகை

முறையான போதகாபிஷேகம் பெறவேண்டுமென்பது ஒத்துக்கொள்ளப்பட்டது. அதற்குமுன் வேறு பாரம்பரியங்களின்படி போதகாபிஷேகம் பெற்றவர்கள் நியாயமான போதகர்களாக ஒப்புக்கொள்ளப்படவேண்டுமென்றும் ஒப்புக்கொள்ளப்பட்டது.

1930-இல் வெஸ்லியன் மெதடிஸ்ட் தலைமைச்சங்கம் ஐக்கிய திட்டத்திற்குச் சம்மதம் அளித்தது. எனவே, 1943 ஜனுவரி மாதத்தில் மெதடிஸ்ட் சபை முதன்முதலாக ஒருமைப்பாட்டுக்கு இசைந்தது.

1944-இல் தென் இந்தியாவிலுள்ள ஆங்கிளிக்கன் சபைகள் ஐக்கியத்தை ஆதரித்தன. 1945 இல் பொது ஆலோசனை மன்றம் தென்னிந்தியாவிலுள்ள 4 அத்தியட்சாதீனங்கள் இந்திய பர்மா இலங்கைச் சபையிலிருந்து பிரிந்து ஐக்கிய சபையில் சேர அனுமதித்தது.

தென் இந்திய ஐக்கிய சபை 1946-இல் ஐக்கியத்தில் சேர உடன்பட்டது.

ஆகவே, 1947 செப்டம்பர் 27-ஆம் நாள் சென்னையில் புனித ஜியார்ஜ் அத்தியட்சாலயத்தில் தென்இந்திய சபை உருவானது. தற்சமயம் தென் இந்திய சபையில், கோயம்பத்தூர், தோர்ணக்கல், யாழ்ப்பாணம், கன்னியாகுமரி, கிருஷ்ணு-கோதாவரி, மத்திய கேரளம், மதுரை-ராம்னுடு, சென்னை, மேடக், மைசூர், வட கேரளம், ருயலயசீமா, தென் கேரளம், திருச்சிராப்பள்ளி-தஞ்சாவூர், திருநெல்வேலி என்னும் 15 அத்தியட்சாதீனங்கள் உள்ளன.

தென்இந்திய சபையின் உறவில் கலந்துகொள்ள மார்த்தோமா சபை ஆவலுள்ளதாயிருக்கிறது. லூத்தரன் சபையும் தென்இந்திய சபையோடு ஒருமைப்பட்ட சபையாக முயற்சித்துள்ளது. லூத்தரன் சபையிலுள்ள வெவ்வேறு பிரிவினர் ஒன்று சேரும்பொழுது இது சாத்தியப்படலாம்.

வட இந்தியாவிலும் ஒருமைப்பாட்டு முயற்சிகள் முன்னேற்றமடைந்துள்ளன. 1924-இல் வட இந்தியாவிலுள்ள மூப்பராளுகைச் சபைகளும், சபை ஆளுகை முறைச் சபைகளும் ஒருமைப்பட்டு வட இந்தியாவின் ஐக்கிய சபையாக (United Churh of Northern India) ஏற்பட்டது. இந்த ஐக்கிய சபை பரந்த ஐக்கியத்திற்குச் சபைகளுக்கும் மிஷனரி சங்கங்களுக்கும் அழைப்பு விடுத்தது. வெஸ்லியன் மெதடிஸ்ட் சபை ஒரு வட்ட மேசை மாநாட்டுக்கு ஆலோசனை கொடுத்தது.

ஆகவே, 1-ாம் வட்ட மேசை மாநாடு 1929 ஏப்ரல் 10, 11 நாட்களில் லெக்னௌவில் லால்பாக் பெண்கள் உயர்நிலைப் பள்ளியில் நடந்தது. அதில் கிறிஸ்து மிஷனின் ஆஸ்டிரேலியன் சபை (Australian Church of Christ Mission), ஆஸ்டிரேலியன் மெதடிஸ்ட் சபை, வெஸ்லியன் மெதடிஸ்ட் சபை, மெதடிஸ்ட் அத்தியட்ச ஆளுகைச் சபை, வட இந்திய ஐக்கிய சபை ஆகிய சபைகளின் பிரதிநிதிகளும் ஆங்கிளிக்கன் சபையிலிருந்து ஒரு பார்வையாளரும் கலந்துகொண்டனர். இக்கூட்டத்தில் ஜெபத்தினாலும், பரிசுத்த ஆவியின் நடத்துதலினாலும் ஒருமைப்பாடு கூடியதென்றும், ஒருமைப்பாட்டைக் குறித்து பொதுச்சபையாரை அறிமுகப்படுத்தி நல்லெண்ணத்தை உருவாக்க வேண்டுமென்றும் தீர்மானிக்கப்பட்டது.

1930 நவம்பர் 18 முதல் 20 வரை இரண்டாம் வட்ட மேசை மாநாடு டில்லியில் நடைபெற்றது. அதில் முதல் மாநாட்டில் கலந்துகொண்டவர்களைத் தவிர, சகோதரர் சபை (The Church of the Brethren), நண்பர்களின் சங்கம் (The Society of Friends), இந்தியா, பர்மா, இலங்கை சபை (The Church of India, Burma, and Ceylon) ஆகிய சபைகளிலிருந்தும் பிரதிநிதிகள் சேர்ந்து கொண்டனர். தென் இந்திய சபையின் ஐக்கிய கூட்டுக் குழுவும் (C.S I. Joint Committee on Union) இரு உறுப்பினர்களை அனுப்பியது பஞ்சாப் மூப்பராளுகை மிஷன் பார்வையாளர்களை அனுப்பியது.

1931 நவம்பர் 7 முதல் 9 வரை நாகபுரியில் சபை ஒருமைப் பாட்டைப் பற்றிய அனைத்திந்திய மாநாடு நடைபெற்றது. வட இந்தியாவிலிருந்து 5 பிரதிநிகளும் தென் இந்தியாவிலிருந்து 4 பிரதிநிதிகளும் கலந்து கொண்டனர். அசரியா அத்தியட்சரின் தலைமையில் நற்செய்திப் பணியிலும், கிறிஸ்தவ சேவையிலும், தொழுகையிலும் கூட்டுறவு தேவை என்றும், அஃதுடன் சபை அமைப்பிலும் ஆட்சி முறையிலும் ஒற்றுமையடைய முயற்சித்தல் வேண்டுமென்று முடிவு செய்யப்பட்டது. இதைப்பற்றிய ஒரு தொடர்பான ஆலோசனைக்காக ஒரு குழுவும் ஏற்படுத்தப்பட்டது.

1937-இல் 3-ஆம் வட்ட மேசை மாநாடு நடைபெற்றது. சபைகள் ஒற்றுமைப்படுவதைக் குறித்த திட்டம் அதில் பரிசீலனை செய்யப்பட்டது.

1939-க்குப் பின் சில சபைகள் பின்வாங்கின. ஆனால் தொடர்ந்து சபை ஒருமைப்பாட்டு முயற்சிகளில் ஈடுபட்ட சபைகள் வடஇந்திய ஐக்கிய சபை, இந்தியா பர்மா இலங்கைச் சபை, தென் ஆசிய மெதடிஸ்ட் சபை, பிரிட்டீஷ் ஆஸ்திரேலிய மெதடிஸ்ட் சபைகள், பாப்டிஸ்ட் சபைகள் ஆகியவை.

1940-இல் பாப்டிஸ்ட் சபைகள் ஒருமைப்பாட்டுக்கான பேச்சு வார்த்தைகளிலிருந்து பின்வாங்கின. எனினும், 1951 இல் பாப்டிஸ்ட் சபைகள் மீண்டும் சேர்ந்தன.

இவ்வாறு வடஇந்தியாவில் ஒருமைப்பாட்டுத்திட்டம் அங்கீகரிக்கப்பட்டு வந்திருக்கிறது. அத்திட்டத்தில் தென் இந்திய சபையிலிருந்து பல அம்சங்கள் ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்கின்றன. 1970 அக்டோபர் மாதம் வடஇந்திய சபை ஏற்படுத்தப்படுமென்று எதிர்பார்க்கப்படுகிறது.

கிழக்கத்திய வைதீக சபைகள் (Eastesn Orthodox Churches) சபை ஒருமைப்பாட்டில் கவலையற்றிருக்கவில்லை. 1920 ஜனுவரி மாதம் கான்ஸ்தந்திநோபுரி பேரத்தியட்சாதீனம் உலகிலுள்ள கிறிஸ்துவின் சபைகள் ஒரு கூட்டுறவுக்குள் வர வேண்டுமென்ற ஆவலை வெளியிட்டது. இதை விடுத்த ஜெர மானோஸ் என்னும் பிரதம அத்தியட்சர் சபைகளின் அனைத்து லக ஆலோசனை மன்றத்தில் ஆரம்ப ஆசனுபதிகளில் ஒருவராய் பணி செய்தார். பல கிழக்கத்திய வைதீக சபைகள் அனைத் துலக ஆலோசனை மன்றத்தில் பங்கெடுக்கின்றன.

ரஷிய வைதீக சபை (Russian Orthodox Church) சபை களின் அனைத்துலக ஆலோசனை மன்றத்தில் அநேக ஆண்டுக ளாகச் சேரவில்லை. 1959-இல் அது பார்வையாளர்களை ரோட்ஸ் தீவில் நடந்த அனைத்துலக ஆலோசனைச் சங்க மத்திபக்குழு கூட்டத்திற்கு அனுப்பினது. 1961-இல் அனைத்துலக ஆலோ சனை மன்றத்தில் அங்கத்துவம் வகிக்க வேண்டினது. புது டில்லியில் 1961-இல் நடந்த அனைத்துலக திருச்சபை மன்றத் தின் 3-ாம் பொதுக்கூட்டத்தில் ரஷிய வைதீக சபை அங்கமாக சேர்க்கப்பட்டது.

உரோமன் கத்தோலிக்கர் சபை ஒருமைப்பாட்டில் ஆர்வு முள்ளவர்கள். உலகில் ஏறத்தாழ 500 கோடி கிறிஸ்தவர்கள் உரோமன் கத்தோலிக்கச் சபையைச் சேர்ந்தவர்கள். உரோமன் கத்தோலிக்கர் ஒருமைப்பாட்டுக்கான மன்ருட்டுகளிலும், புராட் டஸ்தாந்து கிறிஸ்தவர்களோடு ஆராய்ச்சிகளில் கலந்துகொள்வ திலும் ஒருமைப்பாட்டில் கொண்டுள்ள தங்கள் எண்ணங்களை வெளியிடுகின்றனர். குறிப்பாக 1962 அக்டோபர் 11 முதல் 1965 டிசம்பர் 8 வரை நடந்த 2-ாம் வத்திக்கான் மன்றம் (2nd Vatican Council) உரோமன் கத்தோலிக்க ஒருமைப்பாட்டு எண்ணத்தை வெளிப்படையாக்கிற்று.

## 6. வத்திக்கான் மன்றம்

முதல் வத்திக்கான் மன்றம் 1869, 1870-இல் நடைபெற்றது. அதை நடத்தினவர் போப்பு 13-ஆம் லியோ. போப்புவானவரின் தவறுத்தன்மை (The Pope's infallibility) முக்கிய ஆலோசனைக்குரிய விஷயமாயிருந்தது. போப்புவானவர் அனைத்துலக சபையில் முழுமையும் மேலானதுமான அதிகாரமுடையவரென்று இம்மன்றத்தில் உறுதிப்படுத்தப்பட்டது. போப்புவானவர்களுக்கு மேலாக அனைத்துலக ஆலோசனைச் சங்கத்திற்கும் அபயமிடுதல் கூடாதது என்று கூறப்பட்டது. சபைக்குக் கிறிஸ்துவோடும் பரிசுத்த ஆவியானவரோடுமுள்ள உறவும் மன்றத்தின் ஒரு பொருளாயிருந்தது. ஆனால் சபையின் தன்மை அமைப்பு ஆகியவற்றிற்குக் கவனம் செலுத்தப்படவில்லை. ஆனால் 2-ஆம் வத்திக்கன் மன்றத்தில் சபைதான் ஆலோசனைக்குரிய முக்கிய விஷயமாயிருந்தது.

23-ஆம் யோவான் என்னும் போப்புவானவர் 2-ஆம் வத்திக்கான் ஆலோசனை மன்றத்தின் முதல் கூட்டத்தொடர்வை 1962 அக்டோபர் 11-இல் ஆரம்பித்தார். 9 மாதத்துக்குள் அவர் மரிக்கவே அவருக்குப்பின் பதவிவகித்த 6-ஆம் பவுல் என்னும் போப்புவானவர். (Pope Paul VI) இரண்டாம் கூட்டத் தொடர்வை 1963 செப்டம்பர் மாதம் ஆரம்பித்தார்.

இம்மன்றத்தின் சபையைப் பற்றிய ஆலோசனைகள் நடுமையம் பெற்றது. சபை கடவுளின் ஜனம். கடவுளின் மக்களாக மறுபடியும் பிறந்த அவர்கள் தாங்கள் அடைந்த விசுவாசத்தைச் சபையின்மூலம் அறிக்கையிடவேண்டும். எல்லா மனிதரும் கடவுளின் மக்களைச்சேர அழைக்கப்படுகிறார்கள். உலகம் முழுவதிலும் ஒவ்வொரு ஜாதியிலுமிருந்தும் சேர்க்கப்படும் ஒரே ஜனமாக சபை விளங்குகிறது. பிரத்தியேகமான சபைகள் தத்தம் பாரம்பரியங்களை வைத்துக்கொண்டாலும் அவை பேதுருவின் வரிசையின் முக்கியத்தைக் குறைத்துவிடவில்லை. எனவே கத்தோலிக்க

சபைக்கு வெளியே இருக்கிறவர்களும் பரிசுத்த ஆவியானவரால் கத்தோலிக்க சபையோடு சேர்ந்தவர்கள். ஏனெனில் அவர்களுக்கும் வரங்களும் கிருபைகளும் பரிசுத்தமாக்கப்படுதலும் அருளப் படுகின்றன.

கத்தோலிக்க சபை பிரிந்துபோனவர்களை அன்புடனும் கண்ணியத்துடனும் சகோதரராக ஏற்றுக்கொள்ளுகிறது. பிரிவினைக்கு இருசாராரும் காரணரே. விசுவாசத்தினால் நீதிமான்களாக்கப்பட்டு கிறிஸ்துவுக்குள்ளாக ஞானஸ்நானம் பண்ணப்பட்டவர்கள் கிறிஸ்தவர்களாகவும் சகோதரர்களாகவும் கத்தோலிக்க சபையால் எண்ணப்பட உரிமையுள்ளவர்களாயிருக்கின்றனர். எனினும் அவர்கள் இயேசுகிறிஸ்து கத்தோலிக்க சபையின் மூலம் அருளும் ஒருமைப்பாட்டினால் ஆசீர்வதிக்கப்படவில்லை. ஏனெனில் கத்தோலிக்க சபையின் மூலமாகவே முழுமையான மீட்புக்குரிய எத்தனங்களைப் பெற்றுக்கொள்ள முடியும்.

தற்காலத்தில் உலகின் பல பாகங்களில் பரிசுத்த ஆவியானவரின் கிருபையின் தூண்டுதலினால் ஜெபத்தின் மூலமாகவும் வார்த்தையின் மூலமாகவும் செயலின் மூலமாகவும் இயேசு கிறிஸ்து விரும்பும் ஒருமைப்பாட்டின் பூரணத்தை அடைய மிகுதியான முயற்சிகள் எடுக்கப்படுகின்றன. எனவே, கத்தோலிக்க விசுவாசிகள் காலத்தின் அறிகுறிகளை உணர்ந்து ஒருமைப்பாட்டு வேலையில் திறமையுடன் பங்குபெற இப்புனித மன்றம் ஆலோசனை கூறுகிறது.

விசுவாசிகளானாலும், குருக்களானாலும் அனைவரும் ஒருமைப்பாட்டை செயலாற்ற, கிறிஸ்தவ தினசரி வாழ்க்கையிலும், இறையியல் கருத்துக்களைப் பகிர்ந்துகொள்வதிலும், ஆராய்ச்சிகளிலும் முயற்சித்தல் வேண்டும்.

சபையும் பூமியிலுள்ள ஒரு நிறுவனம் என்னும் அளவில் சீர்திருத்தப்படவேண்டும். கிறிஸ்து அதற்குச் சபையை அழைக்

கிறார். ஆகவே சபைக்கட்டுப்பாட்டிலோ, கோட்பாட்டிலோ, (ஒப்பிக்கப்பட்ட விசுவாசத்திலல்ல) குறைபாடுகள் காலத்துக் கேற்றவாறு வெளிப்படுத்தப்பட்டால், அவை ஏற்ற தருணத்தில் சரிப்படுத்தப்படவேண்டும். குறிப்பாக குருத்துவ பணி புரிப வர்கள் சுயவெறுப்புள்ளவர்களாயும், மனத்தாழ்மையுள்ளவர்களா யும், பிறருக்குச் சேவைபுரிவதில் சாந்தமுள்ளவர்களாயும் சகோ அன்புடையவர்களாயுமிருக்க தூய ஆவியானவரின் கிருபைக் வேண்டிக்கொள்ள வேண்டும்.

நமது மீட்பர் தாமே, 'அவர்களெல்லாரும் ஒன்ருயிருக்கவும்' (யோ. 17:21) ஜெபித்ததுபோல கத்தோலிக்கர் சபையின் ஒரு மைப்பாட்டுக்காக அந்த ஜெபத்தில் அடிக்கடி சேர்ந்துகொள் வது வழக்கம். விசேஷித்த சூழ்நிலைகளில், அதாவது, ஒருமைப் பாட்டுக்கான ஜெபக்கூட்டங்களிலோ, அனைத்துலக கூட்டங் களிலோ கத்தோலிக்கர் பிரிந்துபோன சகோதரரோடு ஜெபத்தில் கலந்துகொள்வது அனுமதிக்கப்படுவதுமட்டுமின்றி விரும்பப் படத்தக்கதுமாகும்.

மேலும், இறையியல் ஆராய்ச்சிகளில் பங்குபெற கத்தோ லிக்கர் அவர்களின் பிரச்சினைகளையும் கோட்பாடுகளையும் அறிந் திருத்தல் வேண்டும். மற்றவர்களோடு ஒத்துழைப்பைக் காட்டு வதால் கிறிஸ்தவ ஒருமைப்பாட்டுக்குள்ள பாதை தெளிவடை யும்.

வத்திக்கான் மன்றத்தின் இத்தகைய எண்ணங்கள் கத் தோலிக்க நிலையிலுள்ள மாறுதலைத் தெளிவாகக் காட்டுகின்றன. 2-ாம் வத்திக்கான் மன்றத்திற்கு 50 ஆண்டுகளுக்கு முன்னரே புராட்டஸ்தாந்து சபைகளில் அனைத்துலக ஒருமைப்பாட்டுணர்ச்சி உண்டானது. எனினும், வத்திக்கான் மன்றம் புதிய நம்பிக்கை யைப் பிறப்பித்துள்ளது.

உரோமைச் சபையில் சேராத கிறிஸ்தவர்களைப்பற்றி இம் மன்றத்து நடபடிகளில் வெளிப்படுத்தப்பட்டுள்ள மதிப்பும் அன் பும் வியக்கத்தக்கது. பிரிந்துபோனவர்கள் மீண்டும் மீண்டும் உரோமைச்சபைக்குள் வருவதே ஒருமைப்பாட்டுக்குத் தேவை யானதென்று வற்புறுத்தாமல் கிறிஸ்துவோடு ஒருமைப்படு வதையே இம்மன்றத்தின் செய்தி வற்புறுத்துகின்றது. இது வருங்காலத்தில் அரிய காரியங்களை எதிர்பார்க்க ஏவும் ஒன்று கும். உரோமன் கத்தோலிக்கருக்கும், உரோமன் கத்தோலிக்க ரல்லாத கிறிஸ்தவர்களுக்குமிடையே பேச்சுவார்த்தைக்கு வாசல் **1948-**இல் அடைபட்டதுபோல் காட்சியளித்தது. ஆனால் இன்று வாசல் விரிவாய்த் திறந்து வைக்கப்பட்டிருக்கிறது.

வருங்காலத்தைப்பற்றி நாம் திட்டவட்டமாக எதையும் முன்னுரைக்க இயலாது. எனினும் உரோமன் கத்தோலிக்க சபையும், உரோமன் கத்தோலிக்க சபையல்லாத சபைகளும் இனி கிறிஸ்தவ கூட்டுறவு எண்ணத்துடன் செயல்பட்டு வாழு மென்று நம்ப இடமுண்டு. இவ்வித மகிழ்ச்சிக்குரிய எதிர் நோக்கு உண்டாகக் காரணமாயிருந்த 2-ஆம் வத்திக்கான் மன்றத் திற்கு கத்தோலிக்க சபையும் புராட்டஸ்தாந்து சபையும் என் றும் கடமைப்பட்டுள்ளன. எனவே, 20-ஆம் நூற்றாண்டு **'சபை யின் நூற்றாண்டு'** என்று கூறப்படுவதுமின்றி **'அனைத் துலக ஒருமைப்பாட்டு உணர்ச்சியின் நூற்றாண்டு'** என்றும் எண்ணப்படுவது சாலவும் பொருத்தமாகும்.

1969

திருப்பணிவிடையாளர் பாடப்புத்தகங்கள்

| | | | |
|---|---|---|---|
| 1 | சில சங்கீதங்கள் | — | C. J. தானியேல் |
| 2 | கலாத்தியர் நிருபம் | — | S. தானியேல் ஆபிரகாம் |
| 3 | குழந்தைகள் ஞானஸ்நானம் | — | Y. சாமுவேல் |
| 4 | திருச்சபை வரலாறு 1517-இக்காலம் வரை | — | J. P. அலெக்சாந்தர் |

# CHURCH HISTORY

## A. D. 1517 TO DATE

*by*

**The Rev. J. P. Alexander,** M. A., B. D..
Lecturer, Tamilnad Theological College,
TIRUMARAIYUR.

*Copies available from:*

**The Diocesan Office, Tirunelveli-2**
**The Diocesan Book Depot, Tirunelveli-2**
**C. L. S., P. B. 501, Madras-3**
**The Editor, C. S. I. Theological Series, Tirumaraiyur.**

Price Rs. 1-25